


# வைரமூக்குத்தி

லக்ஷ்மி

IL
CTION
KSHMI

# வைர மூக்குத்தி

## 1

**அ**ன்று ஞாயிற்றுக்கிழமை. அவர்கள் எல்லோருக்கும் ஓய்வுநாள். இரவு முழுவதும் பன்னீர் தெளித்தாற் போல பெய்து கொண்டிருந்த மழை உடலுக்கும் உள்ளத்திற்கும் மிகவும் இதமாக இருக்கவே சாம்பவி நன்றாகத் தூங்கி விட்டிருந்தாள். லேசாக வீசிய காற்று ஜன்னல் வழியே வாரி இறைத்த மழைத்துளிகள் முகத்தில் பட்டபோது அம்மா வின் பட்டு விரல்கள் வருடுவது போன்ற இன்ப உணர்வு விழிப்பேற்பட்டுவிட்டது. இடது கன்னத்து மீது கை அசைப்பில் பட்டபோது அங்கே இன்னமும் வலித்தது. உடனே அந்த நினைப்பு நெஞ்சை நெருட, ஆத்திரத்தில் உள்ளம் குமுற, கண் இமைகளை சூடான கண்ணீர் நனைக்க, அவள் படுக்கை மீது வெறுப்புடன் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

ஆமாம் இப்போது நேரம் என்ன?

அவளது கேள்விக்குப் பதிலளிப்பதுபோல முன் அறைக் கடிகாரம் ஆறுமுறை அடித்து ஓய்ந்தது. தொடர்ந்து அதை உறுதிப்படுத்துவதுபோல் பூஜையறையில் அம்மா ஏற்றி வைத்துக் கொண்டிருந்த 'ஊதுவத்திக்கத்தை' யின் நறுமணம் வீடு முழுவதும் பரவி அவள் முகத்திலும் வந்து மோதியது. மெல்ல கள்ளத்தனமாகக் கண்களைத் திறந்து எதிர் சுவரோர மாகக் கிடந்த கட்டில் பக்கம் பார்வையைத் துழாவினாள்.

விடிவிளக்கின் மெல்லிய ஒளியில் நளினியின் கட்டில் காலியாகக் கிடப்பது தெரிந்தது.

அக்கா நளினிக்குக் கடமை உணர்வு அதிகம். வெயில், மழை, இடி, மின்னல், வேலைநாள், ஓய்வுநாள் என்ற ஒன்றையும் பார்க்கவே மாட்டாள். தினசரி காலை ஐந்து மணிக்கே எழுந்து வீட்டில் எல்லோரும் குளிக்க பாய்லரைப் பற்ற வைத்து தண்ணீரைச் சூடாக்கித் தயாராக வைத்து விடுவாள். அம்மா குளித்ததும் நளினி பரபரப்பாகக் குளியலை முடித்து, வேறு உடுத்திக் கொண்டு சமையலறைக்கு விரைவாள். வீட்டில் உள்ள அனைவருக்கும் காலை காப்பி விநியோகம் அவளது நித்தியக் கடமை.

திறந்து கிடந்த ஜன்னல் வழியே படுக்கை மீது சாய்ந்தபடியே தோட்டத்தைப் பார்த்தாள் சாம்பவி. வேப்பங் கிளைகள் இடையே பட்டும் படாமலும் தெரிந்த கருமேகக்கூட்டம் மெல்லக் கரைந்து கீழ்வானம் வெளுத்துக் கொண்டு வருவது புலப்பட்டது. சன்னமாக இதுவரை தூவிக்கொண்டிருந்த மழைகூட சட்டென்று நின்று விட்டிருந்தது. தோட்டத்திலே பரவிக்கிடந்த குண்டு குழிகளில் மழைத் தண்ணீர் நிரம்பி வழிந்தோடிக் கொண்டிருந்தது. காற்றில் அசைந்த மரக்கிளைகளின் தண்ணீர்த் துளிகள் முத்துகள் போல் அவை மீது உதிர்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டு சோம்பலுடன் அவள் புரண்டாள். எழுந்து உள்ளே போக மனமே இல்லை.

மங்கள பவன்... பாட்டியின் பெயரை அந்த பங்களாவுக்குச் சூட்டிவிட்டுப் போயிருந்தார் தாத்தா. ஆனால், இப்போது அதற்கு ஊரார் வைத்த பெயர் வேப்பமர பங்களா! வேப்பமர வீடு என்பதற்குக்கூட லாயக்கற்ற ஒரு பழைய, சிதலமாகிவிட்ட கட்டடம் அது. அவர்களுக்குச் சொந்தமாக இருந்த பத்து கிரவுண்ட் பூமி, வீட்டின் இரு பக்கமும் ஒரு காலத்தில் பரவிக் கிடந்தது. அதை விற்றுத் தான் தமது மூத்த பெண்



சந்திராவின் கல்யாணத்தைத் தடபுடலாக நடத்தி விட்டிருந்தார் அப்பா ராமபத்திரன். அந்த இடத்தில் திடீரென்று சில மாதங்களில் லானத்தை நோக்கி நிமிர்ந்து எழுந்து விட்ட இரு பங்களாக்களின் இடையே அவர்கள் வீடு உண்மையில் ஒரு திருஷ்டிப் பரிகாரம்.

தன்னிச்சையாக வளர்ந்து வீட்டைச் சூழ்ந்து கொண்டிருந்த வேப்ப மரங்களை அம்மாதான் வெட்டக்கூடாது என்று தடுத்து விட்டிருந்தாள். தலையைப் பிரித்துக் கொண்டு பரவி நின்ற அந்த மரங்களால் கோடைக்காலத்தில் ஊட்டியும், கொடைக்கானலும் உள்ளே வந்துவிட்டதைப் போன்றதொரு குளிர்ச்சி, பக்கத்து பங்களாக்களைப் போல் படுக்கை அறைக்குள் எல்லாவற்றிலும் ஏ.சி. அமைத்துக்கொள்ள அவர்களால் முடியுமா?

சித்திரை மாதத் தொடக்கத்திலே குப்பென்று அம்மரங்கள் பூத்துக் குலுக்கும். ஜன்னல் வழியே இனிமையாக வீசும் அந்த மெல்லிய மணம் அவளுக்கு மிகவும்பிடிக்கும். கீழே பாய்களை விரித்து உதிரும் பூக்களைத் திரட்டிக் காய வைத்து காலி தகர டப்பாக்களில் அவள் அடைத்து வைப்பாள். இருபது கிலோ எடைதேறும் வேப்பம்பூவை அப்பளக்கடையில் விலைக்கு போட்டு விட்டு, பதிலுக்கு அப்பளக் கட்டுகள் வாங்கி குடும்பத்திற்கு உதவலாம் என்று சிக்கன முறைகளைப் பற்றி அவள் சிந்திக்குமுன் அம்மா காமாக்ஷி அந்த டப்பாக்களைத் தன் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வாரி வழங்கி விடுவாள். அவள் கர்ணபரம்பரை! இருப்பதை அள்ளி அள்ளிக் கொடுத்துவிட்டு சட்டி காலியானதும் இன்னும் கொடுக்க ஒன்றுமில்லையே என்று திகைப்போடு நிற்கும் ஒரு விசித்திரப் பிறவி- இந்தக் காலத்துக்கு ஒவ்வாத ஆசாமி.

"ஜிக்கி!... ஜிக்கி!"... ஸ்பானிஷ் ஸ்டைலில் நின்ற அந்த பக்கத்து பங்களாக்காரரின் செல்லப் பெண் கீச்சுக்குரலில்

கத்தினாள். காதைக் கிழித்தது அவள் கூச்சல். நிமிர்ந்து எழுந்து உட்காந்து ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தாள். அவர்கள் வீட்டு இடைச்சுவர் மேலே நீட்டி நின்ற போகன் வில்லாவை அவர்கள் வீட்டுத் தோட்டக்காரன் அழகாக வெட்டி விட்டுப் போயிருந்தான், அதற்குப் பின்னால் பச்சைப் பாய் போல பரவிக்கிடந்த புல்தரையை அவளால் நன்கு பார்க்க முடிந்தது. அடுத்த வீட்டுப் பெண்ணுக்கும் ஏறக்குறைய அவள் வயதுதான் இருக்கும். ஸ்லாக் ஸூட்டில் நெடிய உயரமாக அழகாகத்தானிருந்தாள். சீராக ஒரே அளவில் வெட்டப்பட்ட கூந்தல் முதுகில் புரள புல்தரை மீது பந்தாக எழும்பிக் குதித்த வெள்ளை பாம்ரேனியனை அவள் ஓடிப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

ஜிக்கி! நீ ரொம்ப பொல்லாதவள்... செல்லமாக அதட்டிக் கொண்டு தாவி அதைப்பிடித்து மார்புடன் அணைத்துக்கொண்டு அவர்கள் வீட்டுக்குத் திரும்பினாள். சட்டென்று சாம்பவி பெருமூச்செறிந்தாள்.

காலையில் ஸ்லாக் ஸூட்-பகலில் மாக்ஸி- மாலையில் புடவை என்று வேளைக்கு ஒரு அலங்காரத்தில் அடுத்த வீட்டுப் பெண் தோட்டத்து புல்தரையில் மாடல் போல் வளைய வந்தாள். அடுத்த வீட்டுக்காரர் திடீர் பணக்காரர். ஆனால் அவர்கள் குடும்பம்? பரம்பரையாக வசதியுடன் வாழ்ந்தவர்கள். இப்போது பெருங்காயப் பாண்டமாக வாழ்கிறவர்கள். அவர்கள் மட்டும் அதே வசதிகளுடன் இருந்தால்... அவளுக்கும் வேளைக்கு ஒரு தினுசாக உடுத்தி மினுக்கத் தெரியாதா?... எரிச்சலுடன் மறுபடியும் படுக்கையில் சாய்ந்து கொண்டாள் சாம்பவி.

சமையலறையிலிருந்து பிரஷர் குக்கர் சீறிக் கொண்டிருந்தது. நளினி அம்மாவுக்கு உதவி செய்ய ஆரம்பித்து விட்டாள் என்பதின் அறிவிப்பு அது. குளியலறைக்குள் அப்பா பல்



துலக்கும் ஓங்கார, ரீங்கார சப்தம் கேட்டது. கேட்கப் பிடிக்காதவள் போல் போர்வையை இழுத்து காதுவரை போர்த்திக் கொண்டு- சுவர்ப் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

வீட்டில் இரண்டு குளியலறைகள் இருந்தன. ஆனால், ஒன்றின் குழாயில் கூட தண்ணீர் ஒழுங்காக வருவதில்லை. அதனால் விடிந்ததும் விடியாததுமாக உபயோகத்திலிருந்த குளியலறை முன் ஒரு பெரிய க்யூ. ஒவ்வொரு மாதமும் அப்பா குழாயைப் பழுது பார்த்து ஒழுங்கு படுத்துகிறேன் என்று வாய் நிறைய சொல்லிக் கொண்டு தான் இருந்தார். அதில் கையை வைத்தால் முன்னூறு ரூபாயாவது ஆகும் என்ற நடுக்கம் அவருக்கு. குழாய் மட்டுமா அந்த வீட்டில் பழுதடைந்திருந்தது? வீடு முழுவதுமே பாழடைந்து கிடந்தது.

வலதுபுறத்துச் சுவரில் பெரிய பாசிப்படலம். அத்துடன் ஒரு பெரிய வெடிப்பு. உள்சுவர் முழுவதிலும் இங்கு மங்கும் வண்ணப்பூச்சு உதிர்ந்து, செங்கற்கள் கோரமாக பல்லைக் காட்டின. போர்ட்டிகோவின் உச்சியிலிருந்து மைசூர்பாகு வில்லைகள் போல சிமெண்ட்பூச்சு பெயர்ந்து தானே விழுந்து கொண்டிருந்தது. நல்லவேளை, அந்த போர்ட்டிகோவில் நிற்க அவர்கள் வீட்டில் கார் கிடையாது. ஜன்னல் கண்ணாடிகள் பல உடைந்து விட்டிருந்தன. அதனால் வெளியே கொட்டிய மழை, பாதி வீட்டிற்குள் விழுந்து தொல்லை கொடுத்தது. தோட்டத்து நடுவில் குழல் ஊதிக் கொண்டு நின்ற கண்ணன் சிலையைச் சுற்றிலும் பெரும்புதர். வண்ணம் அழிந்து நின்ற கண்ணன் மீது பறவைகள் எச்சம் குவிந்து கிடந்தது. எப்பவோ வருஷத்திற்கு ஒரு முறை தற்காலிக தோட்டக்காரன் ஒருவனைப் பிடித்து ஏவி அம்மா தோட்டத்தைச் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்வாள். தோட்டத்தில் பூச்செடிகள் இல்லாவிட்டாலும் ஒரு சில நாட்கள் புதர்களாவது

இல்லாமலிருக்கும் கொஞ்ச நாளில் மறுபடியும்- புல்லும் புதருமாக தோட்டம் பழைய நிலைக்கு வந்து விடும்.

சுராஜ் கதவு துருப்பிடித்து- கீல்கள் கழன்று தொங்கிக் கொண்டிருந்தன. அப்பா ஆபீசுக்குப் போய்வர உபயோகித்த அந்த ஸ்கூட்டரையோ, தம்பி கௌசிக்கின் சைக்கிளையோ எவனாவது திருடிக் கொண்டும் போய்விடப் போகிறானே என்று சாம்பவிக்கு தினமும் ஒரு திகில் தான். அதை ஒழுங்கு படுத்தக்கூட அவர்கள் பொருளாதாரம் இடம் கொடுக்க வில்லை.

வீட்டின் மீது கழுத்து மட்டும் கடன் வாங்கி இரண்டாவது பெண் கிரிஜாவின் திருமணத்தை நடத்தி விட்டிருந்தார். அப்பா. கடன் பணத்தின் வட்டியை மாதாமாதம் கட்டி முடிப்பதற்கே அவர் திணறிக் கொண்டிருந்த பயங்கர நிலை. இந்த அழகில் அத்தை சரோஜா தன் ஆறாவது பிரசவத்திற்கு அண்ணன் வீட்டிற்கு வந்து காம்ப் போட்டுவிட்டிருந்தாள். பாவம் நளினி அக்கா! பாடுபட்டு பல மாதமாக அவள் சேமித்து வைத்திருந்த இரண்டாயிரம் ரூபாய்களும் சரோஜா அத்தையின் பிரசவ செலவில் கரைந்து போயின. தீபாவளி பண்டிகையையும் அண்ணன் வீட்டிலேயே கழிக்க உத்தேசித்த சரோஜா, தன் அருமை கணவனையும் அங்குவந்து சேரும் படி அழைத்துக் கடிதம் போட்டு விட்டிருந்தாள்.

வீட்டிலிருந்த தமது இரு பெண்களுக்கும் குறைந்த விலையில் ஒரு வாயில் சேலை கூட வாங்கித் தர முடியாது தவித்த அப்பா, தீபாவளி பண்டிகைக்கு சகோதரிக்கு எழு நூறு ரூபாயில் ஒரு பட்டுச் சேலை -மாப்பிள்ளைக்கு வேட்டி, சட்டையெல்லாம் வாங்கி ஜமாய்த்து விட்டிருந்தார். நளினி அக்கா இளம்பிள்ளைவாதத்தில் ஏற்கெனவே இடதுகால் ஊனமாகி விட்டவள்.



காலை இழுத்து சாய்த்துக்கொண்டு மிகவும் சிரமத்துடன் நடக்கிறவள். அவளுடைய உழைப்பின் ஊதியத்தை அப்பா தன் சகோதரிக்காக ஊதித் தீர்த்து விட்டதை எண்ணி சாம்பவி யின் நெஞ்சம் நெருப்பாக எரிந்தது.

பாசமலர் படத்திலே வரும் அண்ணனைப் போல நினைப்பு. படம் பார்த்த போது உருக்கமாகத் தானிருந்தது. சாம்பவி அதை சமீபத்தில் ஒரு கொட்டகையில் தோழி மல்லிகாவுடன் பார்த்து விட்டு ஒரு மூச்சு அழுது விட்டு வந்தாள். அதையே அப்பா வீட்டில் நடிக்கத்தொடங்கினால் பொருத்தமாகவா இருக்கு? சினிமா வேறு -வாழ்க்கை வேறு இல்லையா?

மாடிப் படுக்கையறையிலிருந்து பச்சைக் குழந்தை அழும் குரல் கேட்டது. அந்த வீட்டில் நான்கு படுக்கை அறைகள். மாடியில் இரண்டு- கீழே இரண்டு. மாடியில் ஒரு அறையில் அத்தை கணவனுடன் தங்கியிருந்தாள். மற்றொன்று கௌசிக் படிக்கவும்- தூங்கவும் உபயோகித்தான். கீழே அவளும் நளினியும் எதிர்ப்பக்கத்திலிருந்த பெரிய அறையை உபயோகித் தனர். மற்றொன்று அவர்களது பெற்றோர்களின் படுக்கை அறை.

குழந்தை 'குவா குவா' என்று கூவி அழுவதைக் கேட்டால் சாம்பவி மெய் சிலிர்த்துப் போவது வழக்கம். ஏதோ இனிமையான சங்கீதம் கேட்டுவிட்ட தொரு இன்ப உணர்வு. இப்போது அவளுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. ஐந்து பெண்ணிற்குப் பின் அருமையாகப் பிறந்துள்ள ஆண் குழந்தைக்கு அண்ணனிடம் அத்தை சீர்வரிசைகள் வேறு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அந்த சங்கதியைக் கேள்விப் பட்ட நாளிலிருந்து அந்தக் குழந்தையின் கூக்குரல் அவள் காதைக்கிழித்தது. 'கொல்-கொல்' லென்று தொடர்ந்து மேல் அறையிலிருந்து இருமல் சப்தம். எட்டு வருஷத்திற்கு முன்னர் தாத்தா, 'காசி யாத்திரை போக வேண்டாம், என் கன்னிகையைத்

தந்து உன்னை கிரகஸ்தனாக்குகிறேன்' எனக்கெஞ்சி வீட்டிற்குள் அழைத்து வந்திருந்தாரே அந்த மாப்பிள்ளை, அதான் அத்திம் பேர் நீலகண்டன். அவருக்கு இரண்டு நாளாக ஜலதோஷம், இருமல் அவரைக் கவனித்து சிகிச்சை செய்ய டாக்டர் இரண்டு தடவை வந்து போய் விட்டார். அந்த பில் வேறு அப்பா தலையில். பற்களை அழுத்திக் கடித்துக்கொண்டு காலடியில் கிடந்த தலையணையைக் கோபத்துடன் உதைத்துக் கீழே தள்ளினாள் சாம்பவி..

'காமாக்ஷி... காமகோடி பீடவாஸினி.. மாமலை..' நடையில் அம்மா தனக்குள்ளே பாடிக்கொண்டு வருவது கேட்டது. குற்ற உணர்வில் சாம்பவியின் நெஞ்சு படபடக்கத் தொடங் கியது.

அம்மாவுக்கு உதவவேண்டும் என்கிற எண்ணமில்லாமல் அவள் இன்னமும் படுத்துக்கிடக்கிறாளே?

வாயில்படியருகில் மெல்லியதாக ஒலித்த காலடி ஓசையும், தொடர்ந்து குப்பென்று வீசிய மல்லிகை மலரின் மணமும் அம்மாவின் வருகையை உணர்த்தவே, அவள் கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டு தூங்குகிற பாவனையில் அசையாது கிடந்தாள்.

'சாம்பா குட்டி!' அம்மா அன்போடு அப்படித்தான் அவளை சில சமயங்களில் கொஞ்சுவது வழக்கம்.

"இன்னுமா தூங்குறே கண்ணா! எழுந்திரு.. இன்னிக்கு அத்தை ஊருக்குப் போகப்போகிறாள் இல்லையா! அதனாலே சீக்கிரம் எழுந்து எல்லாம் செய்ய வேண்டாமா?" கொஞ்சிக் கொண்டே படுக்கை விளிம்பிலே அம்மா உட்கார்ந்து கொண்டாள்.

காலை வேளை பூஜையை முடித்துக் கொண்டபின் அம்மா ஆசார அனுஷ்டானங்களை அதிகம் கவனிப்பதில்லை. அந்தக் குடும்பத்தில் கட்டுப்படியாகாத விஷயம் இது.



ஞாயிற்றுக்கிழமைதான் அம்மாவுக்கும் வேலையிலிருந்து ஓய்வு நாள். அன்றைக்குத் தான் எண்ணெய் தேய்த்து ஸ்நானம். ஈரத்தலையைச் சரிவரத் துவட்ட நேரமில்லை போலும். காதோரத்திலிருந்த மயிர்க்கற்றையிலிருந்து இரண்டு சொட்டு நீர் சாம்பவியின் மேல் சில்லென்று விழுந்தது.

"எழுந்திரும்மா சம்பா குட்டி" அம்மா, முகத்தை அருகே கொண்டு வந்து காதோடு குழைந்தாள். அவள் பூசிக் கொண்டிருந்த கஸ்தூரி மஞ்சளின் வாசனை எத்தனை ரம்யமாக இருந்தது? 'ஊகும்...' போலி கோபத்துடன் முனகிக்கொண்டு கையை நீட்டி அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டபோது அவள் தலை நிறைய சூடிக்கொண்டிருந்த மல்லிகைப் பூ கையில் பட்டது. வாசனை மூக்கைத் தூக்கியது. கண்களை மெல்லத் திறந்தாள். அம்மாவின் பட்டு முகம்... மஞ்சள் பூச்சிலே தங்கமாக மின்ன நெற்றியிலே குங்குமம் பளிச்சிட, அந்த அழகான கூர் மூக்கிலே அவள் அணிந்திருந்த வைர மூக்குத்தியின் நீல ஒளி கன்னங்களில் டால் அடிக்க, பூஜை அறையிலிருந்த அந்த சாக்ஷாத் காமாக்ஷியைப்போல் எத்தனை அழகாக இருந்தாள் அம்மா?

"அம்மா! நீங்க இந்த வயசிலும் ரொம்ப அழகாக இருக் கிறீங்க. உங்க அழகிலே பாதியைக்கூட நீங்க எங்களுக்கெல் லாம் கொடுக்கலை. ரொம்ப கருமி நீங்க... கொஞ்சிக் கொண்டே முகத்தைத் தாயின் மடிமேல் பதித்துக் கொண்டாள். எத்தனை சுகம்? என்ன இன்பம்! இருபது வயதைத் தாண்டிய பெண் என்பதுகூட தாயின் மடிமேல் படுக்கும்போது மறந்து போகிறதே... என்ன விந்தை?"

டில்லிக்கு ராஜாவானாலும் தல்லிக்குப் பிள்ளைன்னு இதுக்குத்தான் சொல்கிறார்களா?

'எழுந்திரும்மா விளையாட்டு போதும்...' அவளது தலையை அம்மா நிமிர்த்தியபோது சாம்பவி துள்ளிக்கொண்டு எழுந்து

விட்டாள். "அம்மாடி... வலிக்கிறது..." இடது கன்னத்தைத் தடவிக்கொண்டு தாயைப் பார்த்தாள்.

சாம்பவியின் இடது கன்னம் லேசாக வீங்கியிருந்தது. காதோரத்திலே சிறிது சிவந்தும் காணப்பட்டது. காமாக்ஷி கவனித்தாள்.

ஆனாலும் அப்பாவுக்கு இத்தனை கோபம் ஆகாது- மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

சாம்பவி மௌனமாக தன்னை வெறிப்பதைக் கண்ணுற்ற வள் சட்டென்று பேச்சை மாற்றினாள்.

"முன்போல வசதி இல்லாததால் அப்பா என் பேச்சுக்குக் கட்டுப்பட்டு சீர் வரிசைகளை ரொம்ப குறைச்சுக்க ஒப்புக் கொண்டு விட்டார். அத்தை குழந்தைக்கு ஒரு ஜோடி தங்கக் காப்பு, மெல்லிசா ஒரு தங்க அரஞாண். ஒரு புலிநக டாலர் கோத்த செயின்... மூணும் போட்டு அனுப்புகிறதாக ஏற்பாடு!"

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்த சாம்பவி, அம்மாவின் கழுத்தைப் பார்த்தாள். வயிற்றிலே நெருப்பைக் கொட்டியது போன்று எரிச்சல் உணர்வு. அம்மா கழுத்தில் கடைசியாக மிஞ்சிக் கிடந்த அந்த ஒற்றைவடத் தங்கச் சங்கலியைக் காணவில்லை. அவள் கேட்க விரும்பவில்லை. புரிந்துகொண்டு விட்டாள். அத்தை ஐந்து பெண்களுக்குப் பின்னர் ஆறாவதாக அருமையாக ஆண் மகனைப் பெற்றுவிட்டதற்காக, அவளை சீறும் சிறப்புமாக ஊருக்கு அனுப்பி வைக்க அம்மாவின் தங்கச்செயின் விலைக்குப் போய்விட்டிருந்தது.

பொங்கிவந்த ஆத்திரத்தையும் அழுகையையும் விழுங்கிக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்திருந்தாள்.

"உனக்குப் பிடிச்ச டிபன் இன்னிக்கு வெந்தயத் தோசை தொட்டுக்கொள்ள வெங்காயப் புளி..." அம்மா அவளைத் தாஜா பண்ணினாள்.



நாற்காலி கையில் கிடந்த துண்டை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு குளியலறைக்கு விரைய ஆயத்தமானாள் சாம்பவி.

அவளால் பேசாதிருக்க முடியவில்லை.

"அம்மா! இந்த சம்பிரதாயங்களை நான் வெறுக்கிறேன். அதை ஒரு சாக்காகப் பிடித்துக்கொண்டு பிறந்த வீட்டின் சிரமம் தெரியாது சுரண்ட முயற்சிக்கும் பெண்களைக் கட்டோடு நான் வெறுக்கிறேன். சில சமயங்களில் ஏன்தான் இந்த ஜாதியில் பிறந்தேனோன்னு என்னையே நான் வெறுத்துக் கொள்கிறேன்!" பற்களை ஆத்திரத்துடன் கடித்தாள்.

"என் வயிற்றில் வந்து பிறந்ததைப் பத்தி நினைச்சா கூட உனக்கு வெறுப்பாகத்தானிருக்கும். இல்லையா?" அம்மா விரக்தியும் வேதனையும் நிறைந்த குரலில் கேட்டாள். அவளது கண்கள் நீரில் பளபளத்தன.

வெளியே செல்லத் திரும்பிய சாம்பவி பரபரப்புடன் அம்மாவிடம் ஓடிவந்து அவள் கழுத்தை இறுக்கமாகக் கட்டிக் கொண்டாள்.

"என்னம்மா இப்படி ஒரு அசட்டுக் கேள்வி? நாங்க எல்லோரும் உங்கமேலே உசிரையே வச்சிண்டு இருக்கோம்னு உங்களுக்கே தெரியும். என்னைப் பொறுத்தவரை... அடுத் தடுத்த ஜன்மத்தில்கூட உங்க பெண்ணாகவே பிறக்கணும்னு ஆசை அம்மா"- பேச முடியாது திணறிய சாம்பவி, இதுவரை அடக்கிவைத்திருந்த உணர்வுகளை யெல்லாம் இப்போது கண்ணீராகக் கொட்டினாள்.

## 2

அன்று காலை, டைப்ரைட்டரில் காகிதத்தைச் சொருகி விட்டு பைலைத் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள் சாம்பவி. பூந்தமல்லியிலிருந்த டாக்டர் லலிதாவின் தனியார் மருத்துவமனையில் அவள் ஒரு டைப்பிஸ்ட். திங்கட்கிழமை களில் அவளுக்கு மூச்சுவிடக்கூட நேரம் இருக்காது. ஆபீசு அறைக்கு சற்று அருகிலிருந்த பரிசோதனைச் சாலையிலிருந்து டைப் அடிக்க வேலை வந்து கொண்டேயிருக்கும். சனிக் கிழமையன்று எடுத்து ரத்தப் பரிசோதனை விபரம்- எக்ஸ்ரே பற்றிய குறிப்புகள்- வேறு ஒரு வைத்தியர் அனுப்பிய கேஸ் களைப் பற்றிய விபரமான கடிதங்கள், டைப் அடித்து தபாலுக்கு அனுப்ப வேண்டியவை பைல்களை நிறைத்துக் கொண்டிருந்தன.

சாம்பவி வேலையில் சுறுசுறுப்பானவள். பொழுதை வீணாக்க விரும்பாது காரியத்திலேயே கருத்தாக இருப்பவள் என்று அங்கே அவளுக்கு நல்ல பெயர். டாக்டர் அம்மாவுக்கு அவளை மிகவும் பிடிக்கும். அவள் வேலை செய்துகொண் டிருந்த அந்த அறையில் அவளைப்போல இன்னும் பெண்களும் ஒரு தலைமைக் கணக்கரும் இருந்தனர்.

தலைமைக் கணக்கர் சிடுமூச்சி; பேசமாட்டார். கோலிக் குண்டு கண்ணாடி வழியே அடிக்கொரு தடவை சுட்டுவிடுவது போல் பார்ப்பார். அவளுக்குப் பக்கத்து மேஜையருகே அமர்ந் திருக்கும் ரஞ்சிதத்திற்குக் காது கொஞ்சம் செவிடு. இதனால் அவள் அதிகம் பேச்சுக் கொடுக்க மாட்டாள். எதிரே உட் கார்ந்திருக்கும் மல்லிகா பெரிய வாயாடி. எல்லோருடையதை யும் சேர்த்துவைத்து வேலை நடுவே சளசளவென்று ஏதாவது கதை அளந்து கொண்டேயிருப்பாள். தலைமைக் கணக்கரைப் பற்றி அவளுக்குப் பயமே கிடையாது. கிழட்டு சனியன்,



ஏன் இப்படி முறைக்கிறது என்று முணு முணுப்பாள். அவர் அதட்டினால் சிரித்து மழுப்பிவிடுவாள், சாமர்த்தியக்காரி.

வேலையைத் துவங்குமுன் மல்லிகா கைப்பையைத் திறந்தாள். பவுடர் காம்பாக்டைத் திறந்து கண்ணாடியில் பார்த்தபடி உதட்டுச் சாயத்தைச் சரிபடுத்திக் கொண்டாள். "என்ன? ஒரு மாதிரி இருக்கியே? உடம்பு சரியில்லையா?" வம்பு விசாரித்தபடி காம்பாக்டை பைக்குள் போட்டு மூடி விட்டு சாம்பவியைப் பார்த்தாள்.

மல்லிகா அவளுக்கு நெருங்கிய தோழிதான். இருந்தாலும் சில சமயங்களில் சாம்பவிக்கு வீட்டு விஷயங்களை சட்டென்று அவளிடம் சொல்லிக்கொள்ள பிடிப்பதில்லை.

"ஒண்ணுமில்லையே?... பைல்களை விரலால் புரட்டினாள்.

"உன் அத்தை பிரசவத்துக்கு வந்திருந்தாங்களே. ஊருக்குப் போய் விட்டாங்களா?"

"நேத்து போனாங்க..." சொல்லி முடிப்பதற்குள், அவள் மனக் கண்முன் கடந்த தினத்தின் நிகழ்ச்சிகள் நிழலாடின.

மூன்று மாத காலம் அண்ணன் வீட்டில் தங்கி சீராடி விட்டு அத்தை சரோஜா தன் கணவனுடன் அன்று காலை தான் ஊருக்குக் கிளம்பினாள்.

நீலகண்டன் இன்னும் இரண்டு நாட்கள்கூட தண்டச் சோறு சாப்பிட்டுக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டிருப்பான். அவன் தயார். ஆனால் ஏற்கெனவே அன்று நல்ல நாள், குழந்தையும் சரோஜாவும் ஊருக்குக் கிளம்ப உகந்த தினம் என்று வீட்டுப் புரோகிதர் குப்பு சாஸ்திரி நாளைக் குறித்துக் கொடுத்து விட்டுப் போயிருந்தார். அண்ணன் தங்கையை அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்து விட்டிருந்தார். அதற்கு மேல் தங்கினால் அவமானம் என்றவரை புரிந்து கொண்டு நீலகண்டன் கிளம்பி விட்டிருந்தான்.

பெட்டி, படுக்கை, கூடைகள், தகர டப்பாக்கள் எல்லா வற்றையும் சமையலறைக்கு முன்னிருந்த கூடத்தில் கொண்டு வைத்த போது பாராது போல் சாம்பவி கண்களை அங்கே ஓட விட்டாள்.

லட்டு, பர்பி, முறுக்கு, மிக்ஸர், அப்பளம், கருவடகம், ஊறுகாய், பருப்புப் பொடியிலிருந்து குழந்தைக்குக் கிலு கிலுப்பை- பால் புட்டி, பிளாஸ்டிக் தொட்டி சட்டைகள் இத்யாதி கூடம் நிரம்பி வழிய சாமான்களை அவர்கள் வீட்டிலிருந்து கொள்ளையடித்துக் கொண்டு புறப்பட்டிருந்தாள் அத்தை சரோஜா.

அவள் மட்டுமா?

ராமபத்திரனின் கல்யாணமான இரண்டு பெண்களும் சென்னையிலேதான் வசித்தனர். மூத்தவள் சந்திரா, பெரிய இடத்து மருமகள். சுபாவத்திலே கர்வி- பணக்கார வீட்டு மருமகள் என்ற தலைக்கனம் வேறு. சிதலமாகி விட்டிருக்கும் பிறந்த வீட்டுக்குள் அடிக்கடி காலை வைக்கக்கூட அவளுக்கு கூசும். அபூர்வமாகத் தேவைப்பட்டபோது மட்டுமே கணவ ருடன் தங்களது ஃபாரின் காரில் வந்து ஜம்பமாக இறங்கி ஒரு பத்து நிமிஷம் தலையைக் காட்டிவிட்டு போய்விடுவாள். பிறந்த வீட்டிலிருந்து தான் எதையும் எதிர் பார்க்கவில்லை என்று பெருமை பேசுகிறவள். அது போலவே பிறந்த வீட்டுக்கு வரும்பொழுது அம்மாவுக்கு ஒரு முழம் பூச்சரம் கூட வாங்கி வரமாட்டாள். அப்படி தாமரையிலைத் தண்ணீர் அவள்.

அத்தையை ஊருக்கு அனுப்பி வைக்க, அவள் தன் கணவனுடன் காலை எட்டு மணிக்கே ஆஜராகிவிட்டிருந்தாள்.

அடுத்தவள் கிரிஜா. அவள் போக்கே வேறு. அவள் வீச் செல்லாம் பிறந்த வீட்டவர்களிடந்தான். மாமியார், நாத்தனார் முன்னால் அவள் ஒரு பெட்டிப்பாம்பு. இத்தனைக்கும் அவள் எம்.எஸ்.சி பௌதீகத்திலே முதல் வகுப்பு, முறைப்படி



சங்கீதம் கற்றுக்கொண்டவள், நன்றாகப் பாடுவாள். கல்யாண மானதும் அவள் பாட்டு, வீட்டு பூஜை அறைக்குள் அடங்கிக் கொண்டு விட்டது. அவளது படிப்பு? சமையலறையில் தஞ்சமடைந்துவிட்டது. அவள் புக்ககத்தில் பெரிய குடும்பம். கணவன்- மாமியார்- மாமனார்- மைத்துனர்கள்- ஓரகத்திகள் என்று பெரிய கூட்டம். அத்தனை பேருக்கும் தினமும் வடித்துக்கொட்டி வீட்டை நிர்வகிக்க வேண்டியது அவள் வேலை.

அப்படி ஒரு தலை எழுத்து. ஹைதராபாத்திலிருக்கும் நாத்தார் மகளது பிரசவத்திற்கு உதவ சென்னையிலிருந்து ஓடுவாள். ஆனால் தாயார் காமாக்ஷி டைபாய்டு காய்ச்சலுடன் சாகப் பிழைக்க ஆஸ்பத்திரியில் கிடந்த போது, அவளை வந்து அடிக்கடி பார்க்கவோ ஒரு பத்துநாள் பிறந்த வீட்டில் தங்கி தங்கைகளுக்கு உதவி செய்யவோ அவளால் முடிய வில்லை. புக்ககத்தார் என்ன சொல்வார்களோ என்ற பயம். படித்திருந்தும் வாயில்லாப் பூச்சி. புக்ககத்தாரின் கொத்தடிமை, பாடத் தெரிந்த சமையற்காரி, இல்லை வேலைக்காரி. அக்கா கிரிஜாவைக் கண்டதுமே சாம்பவிக்குப் பற்றிக் கொண்டுதான் வந்தது. அத்தை பிரசவத்திற்கு அம்மா வேலையிலிருந்து லீவு எடுத்துக்கொண்டு வீட்டுக்கும், ஆஸ்பத்திரிக்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

ஒருநாள் கூட ஒப்புக்காகிலும் 'அம்மா நீங்க கவலைப் படாதீங்க. நான் அத்தைக்கு ஆஸ்பத்திரிக்கு சாப்பாடு எடுத்துப் போகிறேன்.' என்று சொன்னவள் இல்லை.

அவள் கணவன் சங்கரனைப்பற்றி சொல்லவே தேவை யில்லை. எதிர்பாராதவிதமாக சரோஜாவுக்குப் பிரசவ வேதனை நடு இரவில் துவங்கிவிட்டது. அவள் துடித்த துடிப்பைக் கண்டு வீட்டிலுள்ளவர்கள் பயந்து விட்டனர். பாவம் தம்பி கௌசிக் அந்த வேளையில் டாக்ஸியைத் தேடிக் கொண்டு

சைக்கிளில் அலைந்தான். டாக்ஸிக்காரர்கள் யாரும் அந்த வேளைக்கு வர மறுத்துவிட்டபோது, வெட்கத்தை விட்டு நண்பன் வீட்டு தொலைபேசியில் அத்திம்பேர் சங்கரனைக் கூப்பிட்டு விஷயத்தைத் தெரிவித்தான். இரண்டு ரூபாய்கூடப் போட்டுக் கொடுப்பதாக சொல்லு; டாக்ஸி கிடைக்கும்' என்று கூறிவிட்டு போனை டக்கென்று வைத்து விட்டான். கிராதகன்.

அவன் உபயோகிக்கும் கார், கையிலே காசைப் போட்டு வாங்கியதல்ல. ஆபீஸ் உபயம். அவன் தங்கைகள் நினைத்த போது கொத்தவால் சாவடியில் பச்சை மிளகாய் வாங்கக் கூசாமல் அதை எடுத்துக்கொண்டு போய் வருவதை சாம்பவி பல தடவைகள் பார்த்திருக்கிறாள். ஆபீஸ் பெட்ரோல், அவர்களுக்கென்ன கவலை? ஆனால் சமயத்துக்கு மற்றவர் களுக்கு உதவ முன்வர மனமில்லாத கல்மனம் படைத்த அந்த மாப்பிள்ளைக்கு அசட்டு அம்மா 'ஸ்ட்ராங்' காப்பியைப் போட்டுக் கொண்டு வந்து காலையில் உபசரித்த போது சாம்பவியின் உடலும் உள்ளமும் கொதித்தன.

'இந்த கிரிஜா அக்காவுக்கு இப்படி ஒரு வாழ்க்கை தேவையா? கணவன் ஒரு தடவை கண்ணால் உறுத்துப் பார்த்தால்கூட நடுநடுங்கிப் போகிறாளே? சே! இவள் படிப்பைக் கொண்டு குப்பைத் தொட்டியில்தான் போடவேண்டும்.'

தன் புக்ககத்தாருக்கு தான் நடுங்குவது போதாதென்று தன் மற்ற சகோதரிகளும் அவர்களுக்கு அடங்கி இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தாள் அவள்! வேடிக்கைதான்! அத்தையை ஊருக்கு அனுப்ப கணவனுடன் பிறந்த வீட்டிற்கு வந்திருந்தவள் நேரே சாம்பவியின் அறைக்குள் வந்தாள். "உன்கிட்ட ஒண்ணு பேசணும்." சாம்பவி இஸ்திரி போட்டு வந்த துணிகளை எண்ணி கணக்குப் பார்த்துவிட்டு பீரோவுக் குள் அடுக்கிக் கொண்டிருந்தாள்.



'போன ஞாயிற்றுக்கிழமை நீ சினிமாவுக்குப் போயிருந்தியா?'

"ஆமாம்! நானும் மல்லிகாவும் 'முள்ளும் மலரும்' பார்க்கப் போயிருந்தோம். அதுக்கென்ன?" கோபத்துடன் வெடித்தாள் தங்கை.

"பெல்பாட்டமும், டாப்ஸூம் போட்டுண்டு போகணுமா? என் கணவர், என் மாமியார்- நாத்தனார் குழந்தைகள் எல்லோரும் அந்த படத்துக்குப் போயிருந்தார்கள். அப்போ பார்த்தாராம்."

"பெல்ஸ் போட்டுக்கிறது ஒரு பெரிய குற்றமா?"

"உன் வயசுக்கு நன்னா இருக்கா...?" கிரிஜா முகம் சிவந்து போய் தடுமாறினாள்.

"அக்கா! என்னிக்கு உன் கழுத்தை அந்த சங்கரனுக்கு நீட்டினியோ, அன்னிக்கே உன் மூளையை மியூசியத்திலே கொண்டு வச்சுட்டே. உனக்குன்னு ஒரு அபிப்ராயமே கிடை யாதா? உன் கணவர் சொல்வதெல்லாம் உனக்கு வேதவாக்கு! உன் தங்கை பெல்பாட்டம் போட்டுண்டு சினிமாவுக்குப் போனதால் குடும்பத்து மானமே கோவிந்தாவா யிடுத்துன்னு உன் கணவர் சொல்லிவிட்டார். அவர்தான் உன் தெய்வமாச்சே! உடனே உனக்கு குடிமுழுகிப்போனது போல அவமானம் வந்து விட்டது. ஒண்ணு சொல்றேன் தெரிஞ்சுக்கோ- சங்கரன் உனக்குப் புருஷனே தவிர- அவர் எனக்குப் புருஷன் இல்லை. மேலும் என் புருஷன்னு வருகிறவன் என் சுதந்திரத்தை அடக்கி என்னைக் காலடியிலே போட்டு புழுவாக நசுக்கினா, உன்னாட்டம் நான் தலையைக் காட்டிண்டு இருக்கமாட்டேன் தெரிஞ்சுக்கோ"- இரைந்து கத்தி விட்டாள் சாம்பவி.

"என்ன சண்டை?" கேட்டுக்கொண்டே உள்ளே வந்து விட்டாள் அம்மா. கூடப் பின் தொடர்ந்து உள்ளே புகுந்து விட்டாள் பெரிய அக்கா சந்திரா, அவளுக்கு மேல் உதட்டில் ஒரு சிறு மச்சம். அம்மாவைப் போல நல்ல சிவப்பு. அழகி.

போதாதற்கு வரிசைப் பற்கள் வேறு... அதைக் காட்டிக்கொள்ள அடிக்கடி அவள் அழகாகச் சிரிப்பாள்.

தங்கை பக்கம் திரும்பினாள் அவள்.

"உனக்கு இப்போதெல்லாம் ரொம்ப கோபம் வருது. அதுக்குக் காரணம் எனக்குத் தெரியும். காலா காலத்திலே ஒரு கல்யாணம் நடக்காட்டா சில பெண்கள் இப்படி கலாட்டா பண்ணிண்டு இருப்பா..." பற்கள் பளிச்சிட அவள் பணக்காரச் சிரிப்பு சிரித்தாள்.

"உங்களைப் போல் பணத்தைக் கொட்டிக் கொடுத்து ஒரு புருஷனை விலைக்கு வாங்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. என் தேவைகளைப் பத்தி எனக்குத் தெரியும் அல்லவா?"

"இந்தப் பெண்ணை நானே கொள்வேன்னு மாலையைத் தூக்கிக் கொண்டு மாப்பிள்ளை வாசலில் வந்து நிற்பான்னு உனக்கு நினைப்பா?" மறுபடியும் சந்திரா அக்கா சிரித்தாள்.

"நீங்கள் நம்பி உழன்று கொண்டிருக்கும் இந்த சம்பிரதாயங் களை நான் அடியோடு வெறுக்கிறேன்" - சாம்பவி அடித்துப் பேசினாள்.

"அம்மா உன் சின்னப் பெண்ணுக்கு என்னவோ பிடிச்சிருக்கு- முன்னப் போலவேயில்லை. இந்த கன்னா பின்னா கதைகளைப் படிக்கறது- கண்ட படங்களுக்கு போகிறது; இதெல்லாம் நல்லதுக்கில்லை." தோள் பட்டைகளை அசட்டையாகக் குலுக்கினாள் அக்கா.

சண்டை வலுக்குமுன் அம்மா முந்திக் கொண்டு விட்டாள்.

"நளினிதான் நேத்திக்கு இட்லிக்கு அரைச்சுக் கொடுத்தா. பூப்போல இட்லி மெதுவா இருக்கு... நீங்க எல்லோரும் வாங்கோ.. சேர்ந்து உட்கார்ந்து இன்னிக்கு டிபன் சாப்பிடு வோம்...."



அம்மா தன் பெண்களை அன்போடு அழைத்தாள். அது சமயம் வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு உள்ளே வந்தாள் நளினி. அவளுக்கு எப்பொழுதும் தங்கள் குடும்பத்தைப் பற்றிய நினைப்புத்தான்.

"அம்மா! நாளைக்குள்ளே எலக்டாரிக் பில்லைக் கட்டியாக ணும் மறந்துடாதே- இந்தத் தடவை நமக்கு எண்பது ரூபாய்க்கு பில் வந்திருக்கு..."

"அம்பதுக்கு மேலே போகாதே... எப்படி?" அம்மா சொல்லி முடிப்பதற்குள் புலிக்குட்டியாக சீறினாள் சாம்பவி.

"மேலே ரூம்களில் ரெண்டு ஃபான்- கீழே இரண்டு ஃபான், வீடு முழுவதும் விளக்குகள்... ராத்திரி ஒரு மணி வரை அத்திம்பேர் தினமும் ஒரு ஹெரால்ட் ராபின்ஸ்சோட உட்கார்ந்து விட்டா? ஏம்மா பில் ஏறாது?" ஆத்திரத்துடன் கத்தி விட்டாள்.

அம்மாவுக்குப் பயமாகிவிட்டது. அப்பா காதில் பட்டு மறுபடி... முதல் நாள்போல் அடித்து விடப் போகிறாரே என்ற கவலை. "உங்கிட்ட ஏதாவது பணம் இருக்கான்னு பீரோவைப் பார்... எல்க்ட்ரிக் பில் கட்டாட்டா கரண்டை வெட்டிவிடுவார்கள்; பரீட்சைக்குப் படிக்கிற கௌசிக் கஷ்டப் படுவான் குழந்தை" அம்மா முணுமுணுத்தபடி அவளைப் பார்த்தாள்.

"எங்கிட்ட ஏது? சம்பளம் முழுவதையும் அப்படியே கொடுத்திட்டேன்; சேர்த்து வச்சிருந்த கொஞ்ச ரூபாயையும் போனமாசம் அப்பா இன்ஷூரன்சுக்குகட்ட வாங்கிக் கொண்டு விட்டார். உங்களுக்குத்தான் தெரியுமே... அப்பாவுக்கு கடனாகக் கொடுக்கிற பணம், யானை வாயில் போன கரும்பு போலதான்..." சிடுசிடுத்தாள் சாம்பவி.

"ஊராருக்குக் கொடுக்கிறது போல ஓலமிடறியே- பெற்ற வனுக்கு தானே கொடுக்கிறே?" சாடினாள் பெரிய அக்கா...

மீண்டும் சீறிக்கொண்டு எழுந்து விட்டாள் சாம்பவி. "அப்படியா? அதே நியாயம் உங்களுக்கும் பொருந்து மில்லையா? அம்மா இந்த மாசம் எலக்ட்ரிக் பில் கொடுக்க பணமில்லாம திண்டாடிக் கொண்டிருக்கா- பெத்தவதானேன்னு அக்காமார்கள் நீங்க ரெண்டு பேரும் கொடுத்து உதவலாமே" விஷமமாகச் சொன்னாள்.

முகம் சிவந்து நெஞ்சு பதற கை கால்கள் ஆட அச்சத்துடன் விர் என்று உள்ளே விரைந்து விட்டாள் கிரிஜா அக்கா.

சந்திரா தங்கையைப் பார்த்து மறுபடியும் பற்களைக் காட்டி மெல்ல சிரித்தாள்.

"கொண்டான் கொடுத்தானிடம் கடன் வாங்குவது ரொம்ப கேவலம்... தெரிஞ்சுக்கோ!"

"எனக்குத் தலைவலிக்கிறது. போதும் தர்க்கம்... எல்லோரும் டிபன் சாப்பிட வாங்கோ" அம்மா வற்புறுத்தலுடன் அதட்டிய துந்தான் அவர்கள் அறையைவிட்டு வெளியே வந்தனர்.

அத்தை ஊருக்குப் புறப்பட்டுப் போனதும் தோட்டத்தி லிருந்த எலுமிச்சை மரத்திலிருந்து ஒரு கூடை காய்களைப் பறித்துக் கொண்டுதான் போனாள் பணக்காரப் பெண் சந்திரா. சின்னவள், அம்மா வீட்டுக்காக போட்டு வைத்திருந்த மாகாளி கிழங்கு ஊறுகாயை ஜாடியோடு தூக்கிக் கொண்டு போய் விட்டாள்.

பிறந்த வீட்டுக்கு வந்தால்- தங்கையானாலும் சரி- பெண் களானாலும் சரி, எதையாவது சுரண்டிக் கொண்டு போகணுமா? இது என்ன பழக்கம் வெட்கக் கேடு! உதட்டைக் கடித்துக் கொண்டு கோபத்துடன் பைல்களைப் புரட்டினாள் சாம்பவி. வீட்டைப்பற்றி நினைத்துக் கொண்டு சிந்தனையில் சிலையாகி விட்டால், மலையாகக் குவிந்து கிடக்கும் டைப் வேலையை யார் கவனிப்பார்கள்? குற்ற உணர்வில் விழித்துக்கொண்டு



பரபரப்புடன் டைப் இயந்திரத்தின் எழுத்துகளை வேகமாகத் தட்டத் தொடங்கினாள்.

பத்து மணி அளவில் அந்த ஆபீஸில் டீ நேரம். ஒரு பதினைந்து நிமிஷத்திற்கு வேலை செய்கிறவர்களுக்கு ஒரு சின்ன ஓய்வு... ஆபீஸ் பையன் கொண்டு வந்து அருகில் வைத்த தேநீர் கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்ட மல்லிகா, தோழியின் பக்கம் திரும்பினாள்.

"ஆமாம்! அது என்ன? உன் இடது கன்னத்திலே வீக்கம்?" திடுக்கிட்டுப் போய் உரக்கவே கேட்டுவிட்டாள். ரஞ்சிதத்திற்குக் கூட கேட்டு விட்டது. அவளும் வியப்புடன் சாம்பவியை உற்றுப் பார்த்தாள். தலைமைக் கணக்கரும் சோடா பாட்டில் கண்ணாடி வழியே திகைப்புடன் அவளைப் பார்ப்பது தெரிந் தது. எண்சாண் உடல் ஒரு சாணாகிவிட்ட அவமான உணர்வில் அவள் ஒருகணம் தவித்துப் போனாள்.

மல்லிகா அவளுடைய சிநேகிதிதான். இருந்தாலும், இருபது வயதை தாண்டிவிட்ட தன்னை அப்பா கை தொட்டு கோபத்தில் அறைந்து விட்டார்; அதனால் கன்னமே வீங்கிவிட்டது என்ற உண்மையை அவள் எப்படித்தான் தோழிக்குச் சொல்லுவாள்?

"ராத்திரி தூங்கும்போது ஏதோ பூச்சி கடிச்சிருக்கு; மூஞ்சியே வீங்கிப்போச்சு- இப்போ கொஞ்சம் தேவலை" வாயில் வந்த ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு தேநீர்க் கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்டாள். அவளுக்கு அனாவசியமாகப் பொய் பேசுவது பிடிக்காத விஷயம். என்ன செய்வது மடக் கென்று அவசரமாக விழுங்கிய சூடான தேநீர் உதட்டையும் நாக்கையும் சுட்டது. அந்த நிகழ்ச்சியின் துயரம் இன்னமும் நெஞ்சை சுட்டுக்கொண்டு தானிருந்தது.

ராமபத்திரன் கோபத்தை அடக்கமாட்டாது ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்து விட்டார். அவளுக்கு அப்போது ஏற்பட் டது மாபெரும் அதிர்ச்சி. சாம்பவி அப்பாவின் செல்லப்பெண்,

அம்மாவின் உயிர். 'சீ! கழுதை' என்று வாயால் கூட அப்பா அவளை இதுநாள் வரை அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஒரு தடவை கூட திட்டியதில்லை.

தாத்தா ஓகோ என்று வாழ்ந்த காலத்தில் வெளிநாட்டு யாத்திரைக்குப் போய் வந்தவர்- இத்தாலியிலிருந்து வாங்கி வந்த வீனஸ் தேவதையின் சலவைக்கல் சிலையை அவர்கள் பெருமையாக முன்னறையில் ஒரு முக்காலிமீது வைத்திருந் தாள். அவள் அப்போது பத்து வயது. வேடிக்கையாக அதைக் கையில் தூக்கி அழகு பார்க்க எடுத்தவள் தவறிக் கீழே போட்டு உடைத்துவிட்டாள்.

அக்கா சந்திராவும், கிரிஜாவும் பயந்துவிட்டனர். அப்பாவின் முன்கோபம் பிரசித்தம்; அவள் கழுத்தைத் திருகி தோட்டத்துக் குழியில் புதைத்துவிடப் போகிறார் அப்பா என்றுதான் கடுமை யான தண்டனையை எதிர்பார்த்தார்கள். மாடியிலிருந்து இறங்கி வந்த அப்பா, விசும்பி விசும்பி அழுதுகொண்டு நின்ற மகளை வாரி மார்போடு அணைத்துக் கொண்டார்.

"அது உடைஞ்சு போச்சா?- போகட்டும். உன் காலில் விழுந்து காயப்படுத்தாமல் போச்சே நல்ல வேளை" சிரித்துக் கொண்டே அவளது கண்ணீரைத் தமது கரத்தால் துடைத்து விட்டார். அத்தனை அன்பு அவள் மேல் அப்பாவுக்கு. அந்த அப்பா இந்த வயதில் ஓங்கி அடித்துவிட்டாரே? நினைக்க நினைக்க அவள் நெஞ்சு ஆறவில்லை.

காரணம்? அத்தை சரோஜாதான்.

அக்கா நளினி சேமித்து வைத்திருந்த பணம் முழுவதும் அத்தைக்கே செலவாகி விட்டதே, நளினிக்கு அவசரச் செலவு ஏற்பட்டால் பணத்திற்கு எங்கே போவது என்ற தவிப்பு அவளுக்கு. அதனால் அத்தை மீது எரிச்சல். கடமை என்பதில் அளவுகோல்தான் என்ன என்று உள்ளுக்குள்ளே குடைச்சல்.



வேண்டுமென்றே விஷமமாகத்தான் அன்று அவள் தன் அத்தையிடம் கேட்டாள்.

"நாமிருவர் நமக்கிருவர்னு கூரை மேலிருந்து கோஷ மிடுகிற இந்த காலத்திலே, அத்தை! ஆனாலும் உங்கள் குடும்பம் ரொம்ப பெரிசு. இந்த சின்ன வயதில் உங்களுக்கு ஆறு குழந்தைகள்! மன்னிக்க முடியாத குற்றம்..." வேடிக்கைக் காக சிரிப்பது போல் வார்த்தைகளால் சுருக்கென்று குத்தி விட்டாள்.

"என் குடும்பத்தைப் பற்றி கவலைப்பட வேண்டியவள் நான். உனக்கென்ன இந்த பேச்செல்லாம்?"- எரிந்து விழுந்தாள் அத்தை.

"எங்கள் குடும்பத்தைப் பற்றிய கவலையால்தான் கேட்கிறேன். ஒவ்வொரு பிரசவத்திற்கும் பெண்கள் பிறந்த வீட்டுக்குத்தான் வரணும்னு என்ன சம்பிரதாயம்? கல்யாண மானதும் ஒரு பெண் தன் குடும்பம்தான்னு இண்டிபெண்டண் டாக இருக்க வேண்டாமா? நம்ப அனுசரிக்கிற இந்த பழங்கால பழக்கவழக்கங்களை நான் வெறுக்கிறேன். கடமை என்கிறதுக்கு ஒரு எல்லையிருக்கு இல்லையா?"

"என்னடி நீ சொல்றே? புக்ககத்திலே விதி அத்துப் போய், பிறந்த வீட்டு வாசலுக்கு பிச்சையெடுக்க வந்துட்டேன்னுதானே சொல்லிக் காட்றே! எங்கம்மா உசிரோட இருந்தா இப்போ..." கிரீச்சென்று உரத்த குரலில் அழ ஆரம்பித்தாள் சரோஜா. நல்லவேளை, மாப்பிள்ளை நீலகண்டன் எங்கேயோ ஊர் சுற்ற வெளியே போயிருந்தார். வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த அம்மா பதறிக்கொண்டு ஓடிவந்தாள்.

வாயில் வராந்தாவிலே பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கிடந்த ராமபத்திரன் திடுக்கிட்டு எழுந்து உள்ளே வந்தார்.

"அண்ணா, சாம்பவி சொல்றதைக் கேட்டேளா..." விக்கி அழுதாள் சகோதரி.

"பச்சை உடம்புக்காரி அழாதே அம்மா..." காமாக்ஷி நடுவில் புகுந்து சமாதானம் செய்ய முயன்றாள்.

"ஒவ்வொரு பிரசவத்துக்கும் நான் இங்கே வருகிறேனாம்- அதனால் உங்களுக்கு நான் பாரமாம். உங்க பெண் என்னை அவமானப்படுத்தினா அண்ணா! இதைக் கேட்டுண்டு நிக்கிறதைவிட தோட்டத்து கிணத்துல விழுந்து சாகலாம் போல இருக்கு... அம்மா இருந்தா இப்படி ஒரு சின்ன பெண்கிட்ட பேச்சு வாங்க விட்டிருப்பாளா?... படபடவென்று பேசி விட்டுக் குலுங்கக் குலுங்க அழுதாள்.

ராமபத்திரன் ருத்ர மூர்த்தியானார். செவேலென்று முகம் மாற நெஞ்சு துடிக்க ஓரே எட்டில் மகள் அருகே நெருங்கினார். "சாம்பவி! அத்தை சொல்வது வாஸ்தவமா?..." ஓங்கிய குரலில் அதட்டினார்.

சாம்பவி முகத்தை நிமிர்த்திக்கொண்டு துணிவோடு தந்தையைப் பார்த்தாள்.

"ஆமாம் அப்பா. உண்மைதான். அண்ணன், தங்கைக்கு செய்கிற கடமைக்கு ஒரு வரம்பு இல்லையான்னு கேட்டேன், அதில் என்ன தப்பு?"

"அதில் என்ன தப்பா? அத்தனை வாயா உனக்கு?"- உறுமியபடி ஓங்கிய அவரது கை பளார் என்று அவளது இடது கன்னத்தில் விழுந்தபோது பூமியே அதிர்ந்து விட்ட திகைப்பு... வேதனை. "அப்பா....!" கூவிக்கொண்டே தாடையைப் பிடித்தபடி அவள் ஓட்டமாக அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு விட்டாள்.

கன்னத்தில் ஏற்பட்ட வலியை விட, அவள் உள்ளமும் உணர்வுகளும் வேதனையால் துடித்தன.



வராந்தாவில் காலடிச் சத்தம். டாக்டரம்மா ரவுண்டுக்கு வருகிறதன் அறிகுறி. தேநீர் இடைவேளை முடிந்து விட்டதினால் பையன் காலியான கோப்பைகளை தட்டிலே அடுக்கிக் கொண்டு போய் விட்டான். நடந்ததையெல்லாம் நினைத்து உள்ளம் கலங்கிய சாம்பவி பொங்கி வந்த கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

ஆனால் உள்ளம் சட்டென்று அமைதியடைய மறுத்து புரட்சி செய்தது.

"அப்பா அடிக்கட்டும், கொல்லட்டும் அக்கறை இல்லை. இந்த அசட்டு சம்பிரதாயங்கள் எல்லாம் தப்புதான். இவைகளை நான் வெறுக்கிறேன்- வெறுக்கிறேன். உயிர் உள்ளவரை வெறுப்பேன்! தனக்குள்ளேயே பேசிக்கொண்டு பைல் ஏடுகளை ஆவேசத்துடன் புரட்டினாள்.

## 3

அன்று மாலை லேசாக மழைதூறிக் கொண்டிருந்தது. ஸ்கூட்டரிலிருந்து இறங்கினார் ராமபத்திரன். கராஜ் கதவைக் காலால் உதைத்துத் தள்ளித் திறந்து ஸ்கூட்டரை உள்ளே வைத்தார். மழைக் கோட்டைக் கழற்றி இடது கையிலே மடக்கி போட்டுக் கொண்டு ஹெல்மெட்டைக் கழற்றி எடுத்துக் கொண்டார். கைக் குட்டையால் முகத்தைத் துடைக்கும் பாவனையில் பெண்களின் அறை ஜன்னல் பக்கம் பார்வையைச் செலுத்தினார்.

அதன் வழியே சாம்பவி எட்டிப் பார்க்கமாட்டாளா என்ற ஒரு எதிர்பார்ப்பு; உடனடியாக ஏமாற்றம். ஜன்னல் கதவு சாத்தப்பட்டிருந்தது.

ஆபீஸ் முடிந்ததும் ராமபத்ரன் தமது கைப்பையைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விடுவதில்லை. வீட்டுக்கு எந்த பைல்களை

யும் எடுத்து வந்து இரவில் விளக்கை எரிப்பதில்லை. சிறிது நேரம் தமது அறையிலேயே உட்கார்ந்து வேலையை முடித்து விட்டுத்தான் வெளியே கிளம்புவார். வழியில் நண்பன் நாகநாதனைப் பார்த்து பேசிவிட்டுத்தான் வருவார்.

அவர் வீடு திரும்புமுன் மற்ற அனைவரும் வீட்டிற்கு வந்து விட்டிருப்பார்கள். காமு குளித்து விட்டு வேறு உடுத்திக் கொண்டு சமையலுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பாள். நளினி சூடான காப்பியைக் கலந்து எடுத்துக்கொண்டு ஓடி வருவாள். ஸ்கூட்டர் சத்தம் கேட்டதுமே சாம்பவி விரைந்து வந்து கராஜ் கதவைத் தள்ளித் திறந்து தயாராக வைப்பாள்.

"அப்பா! இன்னிக்கு நீங்க ரொம்ப லேட்..." என்று கொஞ்சலாக கண்டித்தபடி அவரது பையை வாங்கிக்கொண்டு உள்ளே வேகமாக நடப்பாள்.

ஆறு நாட்களாக அவரது செல்வமகள் சாம்பவி அவரை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு வீட்டில் வளைய வந்து கொண்டிருந்தாள்.

அவருக்கும் வலிய தானே பேச வெட்கமாக இருந்தது. வயது வந்த பெண்ணைக் கை தொட்டு அடித்து விட்டோமே என்று தினமும் தமது ஆத்திர புத்தியை ஆயிரம் முறை சாடிக் கொண்டார்.

"காமு! காமு!" அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார்.

சமையலறையிலிருந்து மனைவி எட்டிப் பார்த்தாள்.

"ஒரே தலைவலி- சித்த போய் படுத்துக்கிறேன்." கைப் பையை அருகிலிருந்த மேஜை மீது போட்டுவிட்டு பெருமூச் செறிந்தார். ஆபீஸ் ஆடைகளைக் களைந்து விட்டு வேட்டியைச் சுற்றிக்கொண்டு பனியன்மீது துண்டை போட்டுக் கொண்டு குளியலறைக்குச் சென்றார். கண்களில் ஒரே எரிச்சல், தலைவலி மண்டையைப் பிளந்தது. தமது படுக்கையறைக்குள் புகுந்து



கட்டிலின் மீது சாய்ந்து கொண்டு கூரை முகட்டை யோசனை யுடன் பார்த்தவண்ணமிருந்தார். நெஞ்சமே வெடித்து விடும் போன்றதொரு துன்பச் சுமை.

காமாக்ஷி காப்பி டம்ளருடன் உள்ளே வந்தாள். கதவை ஒருக்களித்துவிட்டு தம்ளரை அருகிலிருந்த முக்காலிமீது வைத்தாள். ஈரக்கையை புடைவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டு அருகில் வந்து அவரது நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

"பயந்துட்டேன்... ஃப்ளூ காய்ச்சல் எதையாவது பிடிச்சுண்டு வந்துவிட்டீங்களோன்னு ஒரு நிமிஷம் எனக்கு திகிலாயிருந் தது... காப்பியைச் சாப்பிடுங்கோ; தலைவலி போயிடும்!" - சொல்லிக் கொண்டே நாற்காலி கைமீது கிடந்த அவரது ஆபீஸ் ஆடைகளை ஸ்டாண்டில் மாட்ட எடுத்தாள். சட்டைப் பையில் தடிமனாக ஏதோ கையில் பட்டதும் துழாவி வெளியே எடுத்தாள். காட்பரி சாக்லெட் கட்டி ஒன்றும் ஒரு குழாய் நோட்டும் வெளிவந்தன.

"ஆமாம், நீங்க மத்யானம் டிபன் சாப்பிடலையா?" - வியப்புடன் கேட்டாள் மனைவி.

தினசரி அவர் கையில் நான்கு ரூபாய்களை அவள் எண்ணிக் கொடுத்தனுப்புவது வழக்கம். அவர் கையில் டிபன் எடுத்துப் போவதில்லை; அங்கேயே காண்டீனில் ஏதாவது சாப்பிடுவது வழக்கம்.

"பசிக்கலை... சாப்பிடலை..."

"மூணு ரூபா போட்டு சாக்லெட் யாருக்கு?... அதனால் டிபன் சாப்பிடலை. எனக்கு உங்களைத் தெரியாதா?"

"சம்பா குட்டிக்கு சாக்லெட்டுனா உசிராச்சேன்னு வாங்கிக் கொண்டு வந்தேன்."

காமாஷி குபீரென்று சிரித்துவிட்டாள். "இது சமாதானத்துக்கு காணிக்கையா? பேஷ்! பேஷ்! கொஞ்சம் இருங்கோ. நளினி அரிசி உப்புமா செய்து வச்சிருக்கா. சூடா கொஞ்சம் கொண்டு வரேன். அதைச் சாப்பிட்டுட்டு பிறகு காப்பி சாப்பிடுங்கோ. மத்யானம் பட்டினி-அதனால்தான் தலைவலி" -அன்புடன் கடிந்து கொண்டாள்.

"ராத்திரிகூட நான் சரியாகத் தூங்கலை காமு... கண்ணெல் லாம் எரியறது."

"இப்படி மனுஷா தன்னைத்தானே போட்டுப் பிடுங்கிப் பாளா- ரெண்டு நாள் விட்டுப்புடிச்சா தானே வந்து பேசுவா."

"இல்லை... காமு அவள் ஒரு தினுசான பொண்ணு. ரொம்ப சென்ஸிட்டிவ்.... அப்பா அடிச்சுட்டாரேன்னு அதிர்ந்து போய் இருக்கா. என் மூஞ்சியைக்கூட பார்க்க மாட்டேங்கறா... எத்தனையோ சுகமாக வாழவேண்டிய குழந்தைகள். எல்லாப் பணத்தையும் கோணாமாணான்னு செலவழிச்சுட்டு இப்போ அதுகள் சம்பாதிக்கிறதிலே குடும்பம் நடத்தவேண்டியிருக் கேன்னு வேதனைப் படறேன்." அவர் குரல் கரகரத்தது.

கையிலிருந்த துணிகளை சட்டென்று ஸ்டாண்ட் மீது போட்டு விட்டு, அருகே வந்து படுக்கையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள்! "உங்களுக்கு பிரஷர் வந்திருக்குன்னு டாக்டர் ஏற்கனவே பயமுறுத்தியிருக்கிறார். நீங்க மனசை வீணாக் கஷ்டப் படுத்திண்டா பிரஷர் ஏறும்."

"காமு... நீ மட்டும் என் வாழ்க்கையில் துணையாக இல்லாட்டா நான் என்ன செய்வேனோ தெரியாது. அப்போ ஏற்பட்ட அந்த அவமானத்தைத் தாங்கமுடியாது தற்கொலை பண்ணிக் கொண்டிருந்திருப்பேன் காமு, நீ ரொம்ப நல்லவள். உனக்கேத்த புருஷன் நான் இல்லைனு சிலசமயம் நினைச்சு நானே நொந்துக்கறேன்!"



"இதென்ன அசட்டுப் பேச்சு?" -அதட்டிய காமாக்ஷி முந்தானையால் அவர் முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்து விட்டாள்.

"வீடு வாசல் எல்லாத்தையும் கடனில் முழுகவச்சு உன் மேலிருந்த நகையெல்லாம் வித்து... பெரியவா வச்சுட்டுப் போன எல்லாத்தையும் ஒழிச்சுக்கட்டிட்டேனே... திடீர்னு எனக்கு ஏதாவது ஆயிட்டா நளினி, சாம்பவி இரண்டுபேர் கல்யாணத்தையும் நீ எப்படி சமாளிப்பே? கௌசிக்கைப் படிக்கவச்சு முன்னுக்குக் கொண்டு வரணுமே! இதையெல்லாம் நினைச்சு நான் ரொம்ப கவலைப்படுகிறேன் காமு!" தழுதழுத்தது அவர் குரல்.

"வெள்ளிக்கிழமை அதுவுமா, அசுபமான வார்த்தைகளை ஏன் பேசறீங்க? சாம்பவி, உங்க செல்லக்குட்டி. உங்களோட பேசலைன்னதும் உங்க மனசு ரொம்ப தளர்ந்து போச்சு"- எழுந்தாள் அவள்.

"காமு...! கணவர் கூப்பிட்டார்.

"இந்த மூக்குத்தி உன் முகத்துக்கு எத்தனை எடுப்பா இருக்கு தெரியுமா? எந்த கஷ்டம் வந்தாலும் இதை மட்டும் விற்கிறதில்லையினு தீர்மானிச்சுட்டேன். என் பாட்டிக்கு தாத்தா வாங்கிப்போட்டது. ப்ளுஜகர் கல். அரை காரட்டுக்கு மேலே இருக்கு. பத்திரமா வச்சுக்கோ. பெண்கள் யாருக்கும் கொடுத்திடாதே."

"எங்கேயோ ஊருக்குப் போகிறாப்போல இதென்ன வார்த்தைகள்? நீங்க ரொம்ப மனசு குழம்பியிருக்கிறீங்க. ஆபீஸிலே ஏதாவது தகறாரா...?" மனைவி ஆதங்கத்துடன் கேட்டாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. உன் வைரத்தோடு, நெக்லஸ், வளையல்கள், சங்கிலி இப்படி எல்லாத்தையும் நான் கேட்டபோதெல்லாம் உருவிக்கொடுத்துட்டியே, உனக்

குன்னு ஒரு நல்ல நகை இதாவது இருக்கட்டும்னு என் மனசு அடிச்சுக்கிறது, அவ்வளவுதான்.

"உங்க அன்பும், இந்த மஞ்சள் குங்குமமும் என்னிக்கும் நிலைச்சு இருந்தா எனக்குப் போதும் உங்க கஷ்டத்துக்கு உதவாத நகைகள் எனக்கு மட்டும் என்னத்துக்கு?"

"காமு! இந்த ராமபத்ரனின் கடைசி மூச்சுவரை உன் மேலே வச்சிருக்கிற அன்பு இம்மியும் குறையாது. ஒண்ணு உனக்குத் தெரியுமா? ஸ்நானம் பண்ணின தலையைத் தளர முடிஞ்சுக் கொண்டு நெற்றியிலே பளிச்சினு குங்குமப் பொட்டும்- மூக்கில் இந்த மூக்குத்தியுமா எதிரே வந்தா நீ எப்படி இருக்கே தெரியுமா? எங்க சித்தப்பா வீட்டிலே உன்னை முதல் முதலில் பார்த்தேனே, நூல் புடைவையும் சீட்டி ரவிக்கையும்- கையில் சிலுக் சிலுக்குனு கண்ணாடி வளையல்கள் குலுங்க நீ உள்ளே வந்தபோது மலைச்சுப் போய் நின்னேனே- அதே அழகு தான் உன்னை விட்டுத் துளிகூட நகரலை. உண்மை."

காமாக்ஷியின் முகத்திலே வெட்கத்தின் செம்மை படர்ந்தது, "போதும் இன்னும் பத்து வருஷங் கழிச்சு என் அழகை வர்ணியுங்கோ! இன்னிக்கு நீங்க ரொம்ப அசடு வழிகிறீங்க." விருக்கென்று வெளியே வந்தாள். லேசாகக் கண்களில் புரண்ட கண்ணீரை புடைவைத் தலைப்பால் ரகசியமாகத் துடைத்துக் கொண்டாள். மெல்ல சப்தமிடாது நடந்து சென்று எதிர்ப்புறத்து அறைக்கதவைத் திறந்தாள்.

அறைக்குள் குழல் விளக்கு பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது. சுவர் ஓரமாகக் கிடந்த பிரம்பு நாற்காலியில் சாம்பவி உட்கார்ந்து பெமினாவைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

"சம்பா குட்டி அப்பா அசதியா அறையிலே படுத்துண்டு இருக்கார்- கொஞ்சம் சூடா உப்புமாவை எடுத்துக் கொண்டு



போய்க் கொடு. டிபன்கூட சாப்பிடலையாம். பாவம்" என்றாள்.

சாம்பவி- மௌனமாகத் தாயைப் பார்த்தாள்.

"எனக்கு உள்ளே ஏகப்பட்ட வேலை கிடக்கு, நளினி சமையலைக் கவனிச்சுக்கொண்டிருக்கா- நீ மாட்டேன்னா நான் மாடியிலே படிக்கிற கௌசிக்கைத்தான் கூப்பிட வேண்டியிருக்கும். அம்மாவுக்கு கொஞ்சம் உதவி செய்யம்மா கண்ணு" -அவள் குரல் மிகவும் குழைந்தது. கண்களில் அந்த மயக்கும் மிருதுவான பார்வை!

சாம்பவி சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தாள். அம்மா பெரிய டிப்ளமாடிக் பர்ஸன்... தனக்குள்ளே மெல்ல சிரித்துக் கொண்டு சமையலறைப் பக்கம் சென்றாள். ஒரு ஸ்டீல் கிண்ணத்தில் உப்புமாவை நிறைத்து மரத்தட்டில் வைத்து கூட கரண்டியும்- தம்ளரில் தண்ணீரும் எடுத்துக் கொண்டு அவள் மெல்ல அப்பாவின் அறையை நோக்கி நடந்தாள். பரீட்சை வினாத்தாளைப் பார்ப்பது போன்று நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொண்டது.

மெல்லக் கதவை முழங்கையால் தள்ளிவிட்டுக் கொண்டு வாயிற் படியில் ஒரு கணம் தயங்கினாள்.

ஆறு நாட்களுக்குப் பின்னர் அப்பாவிடம் பேச அவளுக்கு வெட்கமாக இருந்தது. நெஞ்சை ஏதோ அடைத்துக்கொண்டு விட்டது போன்ற பிரமிப்பு.

ராமபத்ரனுக்கும் மகளின் முகத்தை நேருக்கு நேர் பார்க்க சிறிது லஜ்ஜையாகத்தானிருந்தது. குற்ற உணர்வுடன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார்.

சாம்பவிதான் முதலில் பேசினாள்.

"உடம்புக்கு என்ன அப்பா?"- அவள் குரலில் உண்மையான ஆதங்கம்.

"ஒண்ணுமில்லை; கொஞ்சம் அசதி, வயசாயிடுத்தில்லையா?" அப்பா அவளைப் பார்த்தார். "உன்னோடு பேசினதும் உடம்புக்கும் தெம்பு வந்துடுத்தம்மா." என்று மௌனமாகப் பேசியது அவர் பார்வை. நெஞ்சை யாரோ கசக்குவது போன்ற வேதனை சாம்பவிக்கு. முக்காலியை அருகே நகர்த்தி மரத்தட்டை அதன்மீது வைத்தாள்.

"என்னை மன்னிச்சிக்கோங்க அப்பா. நான் அத்தையிடம் அப்படி பேசினது தவறு" - அவள் குரல் உடைந்தது. கண்களில் நீர் முட்டிக்கொண்டு வந்தது.

"நீ குழந்தை. அறியாமல் ஏதோ சொல்லிட்டே, இத்தனை வயசான எனக்கு புத்தி இல்லாம போச்சே- அதுக்கென்ன சொல்றே? இத்தனை நாள் விரலால்கூட உங்களை யாரையும் நான் தொட்டதில்லை. அப்படிப்பட்டவன் அன்னிக்கு..." தடுமாறினார் அவர்.

நெஞ்சம் நெகிழ்ந்து போய் விட்டாள் சாம்பவி. "அப்பா உப்புமாவும், காப்பியும் ஆறிப்போகிறது. முதல்லே சாப்பிடுங்கோ. நடந்ததையெல்லாம் நாம் மறந்திடுவோம்." -கண்ணீரை அடக்கிக்கொண்டு புன்னகைத்தாள்.

"அந்த சட்டைப் பையிலே உனக்கு ஒண்ணு வச்சிருக்கேன் பார்" லேசாகச் சிரித்துக்கொண்டே, சாப்பிட- உப்புமா கிண்ணத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.

துழாவி கையில் எடுத்த சாக்லெட் கட்டியைக் கண்டதும் அவளுக்கு வேதனை கலந்த வியப்பு!

"சாப்பிடும்மா... உனக்குச் சாக்லெட்டுன்னா உசிராச்சே- உனக்குத்தான் வாங்கிண்டு வந்தேன்" -பச்சைக் குழந்தைக்குச் சொல்வது போல் கொஞ்சியது அவர் குரல்.

உணர்ச்சி வசத்தில் சாம்பவியின் உடல் எல்லாம் ஆடியது. ஐந்து வயதுச் சிறுமியாக இருக்கையில் பள்ளிக்கூடத்திலிருந்து



வந்ததும் அப்பா.... என்று அவள் ஓடி வருவாள். தயாராக சட்டைப் பையில் வைத்திருக்கும் சாக்லெட் கட்டியை எடுத்து உறையைக் கிழித்து வெள்ளிக்காகிதத்தை உரித்து துண்டுகளாக்கி அப்பா அவள் வாயில் ஒவ்வொன்றாக ஊட்டுவார்.

அந்த நினைவு அழுகையாக நெஞ்சை இறுக்கியது.

"நான் இன்னும் சின்னக் குழந்தையா அப்பா?" வெட்கத்துடன் சிரிக்க முயற்சித்தாள் அவள்.

"நீ எப்பவும் குழந்தையம்மா... என்னுடைய சின்ன குட்டிப் பொண்ணாச்சே" - பரிவோடு சொல்லிக்கொண்டே காப்பியைப் பருகினார்.

"தாங்யூ அப்பா..." தன்னை மீறி பொங்கி வந்த கண்ணீரை விரலால் சுண்டி விட்டுக்கொண்டு தட்டை எடுத்துக்கொண்டு போக அருகில் வந்தாள்.

"இப்படி உட்கார் உன் கிட்ட ஒண்ணு பேசணும்." - அப்பா உத்தரவிட்டார்.

திகைப்புடன் சட்டென்று அருகில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து விட்டாள் அவள்.

"இந்த வருஷம் எப்படியாவது நளினிக்குக் கல்யாணம் செய்து முடித்து விடணும்னு என் தீர்மானம். நாகநாதன் மூலம் ஒரு வரன் கிடைச்சிருக்கு. இந்த ஞாயிற்றுக்கிழமை பையன் வீட்டிலிருந்து எல்லாரும் இங்கே பெண்ணைப் பார்க்க வரப்போறாங்க."

"அம்மாவுக்கும் அக்காவுக்கும் சொல்லி விட்டீங்களா."

"இல்லை... முதல்லே உன்கிட்டத்தான் சொல்றேன். அதுக்கு ஒரு காரணம் இருக்கு."

"என்னப்பா?"

"ரெண்டு நாளா எனக்கு உடம்பு சரியில்லை."

"என்னப்பா உடம்புக்கு?" பதறினாள் மகள். வாயில் போட்டுக் கொண்ட சாக்லெட் துண்டத்தைச் சுவைக்காது பட்டென்று விழுங்கினாள்.

"மூச்சு விட முடியாது நெஞ்சு வலி- நேற்று பகல் ஆபீசிலே வலியோட திக்குமுக்காடிப் போய் விட்டேன்!"

"டாக்டரைப் பார்த்திங்களா அப்பா?"

"டாக்டர் இப்போ எக்ஸ்ரே... ஈ.ஸி.ஜி- ரத்தப்பரிட்சை அது இதுன்னு செலவை இழுத்து விட்டுடுவார். அதெல்லாம் கட்டுப்படியாகாது."

"அப்பா நான் வேலை செய்கிற நர்ஸிங்ஹோமுக்கு நாளைக்குக் காலையில் வாங்கோ! டாக்டர் அம்மா ரொம்ப நல்லவங்க. அங்கே வேலை செய்கிறவங்க உறவினர்களுக்கு உடம்புக்கு ஏதாவதுன்னா கவனிக்க பீஸ் வாங்கறதில்லை."

"இப்ப வலி ஏதும் கிடையாது. நர்ஸிங்ஹோம்... அது இதுன்னு கலாட்டா பண்ணினா, உங்க அம்மா பயந்து போய்விடுவாள். ஏற்கெனவே அவளுக்கு வயிற்று வலி. கவலை வந்தால் அது ஜாஸ்தியாயிடும்னு டாக்டர் சொல்லியிருக்கார். அதனால்தான் அவகிட்ட சொல்லலை. நளினி பயந்தவள். மனசிலே வச்சுக்கத் தெரியாது, உளறிவிடுவாள். நீ தான் எல்லாரையும் விட தைரியசாலி- அதனாலே உங்கிட்ட சொன்னேன்."

"இருந்தாலும் ஒரு தடவை உங்க உடம்பை செக்கப் பண்ணிக்கிறது நல்லது அப்பா?"

"ஆகட்டும்! மறுபடியும் ஏதாவது வலி வந்தா கட்டாயம் உன் ஆஸ்பத்திரிக்கு வரேன். எதுக்கும் உங்கள் இரண்டு பேருக்கும் காலாகாலத்தில் ஒரு கல்யாணத்தைச் செய்து வச்சுட்டா என் பொறுப்பு தீர்ந்திடும். அப்புறம் கௌசிக் படிப்பு. அது தானே நடக்கும்."



"எனக்கு இப்ப கல்யாணத்துக்கு அவசரம் இல்லேப்பா. உங்களுக்கு உதவியா கொஞ்ச காலமாவது கூட இருக்கணும்னு ஆசையா இருக்கு!"

மரத்தட்டைத் தூக்கிக்கொண்டு அவள் வெளியே போகுமுன் அப்பா அவளைக் கூப்பிட்டார்.

"அம்மாகிட்டே மூச்சு விடாதே. ராத்திரியெல்லாம் தூங்க மாட்டாள்..."

இல்லை என்று தலையை ஆட்டிவிட்டு வெளியே வந்தாள், சாம்பவி.

அன்று பகல் டிபன் சாப்பிடாது பணத்தை மிச்சப்படுத்தி அவளுக்கு அப்பா சாக்லெட் வாங்கியது... இரண்டு நாளாக வந்த நெஞ்சு வலியை யாரிடமும் சொல்லாமல் தானே அனுபவித்தது... எல்லாம் நினைத்தபோது வாய் விட்டு அழ வேண்டும் போன்ற துக்கம் அவளை உலுக்கியது.

சமையலறைக்கு முன்னால் தரை மீது தட்டை வைத்து விட்டு குழாயில் கையைக் கழுவிக் கொண்டாள். பூஜையறைக்குள் மெல்ல நுழைந்தாள்.

வழக்கம் போல் வேலையிலிருந்து வந்ததும் தோட்டத்திலே மலர்ந்து கிடந்த கனகாம்பரத்தைப் பறித்து மாலை கட்டி அம்பாள் படத்திற்குச் சூட்டியிருந்தாள் அம்மா. பூஜையறை குத்துவிளக்கும் பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது.

அம்பிகையின் படத்தருகே வந்து நின்றாள் சாம்பவி. சில தினங்களுக்கு முன்னர் அவள் வேலை பார்த்து வந்த அந்த மருத்துவமனையில் நெஞ்சுவலியுடன் ஒரு முப்பது வயதுப் பெண் அனுமதிக்கப்பட்டாள். கொஞ்சநேரத்தில் அவள் இறந்துபோனாள். அது நினைவிற்கு வந்தபோது உடல் சில்லிட்டு உள்ளம் நடுங்கிப் போனாள் அவள்.

அம்பாள் படத்திற்கு முன்னால் தரையில் விழுந்து கும்பிட்டாள். "தாயே! எங்களுக்கு எதுவும் வேண்டாம். அப்பாவும் அம்மாவும் சுகமா இருந்தா அதுவே போதும். அப்பாவைக் காப்பாத்தம்மா... சோதிக்காதே...." தனக்குள்ளே சொல்லிக் கொண்டவள், கட்டுக்கொள்ள இயலாது மெல்ல விசும்பி அழுது விட்டாள்.

## 4

**அ**ன்று இரவு சமையலறையை மூடிவிட்டு காமாக்ஷி வெளியே வருவதற்குள் நேரமாகி விட்டது. சாதாரணமாக நளினிதான் அந்தப் பொறுப்பை ஏற்பது வழக்கம். சில நாட்களாகப் பெய்த மழையில் அவளுக்கு மறுபடியும் முட்டி வலி வந்து விட்டிருந்தது. ஏற்கெனவே ஐந்து வயதில் இளம் பிள்ளை வாதத்தினால் பலவீனமாகிவிட்ட கால், இப்போது வலது முழங்கையில் வலி-தாயாருக்குப் பெண்ணைப் பற்றிய கவலை. ஞாயிற்றுக்கிழமை யாரோ அவளைப் பெண் பார்க்க வரப்போகிறார்கள். அந்தச் சமயம் அவள் முட்டி வீக்கமும் காய்ச்சலுமாகப் படுத்துவிட்டால்...?

காமாக்ஷியுடன் கூடப் படித்த தர்மாம்பாள் இப்போது ஒரு பிரபல டாக்டர். அவளிடம் ஒருசமயம் மகள் நளினியை அழைத்துச் சென்றிருந்தாள். முட்டி நோய்க்கு அவள் எழுதிக் கொடுத்த மருந்து நல்லவேளையாகக் கொஞ்சம் கைவசம் மீதமிருந்தது. இரவு சாப்பாட்டிற்குப் பின்னர் அதை எடுத்துக் கொடுத்து, அவளைத் தூங்கச் சொல்லி அவளது அறைக்கு அனுப்பி விட்டிருந்தாள். வேலைக்குப் போகும்போது தான் நளினி எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் எழுதிக் கொடுத்த ஆர்த்தோ பீடிக் ஷூவை அணிந்துகொண்டு நடப்பாள். வீட்டிற்கு வந்ததும் அதைக் கழற்றி விட்டு வெறுங்காலுடன்



நடக்க முயற்சிக்கும் போது, அவளது ஊனம் பார்ப்பவர்களுக்கு சட்டென்று நன்றாகத் தெரியும். இடதுகாலைத் தூக்கி அவள் தத்தி நடந்தபடி சமையலறையில் தாயாருக்கு உதவும் போது காமாஷி உள்ளூற வேதனையால் புழுங்கினாள். நளினி மற்ற மூன்று பெண்களைப் போல் அழகியல்ல. நிறத்திலும் மட்டம். ஏன், கருப்புப் பெண்-அதுவும் கால் ஊனமானவளுக்கு கிராக்கி ஏது? அப்பா ஒருசமயம் பெரிய பணக்காரனாக இருந்தால் காசைக் கொட்டி ஊனத்தை மறைத்துவிட முடியும்.

பங்களா, கார், வெளிநாட்டுப் பயண வசதிகள் என்று ஆசைகளைக் காட்டி பெண்ணை ஒருத்தன் தலையில் கட்டிவிட முடியும்..

ஆனால் அவர்களிடம் அத்தனை பணமேது?

மகளைப் பற்றிய வேதனை நெஞ்சை அடைக்க காமாக்ஷி தன் அலுப்பைப் பாராது சமையலறை தரையைச் சுத்தமாகக் கழுவி முடித்தாள். மறுநாட்காலை எழுந்ததும் எல்லோரும் வேலைக்கு ஓடவேண்டும். அரை நாள் லீவு என்றாலும் காலையில் அதே நிர்த்தூளி தான் வீட்டில். எண்ணியபடியே தான் வேலைக்கு எடுத்துச் செல்லவேண்டிய புத்தகங்களைத் தயாராகக் கொண்டு வந்து சாப்பாட்டு மேஜை மீது வைத்தாள். சமையலறைக் கதவைச் சாத்திவிட்டு பால் டம்ளருடன் மாடிக்குச் சென்றாள்.

கௌசிக் அவனது அறையில் படித்துக் கொண்டிருந்தான். புத்தகத்தில் மூழ்கிக்கிடந்த அவன், தாயார் உள்ளே வந்ததைக் கூட கவனிக்கவில்லை. மேஜை மீது வைத்த டம்ளர் செய்த மெல்லிய ஓசை கேட்டு நிமிர்ந்தான்.

"அம்மா நீங்க ஏன் எடுத்து வந்தீங்க? கூப்பிட்டிருந்தால் நானே வந்து பாலைச் சாப்பிட்டுவிட்டுப் போயிருப்பேனே?"

கௌசிக் தங்கமான பிள்ளை. குடும்பத்தின் சிரமத்தை சின்ன வயதிலேயே உணர்ந்து கொண்டு விட்டிருந்த பொறுப்பான

பிள்ளை. படிப்பிலும் கெட்டிக் காரன். இன்னும் இரண்டு ஆண்டுகள்தான் இருந்தன. அவன் படிப்பு முடிந்துவிடும். என்ஜினியர் பட்டம் பெற்றதும் ஏதாவது ஓர் இடத்தில் வேலை தேடிக்கொண்டு விடுவான். அதற்குப் பின்னர் குடும்பத்துச் சுமையைப் பெண்கள் தாங்க வேண்டிய அவசியம் இருக்காது. அந்த நினைவில் நெஞ்சு கனம் குறைந்துவிட்டது போன்ற ஒரு நினைப்பு அவளுக்கு. மகனைப் பெருமையோடு பார்த்தாள்.

கௌசிக் அப்படியே அப்பாவின் சாயல், ஆனால், பொறுமையான சுபாவம்.

"ஃபானைக் கொஞ்சம் போட்டுகிறது தானே? கொசுக்கடி உபத்திரவம் இப்போ ஜாஸ்தியா இருக்கே-" தாயார் மின் விசிறியைச் சுழலவிட்டாள்.

"பால்கனி கதவைச் சாத்த மறந்து தூங்கிடாதே- இந்தப் பக்கமெல்லாம் திருட்டு ரொம்ப நடக்கிறது." - எச்சரித்துவிட்டு அவனது தோள்பட்டையில் செல்லமாகத் தட்டிவிட்டுக் கீழே இறங்கி வந்தாள்.

முன் அறையில் எரிந்த விளக்கை அணைத்துவிட்டு, பெண்கள் இருவரும் உறங்கும் அறைக்குள் எட்டிப்பார்த்தாள். மருந்தின் தயவில் நளினி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். மன அமைதி காரணமாக சாம்பவியும் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். நழுவிக் காலடியில் கிடந்த போர்வையை எடுத்து அவள்மீது போர்த்தினாள். மங்கிய விளக்கொளியில் ஒருக்களித்து படுத்திருந்த மகளின் நிமிர்ந்த மூக்கு கண்களில் பட்டது.

இரவு சாப்பாட்டிற்குப் பின்னர் கை கழுவ பேசின் அருகே சென்ற ராமபத்ரன் சொன்னவை நினைவுக்கு வரவே... அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.



"இவருக்குத்தான், இந்த பொண்ணு மேலே எத்தனை அன்பு? உம்... ! தனக்குள்ளே கேட்டுக்கொண்டு வெளியே வந்தாள். சத்தமிடாது தங்கள் அறைக்கதவைத் திறந்து படுக்கை மீது மெல்ல வந்து உட்கார்ந்து கொண்டாள்.

ராமபத்ரன் குறட்டை எழுப்பிக்கொண்டு ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

கை துடைக்கும் துண்டோடு பின்னால் அவள் ஓடிய போது அவர் சொன்னதை மீண்டும் நினைத்துக் கொண்டாள்.

"நீ வச்ச முருங்கைக்காய் சாம்பார் ரொம்ப ஜோர். ஒரு பிடி அதிகமாகவே சாப்பிட்டுட்டேன்..." ராமபத்ரன் மகிழ்ச்சி யுடன் மெல்லச் சிரித்தார்.

ஆறு நாட்களாக இருளடைந்து கிடந்த அவர் முகத்திலே தான் எத்தனை மகிழ்ச்சி...!

"இல்லை! பேசா மடந்தையாக இருந்த உங்க செல்லப் பெண் பேசிட்டாளேங்கிற ஆனந்தத்திலே அளவு தெரியா சாப்பிட்டிருக்கீங்க. எல்லாக் குழந்தைகளையும்விட, உங்களுக்கு அவள் மேலே ஒரு துளி அதிகப்படி ஆசை. ஏன் தெரியுமா? அவள் சாயலுக்கும்- குணத்துக்கும் உங்கம்மாவைக் கொண் டிருக்கா. அதனாலே அவள் மேல் ஒரு துளி பூனைக்குட்டி விசுவாசம் இல்லையா?" மெல்லிய குரலில் கணவனைப் பரிகசித்தாள்.

கையைத் துடைத்துக் கொண்டு துண்டை அவளிடம் நீட்டிய ராமபத்ரன் முகமும், அகமும் மலர்ந்து விட்டிருந்தது.

"அதென்னவோ வாஸ்தவம் காமு. அவ அப்படியே என் அம்மாவின் அவதாரம். அதே நிமிர்ந்த மூக்கு- துரு துரு கண்கள்- சுருண்ட முடி- அந்த தாழம்பூ நிறம்.

"மனதில் பட்டதை படார்னு வெளிப்படையா பேசி விடுகிற வெகுளித்தனம்... எல்லாம் சாக்ஷாத் என் அம்மாதான்...

அதனாலேயோ என்னவோ என்னையுமறியாம சம்பா குட்டி
மேலே ஒரு துளி ஆசை அதிகம். ஒப்புக் கொள்கிறேன்..."
பூரித்துப் போனார் மகிழ்ச்சியில்.

"வெளிப்படையாகப் பேசின உங்கம்மா பொல்லாதவள்னு
எல்லார்கிட்டேயும் பட்டம் வாங்கிண்டு போனாள். மனசிலே
மறைச்ச வச்சுக்கத் தெரியாம உள்ளத்தை வெளியே கொட்டி
விடுகிறாள் உங்க பெண். அதனாலே என்னென்ன கஷ்டங்களை
அனுபவிக்கப் போகிறாளோன்னு எனக்கு அவளைப்பத்தி
சதா கவலை.

"எனக்குக் கவலையில்லை. அவளுடைய ஃராங்க் நேச்சரப்
பத்தி ரொம்பப் பெருமைப்படுகிறேன். உள்ளொன்று வச்சு
புறமொன்று பேசுகிறவங்களை எனக்குக் கட்டோடு பிடிக்காது.
அதனாலேயே என்னவோ, சம்பா குட்டிக்கு என் மனசிலே
ஒரு தனி இடம்..." மகிழ்ச்சியுடன் பேசினார்.

என்னென்னவோ சிந்தனைகள் மெல்ல புரண்டு அவள்
பக்கமாகத் திரும்பிப் படுத்த கணவனது முகத்தை
விடிவிளக்கின் மெல்லிய ஒளியில் உற்றுப் பார்த்தாள்.

சமீபத்தில்தான் லேசாக அவருக்கு வழுக்கை காணத்
தொடங்கியிருந்தது. காதோரத்து முடியில் சிறிது நரை. உதட்
டின் ஓரங்களில் மெல்லிய சுருக்கம். இவைகளைத் தவிர,
அவள் கண்களுக்கு அவரும் அன்று பார்த்தாளே... அதே
போல்தான் இன்றும் காணப்பட்டார்.

"சிலுக் சிலுக்கென்று கண்ணாடி வளையல்கள்." என்றாரே...
தனக்குள் எண்ணி மெல்லியதாக புன்னகைத்துக் கொண்டாள்.
கூரை முகட்டைப் பார்த்தபடியே... அந்த நினைவுடனே
ஒன்றிப் போனாள். இன்னமும் இந்த நிகழ்ச்சியின் இன்பம்
நெஞ்சை சிலிர்க்கத்தான் செய்தது. ஆச்சரியம்.

முப்பத்திரண்டு வருஷங்களுக்கு முன்னர் சம்பிரதாயங்களும்
பழக்க வழக்கங்களும் பலமாக சமூகத்தை இறுக்கிப் பிடித்துக்



கொண்டிருந்த அந்த நாட்களிலேயே அவர் அவளைக்
காதலித்தல்லவா கல்யாணம் பண்ணிக் கொண்டார்.

திருச்சி மாவட்டத்து வளையநத்தம் கிராமத்துப் பெண்
அவள். அப்பா கிராமத்து போஸ்ட் மாஸ்டர். மூத்த பெண்ணுக்
குக் கல்யாணம் செய்து கொடுத்து கை சளைத்துப் போயிருந்
தார். இரண்டாவது மகள் படித்து முன்னுக்கு வரட்டும்
என்று திருச்சிக்கு கல்லூரிப் படிப்புக்கு அனுப்பியிருந்தார்.
பி.ஏ. படிப்பு முடிந்தவுடன் ஹாஸ்டலிலிருந்து ஊருக்கு
வந்திருந்தாள் அவள். மேற்கொண்டு என்ன செய்வது என்ற
குழப்பம்.

ஒருநாள் காலை. ஒரு கரண்டி சர்க்கரையைக் கடனாக
வாங்கி வர, அம்மா அவளை அடுத்த வீட்டுக்கு அனுப்பினாள்.
பக்கத்து வீட்டு பசுபதி மனைவி வேதா... அம்மாவின்
நெருங்கிய தோழி.

வேகமாக உள்ளே வந்தவள் கூடத்தில் நின்று கொண்டிருந்த
வாலிபனைக் கண்டு திகைப்புடன் தயங்கி நின்றுவிட்டாள்.
அவனும் மலைத்துப் போய் அவளையே விழுங்கி விடுகிறவன்
போல் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

"யாரு?... காமாக்ஷியா!... வாம்மா" உள்ளிருந்தபடி வேதா
மாமி குரல் கொடுத்தபோதுதான் அவர்களுக்கு விழிப்பு
வந்தது.

அப்படி பார்த்த அளவிலே, மயங்கி ஒன்றிவிட்ட மனம்...
காதல் ஈர்ப்பு... கவர்ச்சி... என்னவோ ஒரு பிணைப்பு.

ஆசைக்கு ஒரு பெண்- ஆஸ்திக்கு ஒரு பிள்ளை. அப்படிப்
பட்ட குடும்பம் அவர்களுடையது. அத்தனை சொத்தையும்
கட்டியாளப் பிறந்த மகன்மேல் தாயாருக்கு உயிர். அவன்
படிப்பு- அழகு- அந்தஸ்து- வேலை இவைகளுக்கு ஏற்ற
ஒரு மருமகளை சல்லடை போட்டு சலித்துத் தேடிக்கொண்

டிருந்தவள்... கிராமத்து போஸ்ட்மாஸ்டர் மகள் காமாக்ஷியையா ஏற்பாள்? அவளுக்குக் கொஞ்சமும் விருப்பமே கிடையாது. அதனால் வீட்டில் எத்தனை சண்டைகள், விவாதம்- கண்ணீர், பட்டினி- பயமுறுத்தல்- ஒன்றுக்கும் பிள்ளை மசியவே யில்லை. ஒரே பிடிவாதமாக இருந்தான். முடிவில் அரை மனதுடன் தாயார் சம்மதித்தாள். காசு பணம் அதிகம் செலவழிக்காது கிராமத்து முருகன் கோவில் மண்டபத்திலே மிக எளிய முறையில் அவள் திருமணம் நடந்தேறியது.

நன்றாக வாழ்ந்த காலத்திலே காமாக்ஷிக்கு வாழ்க்கையில் ஒரு குறையும் இருக்கவில்லை. வைர நெக்லஸூம், காஞ்சிபுர பட்டுச் சேலையுமாக அவள் மினுக்கினாள். பங்களா- கார் சமையற்காரி- வேலையாட்கள் என்று அட்டகாசமான வாழ்வு... ஒகோன்னு வாழ்ந்தவர்கள்தான் தடால் என்று சரிந்து போய் பற்றாக்குறை; தத்தளிக்கும் சாதாரண மனிதர்களாகி விட்டனர். இப்போது அதனால் என்ன?

அவளுக்கும் அவர் மேலிருந்த அன்பில் ஒரு சிறு மாற்றம் கூட கிடையாது. ஏழைப் பெண்ணான தன் மீது அன்பு காட்டி மணந்து கொண்டு தன் வாழ்வை மலர வைத்தவர் என்று அவர் மீது பெருத்த மதிப்பு- பக்தி- பாசம்- நன்றி. உணர்ச்சிப் பெருக்கில் கண் இமைகளைக் கனத்த கண்ணீரை மெல்ல சமாளித்துக் கொண்டாள்.

அமைதியுடன் உறங்கும் அவரைப் பரிவுடன் பார்த்தாள். அந்தக் குடும்பத்தின் மீது அவருக்குத்தான் எத்தனை பாசம்! குழந்தைகள்மீது கொள்ளை ஆசை. நளினிக்கு எப்படியாவது ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்று எத்தனை தவிப்பு?

அந்த நான்கு வருஷங்களில் அவளுக்கு வந்த வரன்கள் எத்தனை?



"எங்கள் பையன் ஐந்தடி- பத்து அங்குலம். உங்கள் பெண்ணின் உயரம்?" இன்ச்டேப்புடன் வந்த வரன்கள் சில.

"நாற்பது பவுன் நகை போட்டால் போதும். பிறகு சீர்வரிசை உங்கள் இஷ்டம். வரதட்சணை என்பதில் எங்களுக்கு நம்பிக்கை யில்லை. டில்லியிலிருந்து நாங்கள் வரவேண்டும். ரயில் செலவுக்கு மட்டும் கையில் எட்டாயிரம் கொடுத்தால் போதும்" பேரம் செய்தார் ஒருத்தர்.

"பெண் கருப்பா?" எடுத்த எடுப்பிலே உதறிவிட்டு ஓடின வர்கள் பலர். "கால் ஊனம்னு முன்னாடியே ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் வந்திருக்கவே மாட்டேம்." சூடாகப் பேசி விட்டுப் போனார் மற்றொருத்தர்.

ஒவ்வொரு தடவையும் வருகிறவர்களுக்கு சொஜ்ஜியும், பஜ்ஜியும் செய்து வைத்து ஞாயிற்றுக்கிழமைப் பொழுதை நிம்மதியாகக் கழிக்கமுடியாது. பரபரவென்று பாடுபட்டு, வந்தவர்களை உபசரித்து பெண்ணை அலங்கரித்து- அவர்கள் முன் கொண்டு நிறுத்தி கேட்ட கேள்விகளுக்குப் பொறுமை யோடு பதிலளித்து- பலவிதத்திலும் பாடு பட்டதற்குப் பலன்...? ஏமாற்றம்.

நான்கு வருஷ காலமாக முந்நூறுக்கு மேற்பட்ட ஜாதகங் களைப் பார்த்தாகி விட்டது. முப்பது பேருக்கு மேல் வந்து பெண்ணைப் பார்த்துவிட்டுப் போய் விட்டனர். நளினியின் கல்யாணம் கிணற்றில் போட்ட கல்லாகத்தானிருந்தது.

பெண்களுக்குக் கல்வி சொத்துரிமை. பொருளாதார சுதந்திரம் இவைகள் கிடைத்துவிட்டால், இந்த வரதட்சணை சீர் விவ காரம் தானே மறைந்தோடிவிடும் என்று தான் சொன்னார்கள். அவள் காலமே தேவலைபோல்... பெண்கள் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ள இந்தக் காலத்தில், கல்யாணம் என்பது பெண்ணைப் பெற்றவர்களுக்கு இன்னமும் பெரும் பிரச்சனை யாக அல்லவா இருக்கிறது?...

நளினிக்கு வரப்போவதுமுப்பத்தோராவது வரன்.

இவன் வந்து என்ன சொல்லப் போகிறானோ...? கவலையுடன் அவள் மெல்லப் புரண்டு படுத்தாள்.

எலக்ட்ரிக் பில் கட்டியதுபோக வீட்டுச் செலவுக்கு கையிலிருந்தது நாற்பது ரூபாய்தான். மாதம் முடிய பத்து நாட்கள் இருந்தன. அதை வைத்துக்கொண்டு மீதி நாட்களை எப்படியோ ஓட்டவேண்டும். இப்போது அந்தப் பணத்திற்கும் கணவன் செலவு வைத்து விட்டாரே!

வருகிறவர்களை உபசரிக்க என்ன தயாரிக்கவேண்டும் என்று ராமபத்ரன் ஏற்கெனவே சொல்லிவிட்டிருந்தார்.

பாதாம் கேக்... மிக்ஸர்... காப்பி...

கடையில் வாங்கக் கூடாது. வீட்டுத் தயாரிப்பாக இருக்க வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு வேறு. இவைகளுக்கு என்ன செலவாகும்... என்று மனதிற்குள்ளே கணக்கிட்டபடி கண்களை மூடிக்கொண்டாள். அயர்வு தாங்காது அவளையும் மறியாது உறங்கி விட்டாள் காமாக்ஷி.

அன்று சாம்பவிக்கு அரை நாளைக்குத்தான் வேலை. கைப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு மல்லிகாவுடன் அவள் பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். வீதியின் திருப்பத்திலிருந்த பழக்கடையைப் பார்த்ததும் அவளுக்குச் சட்டென்று நினைவு வந்தது.

"சித்த இரு... தோழிக்கு உத்தரவிட்டபடி அவள் கடையை நோக்கி விரைந்தாள். ஆறு சாத்துக்கொடி. ஒரு சீப்பு மலைப் பழம் இவைகளை வாங்கி அவசரமாக, கொண்டு வந்திருந்த துணிப்பையில் போட்டுக் கொண்டாள்.

மல்லிகாவின் மண்டை வெடித்தது. "என்ன விசேஷம்? யாருக்கு இதெல்லாம்?" ஆவலுடன் விசாரித்தாள்.



"நாளைக்கு எங்க நளினியைப் பெண் பார்க்க வருகிறாங்களாம். அம்மா இவைகளை வாங்கிக்கொண்டு வரச் சொன்னாங்க."

"பையன் யாரு?"

"யார் பார்த்தா இன்னும்?"

"கல்யாணம் என்பது பெண்ணுக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு பெரிய சோதனையாக இருக்கு. முதலில் கோத்திரம் அமையணும். பின்னால் ஜாதகம் பொருந்தணும்- அதற்குப்பிறகு பெண்பார்க்கும் படலம். அவன் எப்படி வேணுமானாலும் இருக்கலாம்-ஆனால் பெண் மட்டும் சிவப்பா, அழகா இருக்கணும்- பாடத்தெரியணும்- ஆடத்தெரியணும்- சமைக்கத் தெரியணும்- உத்தியோகம் பார்ப்பவளாக இருந்தால் ரொம்ப மேல்- அத்தோட அவர்கள் கையில் கொடுக்க அப்பா பையில் பணம் கனமாக இருக்கணும்-வைரத்தோடு -தங்கநகை வெள்ளிகூஜா- சீர்வரிசைகள் எக்ஸெட்டிரா- எக்ஸெட்டிரா... சாம்பவி! இப்படியெல்லாம் பல கட்டங்களைத் தாண்டி ஒரு புருஷனை நாம் விலைகொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டியது அவசியமா?"

மல்லிகா மனக்கசப்புடன் பேசினாள்.

"இந்த வழக்கங்களை நானும் கட்டோட வெறுக்கிறேன். என் பெற்றோர்களுக்கு எப்படியாவது பெண்களுக்குக் கல்யாணமானால் போதும் என்ற நினைப்பு. அதனால் சம்பிரதாயங்களைப் பிடித்துக்கொண்டு தொங்குகிறாங்க... ஆனால் ஒரு வேடிக்கை தெரியுமா? அந்தக் காலத்தில் எங்கப்பா எங்கம்மா காதல் திருமணம் செய்து கொண்டவர்.

அந்தக் காலத்து ஆண்பிள்ளைகளுக்கு இருந்த மனோதிடம், இந்தக்காலத்து இளவட்டங்களுக்குக் கிடையாதுன்னு என் அபிப்பிராயம். தொங்கு மீசை, கன்னத்தில் காடுபோல் கிருதா- பாரின்செண்ட்- பாடிபிட்ஷர்ட்- பெண்களைக் கண்டதும்

ஹாய்ன்னு ஓடிவந்து வெட்டிப் பேச்சு- இவைகளுக்குத் தான் லாய்க்கு! உண்மையாக காதலிக்கத் தெரியாது! கல்யாணம் னதும் அம்மாவின் புடைவைத் தலைப்புக்குப் பின்னால் புகுந்து கொள்வாங்க.!"

ஆத்திரத்துடன் பேசினாள். ஒரு இளைஞன் அவளை சில மாதங்கள் காதலித்து விட்டு, வீட்டில் பார்த்த வேறு ஒரு பெண்ணை மணந்து கொண்டு மறைந்து விட்டான். புறக்கணிக்கப் பட்டதின் புண் அவள் உள்ளத்தில் இன்னமும் ஆறவில்லை.

சாம்பவி மௌனமாக நடந்தாள்.

மல்லிகாவின் ஆத்திரம் அடங்கவில்லை.

"ரெட்லைட் ஏரியாவிலே இருக்கிற பெண்களே நம்மை விட ஒருபடி மேல் என்று நினைக்கிறேன்."

திடுக்கிட்டுத் தோழியின் முகத்தைப் பார்த்தாள் சாம்பவி

"ஆமாம்! அங்கே ஒருத்தியை அடைய ஒருத்தன் விலை கொடுக்கிறான். ஒரு புருஷனை அடைய நாம் விலை கொடுக்கிறோம். நம் சமுதாயத்தில் சம்பிரதாயங்களை ஒட்டி நடக்கும் இந்த கல்யாணம் ஒரு வகையில் சட்டத்திற்குட்பட்ட விபச் சாரம்- என்ன சொல்றே நீ?" ஆவேசத்துடன் கேட்டாள்.

சாம்பவி அதை முற்றிலும் ஒத்துக்கொள்ளவில்லை. தோழியை எதிர்த்துப் பேச மனமும் இல்லை. அவள் வாழ்க்கை யில் காதலனால் கைவிடப்பட்டு நொந்து போனவள் என்ற அனுதாபம்.

"என்னை எனக்காகக் கல்யாணம் செய்துகொள்ள எவன் முன் வருவானோ அவனைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கப் போகிறேன். அவன் ஜாதி, மதம் இதெல்லாம் பற்றி எனக்கு அக்கறை இல்லை. என்னை மதிக்கிறவனைத் தான் நான் ஆண்மகனாக மதித்து அவனோடு வாழ்வேன்."



"பேஷ்! அப்படித்தான் நாம் எல்லோரும் புரட்சி பண்ணனும். அப்பத்தான் நம் சமூகத்துக்கு ஒரு விழிப்பு வரும். பெண்களுக்கு உகந்த மதிப்பைத் தருவாங்க. கோயிலில் மட்டும் தாயே பராசக்தி- அம்பிகே அப்படின்னு கன்னத்தில் போட்டுக் கொண்டு விட்டால் மட்டும் போதாது. வீட்டில் உள்ள பெண் மனித தெய்வம்னு மனதிலே ஒரு உணர்வு ஏற்படணும். அப்பத்தான் பெண்களுக்கு கதிமோக்ஷம்!"

இருவரும் மௌனமாக மேலே நடந்தனர். இருவர் உள்ளத்திலும் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் ஆத்திரத்துடன் அலைமோதின.

## 5

ஆறாவது பிரசவத்திற்கு நாத்தனார் சரோஜாவை பாதிராத்திரி வேளையில் மருத்துவமனையில் அனுமதித்து விட்டு வரவேற்பு அறை நாற்காலியில் உடலைச் சுருட்டிக் கொண்டு காமாக்ஷி உட்கார்ந்திருந்தாள்.

"கஷ்டப் பிரசவம்- ஒரு சமயம் சிஸேரியனாக முடியலாம்." என்று நர்ஸ் நடுவில் வந்து கூறியபோது அடிவயிற்றை என்னமோ ஒரு உணர்வு பிசைந்ததே?

அம்பிகையை நினைத்து வாய்தான் தோத்திரத்தை முணு முணுத்ததே தவிர, உள்ளத்திலே விவரிக்க இயலாத ஒரு திகில்.

"பிள்ளைக் குழந்தை- சுகப்பிரசவந்தான்- தாயும் சேயும் சுகம்." என்று டாக்டர் அம்மாவே வந்து தோளைத் தட்டி ஆறுதல் கூறும்வரை தவித்துப் போனாளே? அதை விட பன்மடங்கு வேதனையும்-திகிலுமாக அன்று அவள் துடித்துக் கொண்டிருந்தாள்.

சனிக்கிழமை மாலையே பாதாம் கேக்கும்-மிக்ஸரும் தயாராகிவிட்டன. மறுநாள் காலை அவர்கள் வீடு திமி லோகப்பட்டது. நல்லவேளை. ஆபத்சகாயனாக வேலைக்காரி செல்வியின் கணவன் காளிமுத்து வந்து சேர்ந்தான். மண் வெட்டியையும், கூடையையும் அவன் கையில் எடுத்துக் கொடுத்து தோட்டத்தை சுத்தப்படுத்தச் சொன்னாள். வீட்டுக்குள் நுழைய முடியாதபடி முன்பக்கத் தோட்டத்தில் புதர் மண்டிக் கிடந்தது. வரப் போகிறவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற அச்சம் அவளுக்கு.

அடுத்தபடியாக கௌசிக், புத்தகத்தைச் சிறிதுநேரம் கீழே வைத்துவிட்டு முன்னறையில் தொங்கிய ஒட்டடையைத்தட்டி, விளக்குகள்மீது ஒட்டிக்கொண்டிருந்த தூசியைத் துடைத்து ஒழுங்கு செய்ய வேண்டியிருந்தது.

சாம்பவி வரவேற்பறையில் கிடந்த பழைய சோபாக்களின் திண்டுகளுக்கு, துவைத்து இஸ்திரி போட்ட உறைகளைப் போட்டு அழுக்குத் தெரியாவண்ணம் மூடி வைத்தாள். தோட்டத்து மூலையிலிருந்த விருக்ஷிப் பூச்செடியிலிருந்து ஒரு கொத்து சிவப்பு மலர்களைப் பறித்துக் கொண்டு வந்து பூ ஜாடிக்குள் சொருகி அதைப் பார்வையான ஒரு இடத்தில் முக்காலி மீது வைத்தாள்.

பகல் உணவிற்குப் பிறகு அந்த வீட்டிலே மேலும் ஒரு பரபரப்பு உருவாகியது. ராமபத்ரனால் பத்திரிகையைப் படிக்க முடியவில்லை.

ஓய்வாக சில நிமிஷங்கள் கண்களை மூடி ஒரு குட்டித் தூக்கம் போடவும் இயலவில்லை.

உள்ளுக்கும் வாசலுக்கும் அமைதியின்றி நடந்து கொண் டிருந்தார்.

ராகு காலத்திற்கு முன்னதாக அவர்கள் பெண்ணைப் பார்க்க வருவதாகச் சொல்லியிருந்தார்கள். எந்தனை பேரோ?



குறிப்பிடவில்லை. எதற்கும் இருக்கட்டும் என்று காப்பிக்கு கொஞ்சம் அதிகப்படி பால் வாங்கி வைத்திருந்தாள் காமாக்ஷி.

மூன்று மணி அளவில் ராமபத்ரன் பீரோவைத் திறந்து சலவையிலிருந்து வந்த சட்டையும், வேட்டியும் உடுத்திக் கொண்டு வாயில் பக்கம் சென்று சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டார். சாம்பவி ஆபீஸிற்கு உடுத்த உபயோகிக்கும் ஒரு நைலக்ஸ் சேலையை அணிந்து கொண்டாள். வேலை செய்வதில் அழுக்காகிவிட்ட பழைய புடைவையைக் கலைந்து விட்டு இஸ்திரி போட்டு வைத்திருந்த பச்சை வண்ண சுங்கடிச் சேலையை எடுத்துக் கட்டிக்கொண்டாள் காமாக்ஷி. கௌசிக்கும் தயாராகி விட்டிருந்தான். நளினிக்கு மட்டும் ஒரே குழப்பம். சிறிது வருத்தம் கூட. முப்பது தடவைகள் பட்ட அனுபவம் போதாதுபோல், இப்போது ஒருத்தனிடம் அவமானப்படப் போகிறோமே என்ற குமைச்சல். சாம்பவியின் துணிச்சல் அவளுக்குக் கிடையாது. அப்பாவின் பேச்சுக்கு அடங்கிப் போகும் சாது அவள்.

அம்மா தன்னுடைய நீலப் பட்டுப் புடைவையை எடுத்துக் கொடுத்து உடுத்திக்கொள்ளச் சொன்னபோது, அவளால் மறுக்க முடியவில்லை. அதற்கு ஏற்ற ரவிக்கைகூட அவளிடம் இருக்கவில்லை. சாம்பவி தன்னுடைய சோளியைக் கொடுத்து உதவினாள்.

முகத்தைக் கழுவிப் பொட்டிட்டு, மையிட்டு அலங்கரித்து விட்டாள் அம்மா. தலையை வாரிப் பின்னி கட்டுக் கதம்பத் தைச் சூட்டிவிட்டாள். பலிபீடத்திற்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டின் உணர்வு அவளுக்கு. மனதிற்குப் பிடிக்காமலேயே அலங்கரித்துக் கொண்டாள்.

"அவர்கள் எல்லாம் வந்து விட்டாங்க?" உள்ளே ஓடி வந்த கௌசிக், பராக் கொடுத்தான்.

காமாக்ஷியின் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

"தேவி, ஜகன்மாதா! இந்த இடமாவது அமையட்டும். குழந்தைக்கு ஒரு வாழ்வு கொடு." தனக்குள்ளேயே பிரார்த்தித்துக் கொண்டாள்.

"வாங்கோ வாங்கோ..." ராமபத்ரன் உற்சாகத்துடன் உபசரித்து அவர்களை உள்ளே அழைத்து வந்தார். சமையலறையிலிருந்த படி சாம்பவி அவர்களை நோட்டம் விட்டாள்.

வாட்டசாட்டமான வழுக்கைத் தலை மனிதர்தான். பிள்ளையைப் பெற்றவனோ? பின்னால் பட்டுப் புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு வந்த அம்மாளுக்கு ஐம்பது வயதிற்குமேல் இருக்கும். ஆனால் தலையில் ஒரு நரைமுடி இல்லை. டை உபயோகிக்கிறாள் போலிருக்கிறது. அவனா மாப்பிள்ளை, கச்சலாக- ஓடிய உயரமாக- சே! நளினியைவிட கருப்பு... அந்த மீசை அவன் முகத்துக்குப் பொருத்தமாகவே இல்லையே! தூக்கலான பற்கள் வேறு. பெரிய மன்மதன் இல்லை. கூட வந்திருக்கும் இரண்டு பெண்கள் அவன் தங்கைகளா? ஒருத்தியும் அழகில்லை.... அந்த மாமியின் காதுகளிலும் அம்மாவைப்போல் சாதாரண முத்து தோடுகள்தான். நம்மைப் போலவே சரிந்து விட்டிருக்கும் குடும்பம் போலிருக்கு..." அவர்களை அளந்து கொண்டு நின்றாள்.

"ஆறு பேருக்கு சீக்கிரம் காப்பி கல" அம்மா கிசுகிசுத்து விட்டு அந்த அம்மாளையும் பெண்களையும் வரவேற்க முன்னறைக்குச் சென்றாள். காப்பி தம்பளர்களுடன் பாதாம் கேக், மிக்ஸர் நிறைந்த தட்டுகளை டிரேயில் வைத்துச் சுமந்தபடி உள்ளே வந்த சாம்பவியை வியப்போடு பார்த்தார் அந்த வழுக்கைத்தலை மனிதர்.

காதுகள் இரண்டும் கபகபவென்று எரிகின்ற உணர்வுடன் அருகிலிருந்த மேஜை மீது தட்டை வைத்தாள் சாம்பவி.



அவளையே வைத்த கண் வாங்காது மாப்பிள்ளைப் பையன் வெறிப்பதைக் கண்ணுற்ற ராமபத்ரன், தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "இவள்" என் கடைசிப் பெண்- இவளுக்கு மேலே இருக்கிறவளைப்பத்தித்தான், என் நண்பன் நாகநாதன் உங்ககிட்டே சொல்லியிருக்கார். அவளை வரச் சொல்றேன்..." தடுமாறினார். மனைவி பக்கம் திரும்பி. "நளினியை வந்து இவாளுக்கெல்லாம் நமஸ்காரம் பண்ணச் சொல்" உத்தரவிட்டார்.

உள்ளே திரும்பிவிட்ட சாம்பவி, கதவிடுக்கு வழியே காதைத் தீட்டிக்கொண்டு எதிர்பார்ப்புடன் கவனித்தாள். அவளுக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கவே இல்லை. "இந்த வரனுக்கு அப்பா இத்தனை கஷ்டப்பட்டிருக்க வேண்டாம். அம்மாவும் வீணாக உடலை அலட்டிக் கொண்டு டிபன் தயாரித்திருக்க வேண்டியதில்லை' பெருமூச்சு விட்டாள் அவள். காமாக்ஷி, அவர்களது அறைக்குள்ளே வேகமாக வந்தாள். கண்ணாடிமுன் வாரிமுடிந்த கூந்தலைச் சரி பார்த்துக்கொண்டு நின்ற நளினிக்குப் பயமாக இருந்தது.

"வாம்மா" உன்னைப் பார்க்கணும்னு அவர்கள் கூப்பிடு கிறாங்க! வந்து நமஸ்காரம் பண்ணு!' அன்போடு அழைத்தாள்- கலவரத்துடன் விழித்தாள் நளினி.

"இது எத்தனாவது நமஸ்காரம்? பெண் பார்க்க வந்தவர் களுக்கு போட்ட நமஸ்காரத்தைப் பக்தியுடன் அந்த காமாக்ஷி அம்மனுக்குப் போட்டிருந்தால்... இத்தனை நேரம் அவள் கடைக்கண் நோக்கி அருளியிருந்திருப்பாள்." துக்கம் தொண் டையை அடைத்தது அவளுக்கு.

"அம்மா? அப்பா என்னைப் பத்தின விவரத்தைச் சொல்லி விட்டாரா?"

"சொல்லியிருக்கார்! நீ கவலைப்படாதே வாம்மா" தாயார் வற்புறுத்தி அழைத்தாள்.

பாதாம் கேக் வாயில் கரைந்தது. இரண்டாவது வில்லையைப் பிட்டு வாயில் போட்டுக்கொண்டே சுற்றிலும் தமது கண்களை ஓடவிட்டார் பிள்ளையின் தந்தை. எதிர்ப்புறச் சுவரில் காணப்பட்ட இடிப்பாடுகளையும், உடைந்து போன ஜன்னலையும் அவர் உற்றுப் பார்ப்பதைக் கவனித்தார் ராமபத்ரன். முத்துக்களாக வெற்றியில் வியர்வை பூத்துவிட்டது.

"பெரியவா காலத்திலே கட்டின வீடு; குழந்தையின் கல்யாணத்துக்கப்புறந்தான் இதிலே கைவைக்கிறதாக யோசனை. இப்போ பில்டிங் மெட்டீரியல்ஸ் எல்லாம் எக்கச்சக்கமான விலை. அதனாலே ஹி....ஹி" சிரிக்க முயன்றார். நளினி அந்தப் பக்கம் வருவதைக் கவனித்த அந்த அம்மாள், திரும்பினாள். அவள் முகம் இறுகிப் போயிற்று. ஒரு தடவை பெண்ணைப் பார்த்துவிட்டு மறுபடி பார்க்கப் பிரியமில்லாதவள் போல் தரையைப் பார்த்தாள்.

பையன் முகத்திலே விருப்பு -வெறுப்பு என்ற எந்த விதமான சலனமும் காணப்படவில்லை. அவன் தந்தை தனது வழுக்கைத் தலையை மெல்ல இடது கரத்தால் தடவிக் கொண்டார்.

"பாவம் குழந்தை! நமஸ்காரம் பண்ணவேண்டாம், ஏற்கெனவே நடக்கிறதுக்கு ரொம்ப சிரமப்படுகிறாப் போலத் தெரிகிறது. குனிஞ்சு நிமிர்ந்து... இது வேறே என்னத்துக்கு கஷ்டம்" அவரது வார்த்தைகள் சுரீர் என்று பெண்வீட்டாரைத் தாக்கின.

நளினிக்கு அழுகையே வந்துவிட்டது. சமாளித்துக் கொண்டு கரம் குவித்து அவர்களை வணங்கிவிட்டு காலைத் தாங்கியபடி தத்தி நடந்து வேகமாக அங்கிருந்து போய்விட்டாள்.

"காப்பி ஆறிப் போகிறது சாப்பிடுங்கோ, காமாக்ஷி தன் துன்பத்தை மறைத்துக் கொண்டு உபசரித்தாள்.

வேண்டா வெறுப்பாக காப்பியை ஒரே மூச்சாகக் குடித்து முடித்தார் பையனின் தந்தை. 'இவ்வளவு பெரிய ஊனத்தை



வைத்துக் கொண்டு பெண் பார்க்க அழைத்து விட்டானே இந்த மனிதன்? என்ற ஆத்திரம் அவருக்கு அடக்கமுடியவில்லை.

"உங்களை எங்கேயோ பார்த்தாப்பல இருக்கேன்னு வந்ததிலிருந்து யோசிச்சிண்டு இருந்தேன். இப்பத்தான் ஞாபகத்துக்கு வர்றது. இண்டர்நேஷனல் பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரீஸிலே, நீங்க சீஃப் அக்கௌண்டென்டாக இருந்தீங்கன்னு நினைவுக்கு வந்தது. என் மாமா பிள்ளை கூட அங்கேதான் வேலை பார்க்கிறான்." சொல்லிவிட்டு நிறுத்தினார்.

முதுகுத்தண்டு சில்லிட்டுவிட்டது போன்ற ஒரு பயங்கர உணர்வு- மூக்கும் சிவக்க -நெஞ்சுபதற ராமபத்ரன் தடுமாறினார்.

"இப்போ நான் அங்கே வேலை பார்க்கலை..."

"அப்படித்தான் கேள்விப்பட்டேன். அப்போ நாங்க வரோம். என் தாயார் கிராமத்திலே இருக்கிறார். அவர்களையும் கலந்து ஆலோசித்துவிட்டுக் கடிதம் போடுகிறோம்." -கிளம்பினார் அவர்.

காமாக்ஷி வேகமாக வந்து பெண்களுக்கு குங்குமம் வெற்றிலை பாக்குக் கொடுத்து விடைகொடுத்தாள்.

வாயில்வரை சென்று அவர்களை வழிவிட்டு வந்த ராமபத்ரன் ஆறாத வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு அப்படியே பொத்தென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்து விட்டார்.

"திமிர் பிடித்தவன்- எப்படி பொடி வைத்துப் பேசி விட்டுப் போகிறான்? கடவுளே! அந்த அவமானம் என் கட்டையோடு தான் போகும் போலிருக்கு..." அவர் நெஞ்சை என்னவோ அமுக்கியது போன்றதொரு வலி- கஷ்டத்துடன் அடக்கிக் கொண்டார். கண்களை மூடியபடி தமது எண்ணங்களுடன் புதைந்து போனார்.

சில வருஷங்களுக்கு முன்பு நடந்தது. இன்னமும் சிலர் நினைவில் அது நின்றது. அனாவசியமானதொரு குற்ற உணர் வில் அவரை அடிக்கடி தவிக்கச் செய்த ஒரு துன்ப நிகழ்ச்சி. புதையுண்டு கிடந்த பிணத்தைத் தோண்டி எடுப்பதுபோல்- அவர் மறக்க முயற்சித்ததை மகராஜன் நினைவுபடுத்தி விட்டுப் போய்விட்டான்.

அப்போது அவர் இண்டர்நேஷனல் பிளாஸ்ட்டிக் இண்டஸ்ட்ரீஸில் வேலை பார்த்து வந்தார், அதன் முதலாளி பிரபு. அவருடைய நெடுநாளைய நண்பன், உண்மையான தோழன். அம்பத்தூர் தொழிற்பேட்டையில் பெரிய தொழிற் சாலை. அண்ணா சாலையில் ஆபீஸ்.

அந்த நிறுவனத்தில் சீஃப் அக்கௌண்டெண்டாக கை நிறைய சம்பளம்- கார்- டெலிபோன் வசதிகளுடன் அவர் ஓகோ என்று கொடிகட்டி வாழ்ந்துகொண்டிருந்தார். மூத்த பெண்ணுக்கு அந்த ஜம்பத்தில்தான் பூமியை விற்று, பெரிய இடத்தில் கொடுத்தார். ஆபட்ஸ்பரியில் கல்யாணம்- ரிஸப்ஷனுக்கு தஞ்சை சகோதரிகளின் பாட்டு- அமர்க்களப் படுத்தி விட்டார்.

தொழிலகத்திலே இருநூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளிகள் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்காக நடத்திய பண்டகசாலையை மேற்பார்வையிடும் பொறுப்பு அவருடைய தாக இருந்தது. கூட அதில் உதவிய சின்னசாமியை அவர் மிகவும் நம்பிவிட்டார். அவன் அந்த ஆபீஸில் வேலை பார்த்த உதவி அக்கௌண்டெண்ட். அவன் அந்த வருஷ ஆரம்பத்தில் திடீரென்று துபாய்க்கு வேறு வேலை தேடிக் கொண்டு போய்விட்டான்.

அந்த வருஷக் கணக்கைச் சரிபார்த்தபோது தான் விளங் கியது. கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் ரூபாய்களுக்கு கணக்கு சரிக்கட்டி வரவில்லை. ஆனால் அதைப் பற்றிய செலவினங்கள்



குறித்த கடிதங்களில் அவர் கையெழுத்து தான் இருந்தது. கம்பெனி ஆடிட்டர். முதலாளியிடம் இதைப்பற்றிப் பேசி விட்டார்.

பிரபு அவரைக் கூப்பிட்டனுப்பி தனியே இதைச் சொன்னபோது அவர் நடுநடுங்கிப் போனார். "நான் இல்லை பிரபு! அந்த மோசக்காரன் சின்னசாமியின் வேலை, ஆசாமி பழியை என்மேல் போட்டுவிட்டு மறைந்துவிட்டான். முட்டாள் நான். அவனை முழுக்க நம்பினேன். நீட்டின கடிதத்தில் கையெழுத்துப் போட்டேன்; மோசம் பண்ணி விட்டான். என்னை நம்பு- நான் ஒரு பாவமும் அறியாதவன். நல்ல கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன். நண்பனுக்குத் துரோகம் செய்வேனா? மனச்சாட்சிக்குப் பயந்தவன்- மானஸ்தன் பிரபு! என்னை நம்பு- சத்தியமா, எனக்கும் இந்தக் கையாடலுக் கும் சம்பந்தமே கிடையாது...." அலறி அழ வேண்டும் போன்ற ஆவேசமான துயரம்- ஆனால், திகிலில் அவருக்குப் பேசவே முடியவில்லை.

"பிரபு! நான் எடுத்திருப்பேன்னு நீ நினைக்கிறீயா?" கேட்டு விட்டு பச்சைக் குழந்தையைப் போல் விசும்பி விசும்பி அழுதுவிட்டார். அன்பும் ஆதரவும் காட்டிய உயிர் நண்பனின் மதிப்பிலே தாழ்ந்து விட்டோமே என்று அவர் உள்ளம் உடைந்து ஓலமிட்டது.

ஆசனத்தினின்று எழுந்து வந்து பிரபு அவரது தோளைத் தழுவிக் கொண்டு சமாதானப்படுத்தினான். "டேக் இட் ஈஸி! இதை இப்பவே கண்டுபிடிச்சது நல்லதா போச்சு. ராமு! நான் உன்னை நம்பறேன்- என் பார்ட்னர் நம்புவானோ என்னவோ? அதை விட்டுத் தள்ளு -துண்டு விழும் கணக்கை நீ எப்படியாவது சரிக்கட்டி விடு. இந்த விஷயம் இந்த அறைக்கு அப்பால் போகாது. அதுக்கு நான் கியாரண்டி." ஆறுதல் சொன்னான்.

அன்று இரவு, தமது அறைக் கதவைச் சாத்திக்கொண்டு குழந்தைகளின் காதில் படாவண்ணம் மெல்லிய குரலில் காமாக்ஷியிடம் சங்கதியைச் சொன்னபோது அவளும் அதிர்ந்துதான் போய்விட்டாள்.

"நான் திருடியிருப்பேன்னு நீயும் நினைக்கிறாயா காமு..." கேட்டுக்கொண்டே அவள் தோள் மீது சாய்ந்து கொண்டு வேதனை தாளாது விக்கி அழுது விட்டார். தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் காமாக்ஷி. "ஆண் பிள்ளை-நீங்கள் இப்படி தைரியத்தை இழக்கலாமா? பிரபு ஸார், சொன்னபடி செய்துடுவோமே..." ஆறுதலாகச் சொன்னாள். தன் முந்தானை யால் அவர் முகத்தைத் துடைத்தாள். அவள் வார்த்தைகள், வேதனையில் வெந்த அவர் மனதிற்கு எத்தனை இதமாக இருந்தன!

"அவ்வளவு பணத்துக்கு நாம் எங்கே போவோம்?" - அரற்றினார் அவர்.

"என் நகைகள்-பாங்கில் நாம் சேர்த்து வச்சிருக்கிற பணம்- எல்லாத்தையும் போட்டு, மீதிக்கு வீட்டு மேலே கொஞ்சம் கடன் வாங்கி சரிக்கட்டிடுவோம்."

அப்படியே செய்தார். அதற்குப் பின்னரும் கொஞ்ச காலம் அங்கேயே வேலை செய்து கொண்டு தானிருந்தார். ஆனால், தன்னைப் பற்றி மற்ற வேலையாட்கள் பின்னால் பேசுவதைக் கேட்டு வெட்கத்தில் குன்றிப் போனார் அவரால் பொறுக்கவே முடியவில்லை.

பிரபுவின் உதவியால் மற்றொரு நிறுவனத்தில் வேலைக் கமர்ந்தார். கார்-டெலிபோன் வசதிகள் இல்லாத இடம். சம்பளம் முந்தியதில் பாதி. வீட்டின் மேல் வாங்கியிருந்த கடனுக்கு வட்டி கட்ட- குடும்பத்தை நிர்வகிக்க அவர் ஒருத்தரின் சம்பளம் போதவில்லை. அப்போதுதான் நளினி சி.ஏ. முடித்து விட்டிருந்தாள். அவளுக்கு ஒரு நல்ல வேலை



கிடைத்தது. சாம்பவியும் செகரட்டேரியல் கோர்ஸ் முடித்து விட்டு- உடனடியாக அந்த மருத்துவமனையில் டைப்பிஸ்டாகச் சேர்ந்தாள். காமாக்ஷி இத்தனை வயதிற்குப் பின் தன் சிநேகிதி நடத்தி வந்த தனியார் பள்ளிக்கூடத்திலே கணக்கு ஆசிரியை யாக வேலைக்கு அமர்ந்தாள்.

இத்தனை பேரும் உழைத்தும் அவர்கள் பற்றாக்குறையால் திண்டாடிக் கொண்டிருந்தனர். இரண்டாவது பெண் கல்யாணத்திற்கும் வீட்டின்மேல் தான் கடன் வாங்கியிருந்தார். நளினிதான் மற்ற இருவரையும் விட அதிகம் சம்பாதித்தவள். ஆயிரத்து நூறுக்கு மேல் அவளுக்கு சம்பளம். கல்யாணமாகி அவள் புக்ககம் போய் விட்டால், அவர்கள் மிகவும் கஷ்டப் படுவார்கள் உண்மை தெரிந்தும் ராமபத்திரன் அஞ்சவில்லை.

"பெண் குழந்தைகள் சம்பாதிப்பதை எத்தனை காலம் பெற்றுக் கொண்டு வாழ்வது? காலாகாலத்தில் அவர்களுக்கு ஒரு வழி செய்ய வேண்டியது அவரது கடமையாச்சே." பொறுப்புணர்ச்சியின் தூண்டுதல் பேரில்தான் அந்த வரன் வீட்டவர்களை நளினியைப் பார்க்க வரும்படி அழைத்திருந் தார்.

வந்தவன் அவரை அவமானப்படுத்திவிட்டு- அந்தக் குழந்தையின் மனதையும் புண்படுத்திவிட்டுப் போய் விட்டானே பாவி!

படுக்கைமீது குப்புறப்படுத்துக் கொண்டு விசும்பி அழுது கொண்டிருந்தாள் நளினி. நொண்டி- கருப்பு- என்ற வார்த்தை களைக் கேட்டுக் கேட்டு அவள் நொந்து போயிருந்தாள். இதைக் கேட்கத்தானா அலங்காரம் செய்து கொண்டாள்? அவளால் துக்கத்தைக் கட்டுப் படுத்திக்கொள்ள முடிய வில்லை- அழுதாள்.

சாம்பவி, தன் சகோதரியைச் சமாதானப்படுத்த முயன்றாள். "அவன் கிடக்கிறான் இடியட். எனக்கு இந்த வரனே கொஞ்சம்

கூட பிடிக்கலை. அவன் மூச்சியைப் பார்த்தியா? துண்டு பீடி பொறுக்கிறவனாட்டம், ராஸ்க்கல்...டிராகுலா பல்லை வச்சுண்டு முழி முழின்னு முழிக்கிறான். சே! இந்த பரந்த பாரத நாட்டிலே இவன்தான் கடைசி மனிதன்னு சொன்னால் கூட நான் அவனைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன். அத்தனை மட்டமான வரன். நளினி உனக்கு இவன் வேண்டாம். எழுந்திரு- முகத்தை அலம்பிக்கோ- இந்தாப்பா, இனிமேலே இது மாதிரி யாரையாவது கொண்டு வரட்டும்- நான் பேசிக்கிறேன்." அக்காவை அணைத்துக் கொண்டு ஆறுதல் சொன்னாள்.

"நீங்க இங்கேயா வந்து உட்கார்ந்திருக்கீங்க? உள்ளே காணோமேன்னு உங்களைத் தேடினேன்."- வியப்புடன் கேட்டுக் கொண்டு காமாக்ஷி வாசலுக்கு வந்தாள்.

"காமு! அந்த மடையன் என்ன சொன்னான் பார்த்தியா?"

"அதுக்கா இப்படி இடிஞ்சுபோய் உட்கார்ந்திருக்கிறீங்க. அந்த அம்பாளுக்கும், நம்ப மனசாட்சிக்கும் உண்மை தெரியும். அதுக்கு மேலே வேறே என்னவேணும்? விட்டுத் தள்ளுங்கோ. நளினிக்குன்னு ஒருத்தன் பிறந்திருப்பான்- தானே வருவான்- கவலைப்படாதீங்க... மத்யானம் கூட நீங்க தூங்கலை. போய் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கோங்க-அதுக்குள்ளே நான் சமைச்சுட றேன்... எழுந்திருங்கோ- ஒரு மணி நேரம் தூங்கினா உடம்பும் மனசும் கலகலப்பாகிடும்" அதட்டி அவரை உள்ளே அழைத்துச் சென்றாள்.

மறுநாள் திங்கட்கிழமை -அன்றும்- அதற்கடுத்த நாளும் சாம்பவி லீவு போட்டு விட்டிருந்தாள். மூன்றாவது நாள் ஆபீசில் அவளைச் சந்தித்தபோது மல்லிகாவுக்கு ஆவலை அடக்க முடியவில்லை.

"அவங்கள்ளாம் வந்தாங்களா? பையனை உங்களுக்குப் பிடிச்சிருந்ததா?"



"அவனைப் பார்க்க சகிக்கலை- எங்களுக்குப் பையனைப் பிடிக்கலை- அவங்களுக்கு எங்களைப் பிடிக்கலை. ஜாதகம் பொருந்தலை. மன்னிக்கவும் என்று நேத்து அந்த மனிதன் ஒரு கார்டு போட்டிருந்தார். இன்லெண்ட் கவர் வாங்கி நாசூக்காக எழுதிப் போடக்கூட மரியாதை தெரியாத மடையன்."

"கிடக்கான்! ஹி ஈ நாட் தி லாஸ்ட் மேன் ஆன்தி எர்த்... எங்களுக்கு ஊனமான பெண் பிடிக்கலை- அப்படின்னு வெளிப்படையா சொல்றதுக்குப் பயம்..." சீறினாள் மல்லிகா.

"இந்த மாதிரியான கோழை மனப்பான்மையைத் தான் நான் வெறுக்கிறேன்... நளினிக்கு வாழ்வு வராமலா போகும்? பார்க்கலாம்..." முணுமுணுத்தாள் சாம்பவி.

அன்று பகல் சாப்பாட்டு நேரம், தொலைபேசி கிணு கிணுத்தது. மல்லிகா மட்டுமேதான் ஆபீஸ் அறையில் இருந் தாள். எழுந்து சென்று அதைக் கையில் எடுத்தாள்.

மறுபக்கத்தில் பரபரத்த குரலில் தெரிவித்த செய்தியைக் கேட்டவள் பயத்தில் உறைந்தே போய்விட்டாள்.

"உண்மையாகவா...?" எச்சிலை விழுங்கிக் கொண்டாள். ரிசீவரை வைத்து விட்டுக் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். நெஞ்சு பக்பக் கென்று அடித்துக் கொண்டது. கண்களில் நீர் முட்டிக் கொண்டு எழுந்தது- சுதாரித்துக் கொண்டாள். பரிசோதனைச் சாலையின் பல பகுதிகளுக்குள்ளும். ஓடினாள்- தேடினாள். "சாம்பவி! சாம்பவி" கண்ணாடிக் கதவுகளைப் பொடியாக்கி விடுவது போன்று உரத்த குரலில் தோழியைத் திகிலுடன் கூவி அழைத்தாள்.

முகத்தைக் கழுவி- பவுடர் பூசி- பொட்டிட்டு சீராக்கிக் கொண்டிருந்த சாம்பவி, அந்த அறையினின்று வெளியே வந்தாள்.

"காட்டுக் கத்தலா ஏன் கத்தறே; லஞ்ச் டைம் இன்னும் முடியலையே..." கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்.

மல்லிகாவின் மேனி பதறியது. ஒரே எட்டில் தோழி அருகே வந்து அவளது தோளை ஆதரவுடன் பற்றிக் கொண்டாள். கைப்பையைத் திறந்து பத்து ரூபாய் நோட்டொன்றைத் துழாவி எடுத்தாள்.

"உனக்கு ஒரு போன் வந்தது. உன்னைக் காணலே- நான் எடுத்தேன். உன் தம்பி பேசினான்."

"அப்பாவுக்கு உடம்புக்கு ஏதாவது..." பதட்டத்தோடு கேட்டாள் சாம்பவி.

"உன் அப்பாவுக்கு ஒண்ணுமில்லை. நளினிக்கு ஒரு விபத்து ஏற்பட்டு விட்டதாம். அப்பா, அம்மா எல்லோரும் ஜெனரல் ஆஸ்பத்திரில் தான் இருக்காங்களாம் உன் தம்பி உன்னை அங்கே வரச் சொன்னான்; உனக்காக வாசலில் காத்துண்டு நிற்பானாம். அதனாலே நீ உடனே ஒரு டாக்ஸி வச்சிண்டு போ. டாக்டர் அம்மா உத்தரவை வாங்கிண்டு உடனே கிளம்பு அவசரம்..." கூறிக்கொண்டே ரூபாய் நோட்டை அவள் கரத்தில் திணித்தாள்.

பயங்கர உணர்விலே உள்ளமும் உடலும் மரத்துப்போன நிலை, சாம்பவி மெல்லிய குரலில் கேட்டாள்;

"மல்லிகா உண்மையைச் சொல்லு... நளினிக்கு ரொம்ப ஆபத்தில்லையே?" அவள் கண்கள் குளமாயின.

"இல்லே அடிபட்டிருக்கிறது. நீ உடனே போயேன். பேசிண்டு நிக்காதே... வா... டாக்டர் அம்மா கிட்ட போய் சொல்லி உத்தரவு வாங்கிக்கலாம் உன்னை ஒருடாக்ஸியில் ஏற்றி விடறேன்." அழைத்துக்கொண்டு போனாள்.



டாக்ஸியில் சாம்பவி கிளம்பியதும் உள்ளே வந்த மல்லிகாவுக்குத் தாங்கவே முடியவில்லை. அவளால் நம்பவும் முடியவில்லை.

சோடா பாட்டில் கண்ணாடி தலைமைக் கணக்கர் கூடக் கலங்கிவிட்டார், "என்ன மல்லிகா? ஏன் அழறே?"

"ஸார், சாம்பவி அக்கா நளினி ஒரு லாரி விபத்திலே காயமடைஞ்சு ஆஸ்பத்திரிக்குப் போகிறதுக்குள்ளே செத்துட்டாளாம்- பாடி ஜி.எச்.சில் இருக்காம். அவ தம்பி கௌசிக் போன் பண்ணினான்- ஸார்! நளினி ரொம்ப நல்ல பொண்ணு ஸார். இந்தச் செய்தி பொய்யாக இருக்கக்கூடாதான்னு என் மனசு அடிக்கிறது. அந்த நல்ல குடும்பத்துக்கு இப்படி ஒரு சோதனையா ஸார்? எனக்குத் தாங்க முடியலையே" மல்லிகா குமுறிக் குமுறி அழுதாள்.

## 6

**அ**ன்று பகல் சாப்பாட்டு நேரம். ஆபீஸின் கண்ணாடிக் கதவைத் தாண்டி தோட்டத்து மதில் சுவருக்கப்பால் சிறிதளவு கண்களுக்குப் புலப்பட்ட நெடுஞ்சாலையை வெறித்துக் கொண்டிருந்தாள் அவள். போக்குவரத்து நெரிசல் குறைந்த நேரம் என்றாலும்- ஓயாது இருபக்கமும் வாகனங்கள் ஓடிய வண்ணமிருந்தன. சாப்பாட்டு நேரத்தில் மருத்துவமனையின் முன் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு யாரும் உள்ளே புகமுடியாதபடி நின்று கொண்டிருப்பான் ஒரு காவலாளி. டாக்டர் அம்மா உத்தரவு பெற்றவர்களும், மருத்துவமனையில் வேலை பார்க்கிறவர்கள் மட்டுமே தான் உள்ளே வரவும். வெளியே போகவும் கூடும். நோயாளிகளைப் பார்வையிட வருகிறவர்கள் பிற்பகல் நான்கு மணிக்குமேல் தான் அனுமதிக்

கப் படுவார்கள். முன்னதாக வந்து விட்ட சிலர்- தோட்டத்து மரத்தடியில் அங்குமிங்கும் கும்பலாக உட்கார்ந்திருந்தனர்.

மல்லிகா பத்து நாட்கள் பங்களூரில் தன் சகோதரி வீட்டில் ஓய்வாகத் தங்கியிருக்க லீவு எடுத்துக் கொண்டு போயிருந்தாள். அவள் சென்று இரண்டு தினங்கள்கூட ஆகவில்லை. அதற்குள் அந்த ஆபீஸ் அறையே வெறுமையாகி விட்டது போன்றதொரு திகைப்பைக் கொடுத்தது.

அவளுடைய அதட்டலான பேச்சுகள்-கலீர் சிரிப்பு- வளவள வென்று அளந்த கதைகள்-இவைகளைப் பற்றிக் கொண்டுதானே அந்த ஒரு வருஷ காலம் தன் மாபெரும் இழப்பின் துயரத்தை அவள் சிறிது மறக்க முடிந்ததும். மல்லிகாவின் அருகாமையும் துணையும் இல்லாதிருந்தால், அவள் துக்கத்திலே ஒடிந்துபோய் சித்தம் கலங்கி விட்டிருப்பாளே?

ஆபீஸில் மல்லிகா- வீட்டில் செல்வி. இரண்டு பேரும் இரண்டு தாங்கும் கரங்கள் போல்- தொய்ந்து போன அவளது உணர்வுகளை அவ்வப்போது தூக்கி நிறுத்தி வைக்க எத்தனை உதவி புரிந்தனர்?

"எழுந்திரு, சாப்பாட்டு நேரம். டிபன் பாக்ஸை எடுத்துக் கொண்டு புறப்படு. ஆபீஸ் அறையிலேயே கைதி போல் ஏன் அடைப்பட்டுக் கிடக்கணும்? தோட்டத்திலே அந்த மரத்தடியிலே போய் பிக்னிக் போல் உட்கார்ந்து சாப்பிடுவோம்." வற்புறுத்தி மல்லிகா அவளை தினமும் அழைத்துச் செல்வாள். கூடவே தான் கொண்டு வந்திருக்கும் பிளாஸ்டிக் கூடையைத் திறந்து பிளாஸ்க்கிலிருந்து சூடான பாலை இரண்டு தம்ளரில் பகிர்ந்து நிறைப்பாள். "எங்கம்மா எனக்கு சப்பாத்தியும், சப்ஜியும் டிபனாகக் கட்டிக் கொடுத்திருக்காங்க. நீ என்ன கொண்டு வந்திருக்கே? தயிர் சாதமா? பேஷ்! எனக்கு ரொம்பப் பிடிக்கும். முதல்லே நீ சப்பாத்தியைச் சாப்பிடு. இதோ பார் சாம்பவி! நாம் சாப்பிடாமலா- தூங்காமலா இருக்கிறோம்-



செத்துப் போனவங்க திரும்பி வரமாட்டாங்க. உனக்குத் தெரிஞ்ச விஷயந்தான். நீ இந்தத் துயர சம்பவத்தை மறக்கத் தான் முயற்சிக்கணும். வேறே வழியே கிடையாது. இந்த உலகத்திலே பிறந்தவங்க எல்லோருமே ஒரு நாளைக்குப் போக வேண்டியவங்கதானே. சே! சே! கண்ணீரைத் துடைச் சுக்கோ அங்கே பார், அந்த செம்பருத்திப்பூ எத்தனை அழகாக இருக்கு. இந்த மாதிரி மஞ்சள் நிறம் கொஞ்சம் அபூர்வம். டாக்டர் அம்மாவுக்கு செடி கொடிகள் மேல் கொள்ளை ஆசை. அதனால்தான் இந்த மருத்துவமனை முன்பக்கத்துத் தோட்டத்தை இவ்வளவு அழகாக அமைச்சு பாதுகாக்கிறாங்க. நமக்குத்தான் அப்படியெல்லாம் வாழ வாய்ப்பில்லை. வசதி யில்லை. இங்கே இவங்க அமைச்சிருக்கிற தோட்டத்து அழகையாவது பார்த்து அனுபவிக்கலாமே- அதைத் தடுத்து நிறுத்த யாரும் இல்லை. சப்பாத்தி எப்படி இருக்கு? சப்ஜி கொஞ்சம் காரமா இருக்கும். உம். சாப்பிடு" - குழந்தைக்குச் சொல்வது போல் கெஞ்சி, கொஞ்சி, மிரட்டி சாப்பிடச் செய்வாள். ஏதாவது கதை சொல்லிக்கொண்டே அவளது கவனத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டேயிருப்பாள்.

மல்லிகா மட்டும் இல்லாதிருந்தால்... அவள் அந்தத் துயரத்தை எப்படித்தான் சகித்துக் கொண்டு அத்தனை நாட்களையும் தள்ளியிருப்பாளோ!

வீட்டிற்குப் போனால் அங்கே வேலைக்காரி செல்வி படிப்பு வாசனை இல்லாத கிராமத்துப் பெண்தான் செல்வி. ஆனால், அவளுக்குத்தான் அவர்கள் குடும்பத்தின் மேல் எத்தனை பிடிப்பு - என்ன அன்பு?

நளினியின் மரணத்திற்குப் பின் அவள் பயந்தபடியே அப்பாவுக்கு நெஞ்சுவலி மறுபடியும் வந்துவிட்டது. மகளுக்கு இறுதிச் சடங்கெல்லாம் செய்து முடித்துவிட்டு ஈரவேட்டியுடன்

சொட்டச் சொட்ட உள்ளே வந்த ராமபத்ரன் மனைவியைக் கண்டதும் கோவென்று கதறிவிட்டார்.

"காமு! நளினிக்கு பெரிய கல்யாணம் பண்ணி வச்சுட்டேன். இனிமே எந்தப் பயலும் அவளை வந்து பார்க்க வேண்டாம். நமக்குத் தொல்லை கொடுக்க வேண்டாம்னு அவள் போயிட்டா... அவள் போயே போயிட்டாள்" என்று அவர் அலறியபோது அம்மாவும் அவளும் குமுறி அழுதுகொண்டு அப்பாவைக் கட்டிக்கொண்டு ஓலமிட்டனர். அப்பொழுது அவருக்கு நெஞ்சுவலி ஆரம்பித்து விட்டது.

அன்று இரவு அவருக்குத் தாங்கவே முடியவில்லை. வலியில் துடித்துப் போய்விட்டார். டாக்டரை அழைத்து வர கௌசிக் ஓடினான்.

"மைல்ட் ஹார்ட் அட்டாக். ஆஸ்பத்திரியில் அனுமதிப்பது தான் நல்லது" என்றார் டாக்டர். ராமபத்ரன் பிடிவாதமாக மறுத்து விட்டார்.

ஆஸ்பத்திரி பிணக் கிடங்கு- சுடுகாடு என்று உழன்று விட்டு வீடு திரும்பியிருந்த அவருக்கு தமது மனைவி மக்களிடையே வீட்டிலேயே தம் உயிர் போகட்டும் என்றதொரு பிடிவாதம். டாக்டர் சொன்னபடி அவரைக் கவனித்துக் கொள்ள அம்மா மூன்று வாரம் வீட்டிலேயே தங்க நேரிட்டது. நோயாளிக்குப் பணிவிடை செய்தபடி வீட்டு வேலைகளையும் செய்ய அவளால் முடியவில்லை. அத்துடன் லேசாக அவளுக்கு வயிற்றுவலி வேறு வந்து தொந்தரவு கொடுக்கத் தொடங்கியது. துன்பம் வரும் போது தனித்து வருவதில்லை என்பது அவர்கள் விஷயத்தில் எத்தனை உண்மையாகவே இருந்தது? நளினியின் மரணம்- அப்பாவின் ஹார்ட் அட்டாக்- அம்மாவுக்கு வயிற்று வலி- வீடு ஒரே அலங்கோலம். அப்போதுதான் வேறு வழியின்றி இடிந்துகிடந்த அவுட் ஹவுஸ் சுவர்கள் மீது ஓலைக் கூரையைப் போட்டுக் கொடுத்து வீடு கூட்டும்



செல்வியையும் அவள் கணவனையும் அங்கேயே தங்கும்படி ஏற்பாடு செய்தனர்.

செல்வி, அம்மாவுக்கு உதவியாக நாள் முழுவதும் பாடுபட்டு உழைத்தாள். அவள் கணவன் தோட்டத்தைக்கொத்திச் சீர்படுத்தி ஒரு பக்கம் காய்கறி பயிரிட்டதுடன், வீட்டின் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருந்தான். அப்பாவின் ஸ்கூட்டரைத் துடைத்துக் கொடுத்தான். கடைகளுக்குப் போய் வந்தான். அவசரத்துக்கு ஆட்டோ பிடித்துவந்து கொடுத்தான். ஆனால் இடையே அவன் அக்கம்பக்கத்து பங்களா தோட்டங்களிலும் வேலை செய்து கொஞ்சம் சம்பாதித்துக் கொண்டான்.

நளினியின் இழப்பால் குடும்பத்து கூட்டு வருமானத்தின் ஒரு பெரும் பகுதி குறைந்து விட்டிருந்தது. வேலைக்கு முழு மாதமும் போகாததினால் அப்பாவின் சம்பளத்தில் பெரும் பங்கு பிடிபட்டுப் போயிற்று. நாள் முழுவதும் வேலை பார்த்த செல்விக்குக் கூடுதலாக சம்பளமும் சாப்பாடும் கொடுக்க வேண்டியிருந்தது. கடனுக்குக் கட்ட வேண்டிய வட்டி, இன்ஷூரன்ஸ்-டாக்டர் பில் என்று திரும்பிப் பார்க்கு முன் செலவுகள் க்யூவில் வந்து பயமுறுத்தியபோது அம்மாவுக்கு வேறுவழியே இருக்கவில்லை. நளினிக்கு என்று ஆசையுடன் சேமித்து வைத்திருந்த வெள்ளி- பித்தளைப் பாத்திரங்களை விற்று நிலைமையைக் கொஞ்சம் சரிக்கட்டினாள். பின்னர் நளினியின் நகைகளில் ஒன்றே ஒன்றை வைத்துவிட்டு மற்றவைகளை விற்று பணத்தை வீட்டுச் செலவுக்கு உபயோகித்தாள். பாட்டி தன் பேத்திக்கு அருமையாகக் கொடுத்து விட்டுப் போயிருந்த அந்த தங்க அட்டிகையை மட்டும் விற்க அம்மாவுக்கு மனமில்லை.

சாம்பவிக்குக் கல்யாணம் கூடினால்... குடும்பத்து பரம்பரை நகை என்று இந்த ஒன்றையாவது அந்தக் குழந்தைக்குக் கொடுப்போமே என்ற ஆசை அவளுக்கு. நாலு சவரன்

எடை இருக்கும்; தங்கச்சரடு- அதன் நடுவில் சிவப்புக் கல் பதக்கம் ஒன்று ஆடியது. பாட்டி காலத்து பழைய தினுசு நகை அது. ஆனாலும் அதை நளினி ஆசையுடன் அணிவது வழக்கம்.

அன்று சாம்பவியின் பிறந்த நாள். அந்தத் தேதியை அவள் இனி என்றுமே நினைப்பதில்லை என்றுதான் தனக்குள்ளே முடிவு எடுத்திருந்தாள். அவள் பிறந்த நாள் அன்றுதான் நளினி கடந்த வருஷம் இறந்து போனாள். தங்கைக்குப் பிறந்த நாள்-அக்காவுக்கு இறந்த நாள். விதியின் விபரீத விளையாட்டு.

அன்று காலை பீரோவைத் திறந்த அம்மா அந்த நகையைக் கையில் எடுத்தபோது அவள் கரங்கள் நடுங்குவதை சாம்பவி கவனித்து விட்டாள்.

நளினியின் மரணத்திற்குப் பின்னர் படுத்துவிட்ட அப்பா எப்படியோ உடல்தேறி மறுபடியும் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தார். ஆனால் முன்னைய தெம்பும்- வேடிக்கைப் பேச்சும்- சிரிப்பும் அவரிடமிருந்து மறைந்து விட்டிருந்தன. அந்தி வேளைகளில் சில சமயம் அவர் திடீ ரென்று தமது மகளை நினைத்துக்கொண்டு அழுதுவிடுவதும் உண்டு. ஆனால் காமாக்ஷி கல்தூணைப் போல் அசைந்து கொடுக்காது துணிவோடு அந்தத் துன்பத்தைத் தாங்கிக் கொண்டிருந்தாள்.

முதல் நாள் அழுதாளே! அவ்வளவுதான். அதற்குப் பின் அவள் தைரியமாக இருந்தாள். தானும் கண்ணீர் வடித்துக் கதறினால், இருதய வலியோடு படுத்துக்கிடக்கும் கணவனுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம் அவளுக்கு. கணவன் நலனைக் கருதி அத்தனை பெரிய துன்பத்தை அவள் உள்ளே மறைந்து வைத்துக் கொண்டு எல்லோருக்கும் ஆறுதல் தந்தபடி அவள் வளைய வந்து கொண்டிருந்தாள்.



அம்மா வெளிப்படையாக அழவில்லை. உள்ளே உருகி உளுத்துப் போய்க் கொண்டிருக்கிறாள். ஒருநாள் இல்லா விட்டால் ஒரு நாள் இந்தக் கல்தூண் உடைந்து பொடியாகச் சிதறி விடப் போகிறது என்று ஒரு பயம்; அம்மாவைப் பார்க்கும் போதெல்லாம் சாம்பவி கவலைப் பட்டாள்.

"இந்தாம்மா- எல்லோரையும் போல மனதிலே வச்சிருக்கிற துக்கத்தைக் கொட்டி அழுதுவிடக் கூடாதா? கண்ணீர் சிந்திச் சிதறி அழுது விட்டாலும் தேவலையே"

"அம்மா நீங்க அழுதுடுங்கோ... அழுது தீர்த்திடுங்கோ. மனசிலே வச்சு மருகாதீங்க..." என்று பல முறை தாயிடம் சொல்லி அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு புலம்ப வேண்டும் போன்று துயரம் அவளை என்னென்னவோ செய்யும். அவ்வவ்போது வயிற்று வலியால் வேதனைப்படும் தாயை மேலும் பதட்டமடையச் செய்வானேன் என்றுதான் அவள் மௌனமாக இருப்பது வழக்கம்.

அன்று?

கலங்காத காமாக்ஷியின் கண்களில் ஒரு ஆண்டு காலத்திற்குப் பின்னர் கண்ணீர் புரண்டு கொண்டு வந்தது. பெற்றவள் அல்லவா? குடல் காலியாகிவிட்டதைப் போன்ற தொரு திகில் அடிவயிற்றைப் பிசைந்தது. அதற்குள் ஒரு வருஷகாலம் ஆகிவிட்டதே என்று ஒரு திகைப்பு அவளுக்கு.

"இந்தா, இந்த அட்டிகையை இன்னிக்கு கழுத்திலே போட்டுண்டு வேலைக்குப் போ. இன்னிக்கு உன் பிறந்த நாள். அவளுடைய..." சொல்லக் கூசியபடி தடுமாறினாள் அம்மா. ஓடிச் சென்று அவளை இறுகக் கட்டிக் கொண்டாள் சாம்பவி.

"வேண்டாம் அம்மா- என் பிறந்த நாளை ஞாபகப் படுத்தாதீங்க..." துயரம் பொறுக்க முடியாமல் விம்மி விட்டாள்.

"இன்னிக்கு அவளுடைய இறந்த நாள் என்று தெரிஞ்சு தானே இதை எடுத்துக் கொடுக்கிறேன். உன் கழுத்தில் இதைப் பார்த்தாலாவது அவளைப் பார்க்கிற ஒரு நினைவு வராதான்னு ஒரு அசட்டு ஆசை. இதை இனிமே நீயே போட்டுக்கோ. நளினி போயிட்டாள்னு நாம் அவளோடேயே போய்விட்டோமா? எதை நிறுத்திட்டோம். உசிரோட இருக்கிற வரை தான் எல்லா மதிப்பும்- மரியாதையும். இன்னிக்கு செத்தா நாளைக்கு ரெண்டுன்னு, போனவங்களுக்கு காலம் வேகமாக ஓடும். அவளைப் பத்தி நினைச்சுண்டு உட்கார்ந்தா மட்டும் திரும்பியா வரப்போகிறாள்?" அம்மாவின் கண்களிலிருந்து மாலையாகக் கண்ணீர் வந்தது.

"அம்மா... என் நெஞ்சே வெடிச்சுடும் போல இருக்கு. துக்கப்படாதீங்க. நாங்கள்ளாம் இருக்கோம்." அழுகை நடுவே வார்த்தைகளுக்குத் தடுமாறினாள் சாம்பவி.

"அம்பாளின் அந்த ஒரு கருணைக்கு நன்றி செலுத்திண்டுதான் இருக்கேன். உன்னையும் கௌசிக்கையும் பார்த்துத்தான் நாங்க ரெண்டுபேரும் கொஞ்சம் அமைதியா இருக்கோம்." அவள் அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அப்பா வருகிறார், நாழியாச்சு, கௌசிக்கைக் கூப்பிடு, நீயும் வா, எல்லாரும் சாப்பிட்டுவிட்டு வேலைக்குக் கிளம்பணும். சொல்லிவிட்டு மகளின் பிடியினின்று கழன்றுகொண்டு உள்ளே விரைந்தாள்.

ராமபத்ரன் ஒரு வழியில் அப்பாவி மனிதன். சிலரைப் போல் தோண்டித் துருவி ஊன்றிப் பார்க்கத் தெரியாத வெகுளி. வெகுநேரம் அவர் சாம்பவி கழுத்தில் கிடந்த நகையைக் கவனிக்கவேயில்லை.

சாப்பிட்டுவிட்டு கையைக் கழுவிக்கொண்டு, தமது கைப்பையைத் தூக்கிகொண்டு புறப்பட்டார். பின்னால் வந்து கொண்டிருந்த மனைவியையு[illegible]ளையும் திரும்பிப் பார்த்



தார். காலையிலிருந்து அவர் உள்ளத்திலே துக்கம் குமுறிக் கொண்டிருந்தது. ஒரு வருஷத்திற்கு முன்னர்- இதே நாளில்- ஆபீசிற்குள் போய் ஆசனத்தில் உட்கார்ந்ததும் கொஞ்ச நேரத்தில் ஒரு போன் வந்ததே? அந்தச் செய்தியையும், தொடர்ந்து ஏற்பட்ட துன்ப அனுபவத்தையும் அப்படி சுலபமாகவா மறந்து விட முடியும்?

அவருக்கு விடியற்காலையிலேயே விழிப்பு வந்து விட்டது. கூடவே அந்த நாளின் நினைப்பும் வேதனையும் வந்துவிட்டன.

சாம்பவியின் கழுத்தின் மீது அவர் பார்வை அசைப்பில்பட்டது. சுரீர் என்று நினைவை யாரோ தாக்கியது போன்ற வேதனை. கல்யாணத்திற்குப் பெண் பார்க்க வந்த அந்த ஞாயிற்றுக்கிழமை நளினியின் கழுத்திலே அந்த நகையைப் பார்த்த நிறை, நெஞ்சில் நிழலாட அவர் கண்கள் கலங்கி விட்டது.

"குடும்பத்துசாயல் எங்கே போகும்? அவள் கொஞ்சம் கருப்பு- இவள் சிகப்பு அதுதானே ஒழிய இந்த அட்டிகையை இவள் கழுத்தில் பார்த்ததும் எனக்கு தூக்கி வாரிப்போட்டுடுத்து. நளினி வந்து நிற்கிறாப்பல ஒரு திகைப்பு. அப்படி வந்து என் குழந்தை இனியும் என் முன்னால் நிக்கப் போறாளா?..." அதற்குமேல் பேசமுடியாது அவர், அவர்களைப் பாராது வேகமாகப் படிகளில் இறங்கித் தோட்டத்திற்குள் நடந்தார்.

சிறிது பொழுதில் ஸ்கூட்டர் வெளியே விரையும் சப்தம் கேட்டது. தாயார் வயிற்றைப் பிடித்துக்கொண்டு வராந்தா தூண்மீது சாய்ந்துகொண்டு, நிற்பதைக் கண்டாள் சாம்பவி. அவளுக்கு மீண்டும் வயிற்றுவலி வந்து விட்டது போலும்.

"என்னம்மா...?" கவலையுடன் அருகில் வந்தாள்.

"ஒண்ணுமில்லை. கொஞ்சம் ஜெலுசில் சாப்பிட்டால் சரியாகிவிடும். நீ வேலைக்குக் கிளம்பு- நேரமாகிறது." அம்மா உத்தரவிட்டு உள்ளே போய்விட்டாள்.

வேலைக்காரி செல்வி, வீட்டைப் பார்த்துக்கொள்வாள் என்ற துணிவில், இப்போது அவர்கள் வீட்டைப் பூட்டுவதில்லை. அப்படியே செல்வி பொறுப்பில் விட்டு விட்டு வேலைக்குக் கிளம்பிவிடுவது வழக்கம்.

கேட்டுவரை பின்னாலேயே வந்தாள் செல்வி, அவளுக்கு நளினிமீது மிக்க அன்பு.

"எங்களையெல்லாம் விட்டுட்டு பூட்டியா ராசாத்தி" என்ற உரத்த குரலில் ஒப்பாரி வைத்து அன்று அழுது தீர்த்தவள் அவள். விரைவில் அந்தத் துன்ப நினைவினின்று நிமிர்ந்து நின்றவளும் அவள்தான்.

"பூஜையறைக்குப் போய் படத்துக்கு முன்பு அம்மா கண்ணீர் விட்டுகிட்டு உட்கார்ந்திருக்காங்க. சமாதானப்படுத்தி அவங்களை வேலைக்கு அனுப்பறேன். நீ கவலைப்படாம போயிட்டு வா." என்று ஆறுதல் சொல்லி அவளை அனுப்பி வைத்தாள்.

தெருவைத் தாண்டி நெடுஞ்சாலைக்குள் புகுந்த அப்பாவின் ஸ்கூட்டர் சத்தம் லேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது. மனம் கலங்கி- துன்ப உணர்வுகளால் குழம்பித் தள்ளாடிக் கொண்டு புறப்பட்டிருந்தார் அவர்.

"நல்லபடியாக ஆபீஸிற்கு போய்ச் சேரணுமே? காலை வேளைகளில் போக்குவரத்து அதிகமாயிற்றே?" மனதிற்குள்ளே அவரைப்பற்றிக் கவலப்பட்டுக் கொண்டுதான் அவள் வேலைக்கு வந்திருந்தாள்.

வெகுநேரம் அந்த உறுத்தலை ஒதுக்கி வைக்க முடியவில்லை. துணிவைத் திரட்டிக்கொண்டு, தலைமைக் கணக்கரிடம் உத்தரவு கேட்டாள். ஆபீஸ் தொலைபேசியைச் சொந்த



விஷயங்களுக்கு உபயோகிக்க அவர் அனுமதிப்பதில்லை. மிகவும் கண்டிப்பானவர். டீ டைம் போது மெல்ல எழுந்து அவர் அருகே வந்தாள்.

"ஸார்... ரொம்ப முக்கியம்... ஒரே ஒரு கால் பண்ணிக்க அனுமதிப்பீர்களா..."

"யாருக்கம்மா." சோடா பாட்டில் கண்ணாடி வழியே அவர் விழித்தார்.

"எங்கள் அப்பாவுக்கு... இன்னிக்கு நளினியின் இறந்ததினம் அதனாலே... " அவள் தயங்கினாள்.

பளிச்சென்று அவருக்கு எல்லாம் நினைவுக்கு வந்தது. அவரும் பிள்ளைகுட்டிக்காரர்தானே? மனம் கரைந்து போய் விட்டார்.

ஆசனத்தைவிட்டு எழுந்தார். "நீ போனில் பேசிக்கோ-நான் சித்த வெளியிலே போயிட்டு வர்றேன்".. அறையை அவள் வசம் ஒப்படைத்து விட்டு வெளியே சென்று விட்டார்.

"ஹலோ...! அப்பா தானே பேசறது...?" அப்பாவின் குரலை மறுபக்கம் கேட்டதும்தான் அவளுக்கு நிம்மதி.

"என்னம்மா? எதுக்கு போன் பண்ணினே?" பரபரப்போடு கேட்டார் ராமபத்திரன்.

சட்டென்று வாயில் வந்ததைச் சொன்னாள். "டிபன் பணத்தை ஏன் வீட்டிலேயே மறந்து வச்சுட்டு வந்துட்டீங்கன்னு கேட்கத்தான் கூப்பிட்டேன்."

"உங்கம்மா மறக்கமாட்டாளே? ராத்திரியே என் சட்டைப் பையில் பர்சிலே பத்திரமா பணத்தைப் போட்டு தினமும் வச்சுடறாளே... பணம் பையில் இருக்கு, அவ்வளவு தானே!"

அப்பா போனை வைத்துவிட்டார். அவர் அருகே யாராவது இருந்தார்கள் போலிருக்கிறது. தொடர்ந்து அவர் பேச விரும்பவில்லை.

"நல்லவேளை அப்பா பத்திரமா... ஆபீஸிற்குப் போய்ச் சேர்ந்தால் அதுவே பெரிய காரியம்..." எண்ணிக் கொண்டு வெளியே வந்தாள், அதற்குப்பின் அவளால் அமைதியாக வேலையைக் கவனிக்க முடிந்தது.

ஆனால் பகல் பொழுது- சாப்பாட்டு நேரத்தின் போது அவளுக்குச் சாப்பிட மனம் இருக்கவில்லை. கடந்த ஆண்டு அந்த தினத்தில் அந்த வேளை போதுதானே டாக்ஸி ஒன்றில் பதைபதைத்துக் கொண்டு விரைய நேர்ந்தது?... அந்தத் துன்ப சம்பவத்தின் நினைவு- கோவையாக நெஞ்சில் எழ அவள் சூழ்நிலையை மறந்து இடிந்து போய் உட்கார்ந்திருந் தாள்.

கதவைத் தள்ளிக்கொண்டு மெல்ல உள்ளே வந்தான் அவன். 'டக்டக்'கென்ற ஓசை கேட்டு அவள் விழிப்புற்ற போது பளபளவென்ற ஷூக்கள் அணிந்த பாதங்கள்... வெள்ளை சபாரி ஸூட் என்று ஓடிய அவளது பார்வை அவன் முகத்திலே வந்து நிலைத்தது. திடுக்கிட்டுக் கண்களை அகலத் திறந்து அவனைப் பார்த்தாள்.

அவன்தான்! வஸந்த். பரிசோதனைச்சாலையில் வேலை பார்த்து வந்த சுந்தரமூர்த்தி ஓய்வெடுத்துக் கொண்டதும் அவர் இடத்திற்கு வேலைக்கமர்ந்த புதிய பயோகெமிஸ்ட். சில நாட்களுக்கு முன்னர்தான் வேலையில் சேர்ந்தான். அதற்குள் அவனுக்கும் மல்லிகாவுக்கும் மோதல்.

அந்த திங்கட்கிழமை காலை கதவைத் தள்ளித்திறந்து கொண்டு மிகவும் அவசரமாக உள்ளே வந்தான் அவன். அவர்கள் அனைவரும் ஆச்சர்யத்துடன் அவன் பக்கம் திரும்பினர்.

"மிஸ் பிரமிளாவின் ரிப்போர்ட்டை டைப் பண்ணினது யார்?" கோபத்துடன், முகம் சிவக்க அதட்டினான் அவன்.



"நாதான், ஏன் கேட்கிறீங்க?" துணிவோடு வினவினாள் மல்லிகா.

ரிசல்ட் முழுவதும் தப்பு- அந்தப் பெண் ஒரு சிவியர் ஜாண்டிஸ் கேஸ்-ரூபாவின் ரிப்போர்ட்டை மாற்றி பிரமி ளான்னு அடிச்சிருக்கிறீங்க. தலை போச்சுன்னா- தவலை போச்சுன்னு காரியம் பண்றீங்க... இதனாலே எப்படிப்பட்ட பெரிய தவறு ஏற்படும் தெரியுமில்லையா? வேலை செய்யும் போது கவனமாகச் செய்யணும். கதை பேசிக் கொண்டிருந்தா இப்படித்தான் நேரும். இப்பவாவது சரியா டைப் பண் ணுங்கோ. நான் பிரஷ் ரிப்போர்ட் இந்த பைலில் வச்சிருக்கேன்." இரைந்து கத்திவிட்டு பைலை அவள் மேஜை மீது தொப் பென்று போட்டுவிட்டு நகர்ந்தான்.

மல்லிகாவுக்கு வந்ததே கோபம்?...

"மானர்லெஸ் ஃபூல்... என்ன நினைச்சுண்டு இருக்கான்? இவனே இந்த நர்ஸிங்ஹோமின் டைரக்டர்னு நினைப்பா? ஆள் ரொம்ப கர்வின்னு கேள்விப்பட்டேன். சரியாத்தானிருக்கு. என்கிட்ட வாலை ஆட்டினா... ஒட்ட நறுக்கிடுவேன். ஸ்டுப்பிட்..." உரத்த குரலில் முணு முணுத்தாள். எரிச்சலுடன் டைப்ரைட்டரில் தாளைச் சொருகி வேகமாக அடிக்கத் தொடங்கினாள்.

அதற்குப்பின் அவனை வராந்தாவிலும் நடைபாதையிலும் இருமுறை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. எதிரே உள்ள தெருவைப் பார்ப்பது போல் விரைப்பாக அவன் விர் என்று நடந்து போனான். "ஆள் கொஞ்சம் பார்க்க ஜோராக இருக் கிறான். அந்த திமிர். ஷர்ட் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு எங்கேயோ பார்த்தபடி போய்க் கொண்டி நக்கான். இவன் நேரே போய் அந்த வேப்ப மரத்து மேலே முட்டிக்கப் போறான். நான் சொல்றபடி நடக்கிறதா இல்லையான்னு பார்?" மல்லிகா சொல்லி முடிப்பதற்குள் அது நடந்து விட்டது.

வேகமாக அவர்களைத் தாண்டிச் சென்ற அவன் தோட்டத்தி லிருந்த மரத்தின் வேர் தடுக்கி விழ இருந்தவன், சமாளித்துக் கொண்டு மரத்தைச் சட்டென்று ஆதரவாகப் பிடித்துக் கொண டான். வெட்கத்தை மறைக்க கைக்குட்டையால் முகத்தைத் துடைக்கும் பாவனையில் அவர்கள் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

சாம்பவியின் கரத்தைப் பிடித்து சட்டென்று ஒரு மறைவிடத் திற்கு இழுத்துச் சென்ற மல்லிகா வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள்.

"இனிமேல் தரையைப் பார்த்து நடப்பான். திமிருக்குப் பாடம் கை மேலே கிடைச்சிட்டுது" அவள் சிரித்தாள். சாம்பவி யும் கூடச் சிரித்துவிட்டாள்.

அந்த பயோகெமிஸ்ட் வஸந்த், அவள் எதிரே வந்து இப்போது நின்று கொண்டிருந்தான். வெளிர் நீல ஷர்ட்டும்-பழுப்பு வண்ணப் பாண்டும் அணிந்து கொண்டிருந்தான், ஷர்ட்டை மறைந்த வெள்ளை ஓவர் கோட்டின் மீது இங்குமங்கும் மருந்துக் கறைகள்.

"இப்போது லஞ்ச் டைம். அந்த பைலை நான் இன்னும் முடிக்கலை. உங்களுக்கு என்ன வேணும்?" கேட்டாள் அவள்.

"லஞ்ச் டைம் போது கூட நீங்கள் வேலை செய்யணும்னு நான் எதிர்பார்க்கலை. மேலும் நான் யார்? நானும் உங்களைப் போல் இங்கே வேலை பார்க்கும் ஒரு தொழிலாளி, இந்த நர்ஸிங்ஹோம் என் பாட்டன் வீட்டுச் சொத்தா?"

வியப்புடன் அவள் நிமிர்ந்தாள்.

"நீங்க இங்கே தனியா உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். லஞ்ச் சாப்பிட டிபன் ரூமுக்கோ- தோட்டத்துக்கோ போக லாம்னு கூப்பிடத்தான் வந்தேன். தப்பா நினைச்சா-" அவன் முடிக்கவில்லை.



அவள் எழுந்திருந்தாள். தனிமையில் தாள முடியாது. உள்ளம் சுமக்க முடியாத துயரத்திலே தத்தளித்துக் கொண் டிருந்தாள்.

ஒரு சுவரிடமாவது கொட்டி அளக்க வேண்டும் போன்ற தொரு ஏக்கத் தவிப்பு- அவன் யார்? அதிகம் அறிமுகமில் லாதவன் என்ற நினைப்பெல்லாம் எழவில்லை.

அவனுடன் பேசினால் மனதிலே ஆறுதல் ஏற்படும் போன்ற ஒரு நினைவு.

மந்திரத்தில் கட்டுப்பட்டவள் போல் அவன் பின்னால் நடந்தாள். அப்போதுதான் கவனித்தாள். டிபன் பாக்சை அங்கேயே மேஜை மீது வைத்துவிட்டு வெளியே வந்து விட்டிருந்தாள்.

"நான் டிபன் ஏதும் வீட்டிலிருந்து கொண்டு வருவதில்லை. இங்கே ஆபர்ணா காபி ஹவுஸில் நல்ல காபியும் மசாலா தோசையும் கிடைக்கிறது. அங்கே போகலாமா? நர்ஸிங் ஹோமுக்கு கிட்டத்தான் எதிர்சாரியிலே இருக்கு."

"எனக்குத் தெரியும் பார்த்திருக்கேன். நான் போய் சாப்பிட்டதில்லை."

"இன்னிக்கு சாப்பிட்டுப் பாருங்களேன் வாங்க ப்ளீஸ்."

மறுக்காது அவள் அவனைத் தொடர்ந்தாள். இது வரை அவள் இப்படி ஒருகாரியம் செய்ததில்லை. முன்பின் தெரியாத ஆண்பிள்ளை ஒருத்தன் பின்னால் ஆட்டுக்குட்டி போல் சென்று கொண்டிருந்தாள். ஏனோ அவன் பார்வை -பேச்சு எல்லாமே அவளுக்கு மிகவும் பாந்தமாகப்பட்டன. பல ஆண்டுகள் பழகியவன் போன்றதொரு நெருக்கமான உறவின் உணர்வு உள்ளத்திலே அவளுக்கே புரியாத ஒரு பிரமிப்பு.

இரண்டு தட்டுகளில் மசாலா தோசைகளும், கோப்பைகளில் சூடானா காப்பியும் கொண்டு வந்து சர்வர் வைத்து விட்டுப் போனான்.

"தோசை எனக்கு வேண்டாம். எனக்கு இன்னிக்கு சாப்பிடவே மனமில்லை. நீங்கள் வற்புறுத்துகிறதால் காப்பியை மட்டும் சாப்பிடறேன்." கையில் கோப்பையை அவள் எடுத்துக் கொண்டாள்.

"எனக்குத் தெரியும் கேள்விப்பட்டேன். அதனால் தான் உங்களை வந்து சாப்பிட அழைத்தேன்.

திடுக்கிட்டுப் போனாள் அவள். அவனுக்கு நளினி இறந்த நாள் பற்றி எப்படித் தெரியும்? வியப்பாக இருந்தது. கண்கள் கலங்கின.

"என்னோடு வேலை செய்கிற சிவநேசன் சொன்னார். ஏதோ பேச்சின் போது அவருக்கு அந்த டிராஜடியின் ஞாபகம் வந்தது. ரொம்ப சொல்லி வருத்தப்பட்டார். அதைக் கேட்டதும் எனக்கு உங்களைப் பார்க்கணும்- ஆறுதல் சொல்லணும்னு ஒரு துடிப்பு ஏற்பட்டது. வந்தேன்... மிஸ் சாம்பவி... நீங்க அழக்கூடாது. தைரியமா இருக்கணும்."

"தாங்க்யூ..." புன்னகைக்க முயன்ற அவள் கைப்பையில் கைக்குட்டையைத் தேடித் துழாவினாள். அதற்குள் அவன் தன் பாண்ட் பையிலிருந்த தன் கைக்குட்டையை இழுத்து அவள் முன் நீட்டினான்.

"நான் இன்னமும் உபயோகிக்கவில்லை- புதிய கைக்குட்டை இந்தாருங்கள்."

"தாங்க்யூ..." உண்மையான நன்றிப்பெருக்குடன் அவள் அதை வாங்கிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

தன் சகோதரியைப் பற்றி அவனிடம் பலவும் பேசி விட வேண்டும் போன்று ஒரு தவிப்பு அவளுக்கு ஏற்பட்டது.



"எங்கக்கா நளினி மிகவும் நல்ல பெண். அவளுக்கு இப்படிப்பட்ட ஒரு முடிவு ஏற்பட்டிருக்க வேண்டாம். ரொம்ப இரக்க சுபாவம். ஒரு சின்னக் குழந்தை தெருவின் குறுக்கே ஓடிவிட்டது. எதிர்பக்கம் வேகமாக லாரி ஒண்ணு வருவதை அக்கா பார்த்து விட்டாள். ஐயோ என் குழந்தைன்னு தாயார் கத்தியதைக் கேட்டதும் நளினி அதைக் காப்பாத்த வேகமாகச் சென்றாள். அவளுக்குப் போலியோவால் கால் ஊனம். குழந்தையைப் பிடிச்சு இழுத்து அப்பால் தள்ளிக் காப்பாற்றி விட்டாள். தன்னைக் காப்பாத்திக்க முடியலை. அவள் தத்தி நடந்து நகர்வதற்குள் லாரியின் சக்கரம்..." மேலே விவரிக்க முடியாது மீண்டும் கண்கள் கலங்கினாள்.

நளினி இறந்துவிட்ட செய்தியை அப்போதுதான் கேட்டவள் போல் ஒரு துக்கம். அந்த இழப்பின் பயங்கர வேதனை நெஞ்சை அடைக்க -உதடுகளை அழுத்திக் கொண்டு பொங்கிய அழுகையை அடக்க கஷ்டப்பட்டாள்.

"எல்லாம் விவரமாகச் சொன்னான் அவன். கேட்கக் கஷ்டமாக இருந்தது. உங்கிட்ட வந்து பேசணும். ஆறுதல் சொல்லணும்னு காலையிலிருந்து மனசிலே ஒரு எண்ணம். அன்னிக்கு உங்க ஆபீஸிலே வந்து கத்திவிட்டுப் போன எனக்கு, மறுபடி அங்கே வர வெட்கமாகத்தான் இருந்தது. எனக்கு வேலை சரியா அமையாட்டா கோபம் வந்துடும். ஆனால் நான் அப்படி வந்து அதட்டிக் கேட்டது தப்பு- எனக்கு அந்த உரிமை கிடையாது. உங்க சிநேகிதி லீவிலிருந்து வந்ததும் அவங்ககிட்ட மன்னிப்புக் கேட்க நினைச்சிண்டு இருக்கேன்." அவன் மெல்லச் சிரித்தான்.

பளிச்சென்று அழகுடன் மின்னின அவனது வரிசைப் பற்கள்! அந்த அரும்பு மீசை- கிருதாக்கள்- படிப்படியாக சரிந்து கழுத்துவரை தொங்கிய நீண்டமுடி எல்லாமே அவனுக்குப் பொருத்தமாகத் தானிருந்தன. மல்லிகா சொன்னது உண்மை

தான். பார்க்க அவன் அழகாகத் தானிருந்தான். துயரத்தின் நடுவே அவள் சிந்தனை குறுக்கே ஓடியது.

"ஸார்... உங்கள் ஆறுதல் வார்த்தைகளுக்கு ரொம்ப நன்றி. உங்களுக்கு ரொம்ப இரக்கமான மனசு..." அவள் போக எழுந்திருந்தாள்.

"ஸார்... என்ன மோர்? என்னை சும்மா வஸந்த்ன்னு கூப்பிடலாமே." புன்னகைத்த அவனும்கூட எழுந்தான்.

"என்னையும் நீங்கள் தாராளமா சாம்பவின்னு கூப்பிடலாமே" அவள் லேசாக முறுவலித்தாள்.

அப்பா!... அவனுடன் பேசிய அந்தக் கொஞ்ச நேரத்தில் பெரிய தொரு சுமை அவள் உள்ளத்திலிருந்து இறங்கி நெஞ்சு லேசாகிவிட்டது போன்ற ஒரு தெம்பு இப்போது.

அவளது அருகாமையிலே நெருக்கமானதொரு நட்பு உணர்வு... என்ன ஆச்சர்யம்?

முன்பின் தெரியாத ஒருத்தனுடன் இப்படி திடீர் என்று ஏற்படுகிற பாச உணர்விற்கு என்ன பெயர்? நட்பா... அல்லது... அவள் பிரமிப்புடன் மெல்ல நடந்தாள்... அவன் பின் தொடர்ந்தான்.

## 7

**வா**னத்தில் பளிச்சென்று முழு நிலவு காய்ந்து கொண் டிருந்தது. சில நாட்களுக்கு முன்னர்தான் ராமபத்ரன் வீட்டுத் தோட்டத்தை அடைத்த அந்த வேப்ப மரங்களில் இரண்டை மட்டும் விட்டுவிட்டு மற்ற அனைத்தையும் வெட்டிவிட ஏற்பாடு செய்துவிட்டிருந்தார். மாலை வீட்டுக்குத் திரும்பியதும் தோட்டம் வெறிச்சோடி விட்டிருந்தைக் கண்டு அவள் திகைத்



தாள். வெட்டுண்டு கிடந்த மரங்களைக் காணப் பரிதாபமாகக் கூட இருந்தது.

"காற்றை அடச்சுண்டு பிசாசுபோல் என்னத்துக்குன்னுதான் வெட்டச் சொன்னேன்." அப்பா மேலுக்கு அப்படிச் சொன்னார். உண்மையில் அம்மரங்களை வெட்டி விறகிற்காக எடுத்துப் போகிறவன் கொடுத்த கணிசமான தொகை, அவரது அவசர செலவுகளுக்கு மிகவும் தேவைப்பட்டது என்பதை எல்லோரும் புரிந்து கொண்டிருந்தனர்.

"குழந்தையைப் போல் நம்மோடு வளர்ந்த மரங்கள்...ம்! குழந்தையே போயிட்டாள்? நாம் என்ன செஞ்சுட்டோம்? எந்த விதமான மாறுதலும் முதல்லேதான் மனசை உறுத்தறது- பின்னால் தானே பாந்தமாகி விடறது. இயற்கையின் நியதி அப்படி" அம்மா அடிக்குரலில் முணுமுணுத்தாள்- தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அவளும் வீட்டிலிருந்த பல பொருள்களையும் விற்றுத் தான் செலவைச் சமாளிக்க முயற்சித்தாள். பாட்டி காலத்தி லிருந்து புழக்கத்திலிருந்த பித்தளை அண்டாக்கள்-ஈயச் சொம்புகள் வெண்கலப் பானைகள் என்று பரணியில் கிடந்த பழம் பொருள்கள் எல்லாவற்றையும் விற்று வீட்டின் செலவு களை நிரவிச் சரிக்கட்டினாள். இப்படியே போனால் இனி வீட்டில் உத்திரம்- சரம்- ஜன்னல் என்று அவைகளைப் பிய்த்தெடுக்கும் நிலையும் ஏற்பட்டு விடும் போல் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்த சமயம்- அன்று அவளிடம் அந்த மகிழ்ச்சிகரமான கேள்வியைக் கேட்டுவிட்டிருந்தான்.

"சாம்பவி! என்னை நீ கல்யாணம் செய்துகொள்வியா? உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன்."

நெஞ்சு படபடக்க மூச்சு முட்ட பதில் சொல்லத் தெரியாது அவள் விழித்தாள்.

அவர்கள் இருவரும் கடற்கரை மணல்மீது உட்கார்ந்து கொண்டிருந்தனர். பொழுது அமர்ந்து மெல்ல அடிவானத்திலே பூரண நிலவு பூத்தெழுந்ததைக்கூடக் கவனிக்க முடியாதபடி- மெய்மறந்து அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

இப்படி உட்கார்ந்து நேரம் நழுவுவது தெரியாது பேசியது முதல் தடவை அல்ல. அவளது பிறந்த நாள் அன்று ஆரம்பித்த சிநேகிதம் மிகவும் நெருக்கமானதொரு நட்பாகி- இப்போது காதலாக உரு மாறிவிட்டிருந்தது. ஆறுமாத காலத்திற்குள் தன் உள்ளத்தில் இப்படி ஒரு அதிசய மாறுதல் ஏற்படும் என்று அவள் நினைக்கவே யில்லை. ஒருநாள் அவனைப் பார்க்காவிட்டாலும்- அவனுடன் சிறிது நேரமாவது பேசா விட்டாலும் உலகமே படுசூன்யமாகி விட்டது போன்றதொரு நடுக்க உணர்வு, அவளுக்கு விவரிக்க இயலாத ஒரு பரபரப்பு அவளை ஆட்டிப் படைத்ததும் அதில் தான் எத்தனை இன்பம்- எத்தனை துன்பம்?-ஏன் பயங்கூட.

ஆபீஸ் முடிந்ததும் கைப் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு அவள் கிளம்பியதும் அவன் அவளுக்காக வாசலில் காத்திருப்பது வழக்கமாகி விட்டிருந்தது. மல்லிகா நிலைமை யைப் புரிந்து கொண்டு ஒதுங்கிவிட்டிருந்தாள். இருவரும் மெல்ல பஸ் நிலையத்தை நோக்கி நடப்பார்கள்.

சில நாட்கள் அருகில் இருந்த பூங்காவிற்குச் சென்று ஒரு சிமெண்ட் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு நேரம் போவதே தெரியாமல் என்னென்னவோ பேசிக்கொண்டிருப் பார்கள். பேசத்தான் அவர்களுக்கு எத்தனை விஷயங்கள் இருந்தன!

மாதத் தொடக்கத்தில் இருவர் கையிலும் கொஞ்சம் தாராள மாக பணம் இருக்கும்- அப்போதெல்லாம் வேலை முடிந்ததும் ஒரு தடவை காப்பி ஹவுஸிற்குப் போய் சூடான காப்பியை அருந்திக்கொண்டே கதை பேசி மகிழ்வார்கள். சில சமயம்



சினிமாவுக்குக்கூட சேர்ந்துபோய் வந்தார்கள். கையில் பண ஓட்டமில்லாதபோது கடற்கரைக்கு பஸ்ஸில் சென்று... மணல்மீது உட்கார்ந்து கொண்டு பேசித் தீர்த்தார்கள்.

அவள் அவனுக்குத் தன்னைப் பற்றியும் -தங்கள் குடும்பத் தைப் பற்றியும் விவரமாகச் சொல்லிவிட்டிருந்தாள்.

அவனும் தன்னைப் பற்றி அவளிடம் கூறிவிட்டிருந்தான். அவர்களது பிறந்த ஊர் தஞ்சை-ஆனால் அவன் தந்தை பெங்களூரில் வேலை, பார்த்துக்கொண்டிருந்தார். பெரிய கம்பெனியில் நல்ல வேலை, நிறையச் சம்பளம்- வசதியான வாழ்க்கை. அவனும் அவனது இரண்டு சகோதரிகளும் சென்னையில் ஹாஸ்டலில் தங்கி படித்துக் கொண்டிருந்தனர். அவனது படிப்பு முடிவு பெறும்சமயம் அப்பா தீடீரென்று இரண்டு நாள் காய்ச்சலில் இறந்து போனார். ஒருவகை வைரஸ் இன்பெக்ஷன் என்றார்கள். அந்த அதிர்ச்சியில் அம்மா மனமுடைந்து போய்விட்டாள். நீடித்து பெங்களூரில் வசிக்க பிரியமின்றி அங்கிருந்த வீட்டை விற்றுவிட்டு சென்னைக்கு வந்து குடியேறினார்கள்! கோடம்பாக்கத்தில் மங்களா காலனி யில் ஒரு சிறிய வீட்டை வாங்கிக்கொண்டு அம்மா தன் மூன்று குழந்தைகளுடன் கணவர் விட்டுப்போன இன்ஷூ ரன்ஸ்- பிராவிடன்ட்பண்ட் முதலியவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்துச் சிக்கனமாக வாழத் தொடங்கினாள். இப்போது அவன் சம்பாதிக்கத் தொடங்கி விட்டதினால் அம்மாவின் சுமை சிறிதளவு குறைந்து விட்டிருந்தது. பெரிய தங்கை ஜெயா பி.ஏ. முடித்துவிட்டு அம்மாவுக்கு உதவியாக வீட்டி லிருக்கிறாள். இரண்டாவது பெண் லதா, பி.எஸ்சி. கடைசி வருஷம்-இன்னும் யாருக்கும் கல்யாணம் ஆக வில்லை."

அவனாகத்தான் விவரங்களைச் சொன்னான்- அவள் தோண்டித் துருவி எதுவும் கேட்கவில்லை. அப்படிக் கேட்பது அநாகரிகம் என்று மௌனமாக இருந்துவிட்டிருந்தாள்.

எத்தனையோ முறை ஆரம்பத்தில் அவள் உள்ளத்தில் ஒரு கேள்வி எழுவதுண்டு. பேசிக் கொண்டிருக்கையில் இடையே கேட்க வேணும் போல் ஒரு துடிப்பு ஏற்படும். ஆனால் கேட்கத்தான் துணிவு இருக்காது. ஆமாம் வஸந்த் எந்த ஜாதியைச் சேர்ந்தவன்? பெயர்- உரை- பழக்கவழக்கங் களிலிருந்து அவளால் ஊகிக்க முடியவில்லையே?

ஜாதியைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது அவ்வளவு அவசியமா? தன்னைத்தான் அவள் சாடிக் கொள்வதும் உண்டு.

அப்பொழுது ஒருநாள்... வஸந்தின் சொந்தக்காரர் வீட்டுக் கல்யாணம், ஹைதராபாத்தில் நடந்தது. அவனது குடும்பத் தாருடன் துணைக்கு அவனும் கூடச் செல்லவேண்டியிருந்தது ஒருவார காலம் லீவு போட்டுவிட்டு அவன் கிளம்பிவிட் டிருந்தான். அவனைப் பாராது நாட்கள் அப்போது எத்தனை மெதுவாக- வேதனையுடன் நகர்ந்தன அவளுக்கு?

வழக்கம்போல் அன்று பகல் சாப்பாட்டு நேரத்தின் போது மல்லிகா அவளைத் தோட்டத்து மரத்தடிக்கு அழைத்துச் சென்றாள்.

"இன்னிக்கு எங்கம்மா தேங்கா சேவை, டிபனுக்குக் கட்டிக் கொடுத்தனுப்பியிருக்காங்க. உன் டிபன் பாக்சையும் திற, நாலைஞ்சு மாசமா எனக்குப் போட்டியா உங்க வீட்டுச் சாப்பாட்டைச் சாப்பிட வஸந்த் வந்து விட்டார்." -பரிகாசமாகத் தோழியைப் பார்த்துச் சிரித்தாள்.

சாம்பவியின் கன்னங்கள் சிவந்து போயின- நெஞ்சிலே ஒரு இன்பத் துடிப்பு!

"அவர் வர ஒரு வாரமாகும்-அதுவரை உனக்கு என் சாப்பாட்டில் பங்குகொள்ள சான்ஸ் உண்டு- அவரைப் பற்றிப் பொறாமைப்படாதே" வேடிக்கையாகப் பதிலளித்தாள். அவனைப் பற்றி சிநேகிதியிடம் பேசுவதில் கூட ஒரு இன்பம் இருந்ததை உணர்ந்து மனதிற்குள்ளே பூரித்துப் போனாள்.



சாப்பிட்டுக் கையைக் கழுவிக்கொண்டு இருவரும் சிறிது நேரம் ஓய்வாக மரத்தடியில் உட்கார்ந்து கொண்டனர்.

சுற்றும்முற்றும் பார்த்துவிட்டுத் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள் மல்லிகா. பல நாட்களாக அவள் கேட்கத்தான் துடித்துக் கொண்டிருந்தாள். அன்று வாய்ப்பு ஏற்பட்டது - அதை விட மனமில்லை.

"நீயும் வஸந்த்தும் நெருக்கமாகப் பழகுவதைப் பற்றி இங்கே எல்லோரும் பேசுகிறார்கள்- தெரியுமில்லையோ?"

"பேசிக்கொண்டு போகட்டும்- அக்கறையில்லை." கோபத் துடன் சீறிய சாம்பவி, அருகிலிருந்த செடியின் இலை ஒன்றைக் கிள்ளி வாயில் வைத்து அழுத்தமாகக் கடித்தாள்.

"அவங்களை விட்டுத்தள்ளு- உங்கப்பா காதில் பட்டால் என்ன ஆகும்னு நினைச்சுத்தான் நான் கவலைப் படறேன்..."

"என்ன ஆகும்?"

"வஸந்த் உங்கிட்ட கல்யாணத்தைப் பற்றி ஏதாவது பேசியிருக்கிறாரா?"

"இல்லை! ஏன் கேட்கிறே?"

"அவரும் யோசிக்கத்தான் செய்வார்... அதனால்தான் அந்தக் கட்டத்திற்கே இன்னும் வரலை."

கடித்துக் கொண்டிருந்த இலையை அவசரமாகத் துப்பினாள் சாம்பவி.

"என்ன புதிர் போடறே? விளக்கமாகத்தான் சொல்லேன்" கவலையுடன் கேட்டாள்.

"வஸந்த் தன்னைப்பற்றி எல்லாம் உன்கிட்டே சொல்லி யிருக்காரா?"

"ஓ! சொல்லியிருக்காரே..."

"நீ வீணான ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டு உனக்கும் உன் குடும்பத்திற்கும் கஷ்டத்தைக் தேடிக் கொள்ளப் போகிறேன்னு எச்சரிக்க விரும்பறேன். வஸந்த் பிராமணன் இல்லை. தெரியுமா?..."

ஒரு நிமிஷம் சாம்பவி அயர்ந்து போனாள். இதுவரை அவனிடம் அத்தனை நெருக்கமாகப் பழகியும் இந்த உண் மையை ஏன் அவள் தெரிந்து கொள்ளவில்லை?

"அவர் பேச்சு- பழக்க வழக்கம்... இதெல்லாம்..."

"இந்தக் காலத்தில் பேரையும்- ஊரையும் -பேச்சையும் கொண்டு எந்த ஜாதி- என்ன மதம்னு, சட்டுனு யார் தான் தெரிஞ்சுக்க முடியும்? நாம் கூட வெளியே வந்து பலரோடு பழகுவதால் நம்ப ஸ்டைலையே மாத்திக் கொண்டிருக்கோம்- நம் பேச்சைக் கேட்டு இன்ன ஜாதின்னு பிறர் எப்படிப் புரிஞ்சுக்க முடியும்?"

சாம்பவியின் உடல் நடுங்கியது. நெஞ்சிலே ஒரு கலக்கம்- மனதை என்னவோ செய்தது.

"நான் கேட்காததினால் அவர் சொல்லவில்லை. உனக்கு அவரைப் பற்றி எப்படித் தெரியும்?"

"நான் கூட முதலில் அவர் நம்மவர்தான்னு நினைச்சேன். பார்க்கிறதுக்கு ஆள் அப்படித்தானே இருக்கிறார்? சமீபத்திலே தான் எனக்கு உண்மை தெரிஞ்சது. அவருடைய தங்கை லதாவுக்கு எங்க பக்கத்து வீட்டு அம்புஜம் சிநேகிதி, அவள் சொன்னாள். லதாவின் அப்பா நடராஜ முதலியார். பெங்களூரில் அவளுடைய அப்பாவுடன் ஒரே கம்பெனியில் வேலை பார்த்தாராம். அதனால்தான் சொன்னேன்-வஸந்த்தும் நீயும் ரொம்ப நெருங்கிப் பழகுவதினாலே..." அவள் முடிக்கவில்லை. சாம்பவியின் நெஞ்சு உலர்ந்து போயிற்று. அப்பா மிகக் கோபாவேசத்துடன் எதிரே நிற்பது போன்ற ஒரு கற்பனை



அவள் மேனியைச் சிலிர்க்கச் செய்தது. எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

"அதனால் என்ன? ஜாதி-மதம் இவைகளில் எனக்கு நம்பிக்கை இல்லைங்கிறது உனக்கும் தெரிஞ்சது தானே...?" மனத்தாங்கலுடன் கேட்டாள்.

"என் வரைக்கும் என் ஜம்பம் எல்லாம் வாய்ப் பேச்சோடு சரி. கல்யாணம்னு நெருங்கி வந்தால் எனக்கு அனாவசியமா ஜாதிப் பிரச்சினையில் சிக்கிக்க பயமா இருக்கும்..." அதற்கு மேல் பேசத்தோன்றாது மல்லிகா எழுந்திருந்தாள். அன்று இரவு சாம்பவிக்கு உறக்கமே வரவில்லை.

வஸந்த் ஏன் அவளிடம் இதுவரை தன் ஜாதியைப் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை?

சொல்லியிருந்தால் அவள் நெருங்கிப் பழக மறுத்து விட்டிருப்பாளா?

வஸந்த் அவளிடம் நேசமாக நெருங்கிப் பழகுகிறார்.

அவ்வளவுதானே? மோசமாக நடந்து கொள்வதில்லையே?

அவர்கள் நட்பு மிகவும் கண்ணியமானது- ஏன் கலங்க வேண்டும்? ஒரு ஆணும் பெண்ணும் நல்ல நண்பர்களாக நெருங்கிப் பழகுவது தவறா? நான்ஸென்ஸ்... கல்யாணம் என்ற பேச்சே அவர்களிடையே எழுந்ததில்லை. ஏன் இந்தக் கவலை- பதட்டம்?... உதறிவிட்டு உறங்க முயற்சித்தாள். ஆனால் அம்மாவைப் பற்றிய நினைப்பு இடையே எழுந்து கலவரப்படுத்தியது.

இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் காமாக்ஷி, மகளைக் கேட்டாள்.

"இப்போதெல்லாம் ஏம்மா இப்படி நேரங்கழிச்சு வீட்டுக்கு வர்றே? சீக்கிரம் வந்தால் எனக்குக் கொஞ்சம் உபகாரமா இருக்காதா? உன் சிநேகிதி மல்லிகா வீட்டிலே அவள் மன்னி

இருக்கா- வீட்டுக் காரியங்களை அவள் கவனிச்சுடறாள். இங்கே நம்பதானே எல்லாத்தையும் செய்யணும்?"

காமாக்ஷி படித்தவள்தான்- ஆனால் பத்தாம்பசலி- குழந்தைகள் மேல் அத்தனை ஒரு நம்பிக்கை. நாம் வளர்த்த செல்வங்கள். தப்புத்தண்டை வழிக்குப் போக மாட்டார்கள் என்ற அசையாத ஒரு எண்ணம்.

தாயை ஏமாற்றுகிறோமே என்கிற குற்ற உணர்வு அவள் நெஞ்சைக் கிள்ளியது.

"இன்னிக்கு கடைத் தெருவைச் சுற்றினோம் நேர மாச்சு" பொதுவாகச் சொன்னாள்.

"யாருடன்?" என்று அம்மா அப்போது கேட்க வில்லை. அவளும் தானாகச் சொல்ல முன் வரவில்லை.

ஹைதராபாத்திலிருந்து திரும்பி வந்திருந்தான் அவன். காலையில் பரிசோதனைச் சாலைக்குள் போகுமுன்னே அவளது ஆபீஸிற்கு வந்து அவளைப் பார்த்து ஹாய்- சொல்லிவிட்டுத் தான் போனான்.

அன்று பகல் சாப்பாட்டு நேரத்திற்கு அவர்கள் காப்பி ஹவுஸில் சந்தித்தார்கள். அங்கே பேச வாய்ப்பு இருக்கவில்லை.

மாலை, கடற்கரை மணலின் மீது வந்து உட்கார்ந்து கொண்டு கடற்காற்றை அனுபவித்துக் கொண்டிருந்த போது தான் அவனுக்கு முதன் முதலாக அதைப் பற்றிப் பேச வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

வெகுநேரம் பலவும் பேசிக்கொண்டிருந்தார்கள். சுருண்டு கரை மீது வந்து மோதிய கடல் அலைகளையும் நீல வானத்தை யும் பார்த்தபடி திடீரென்று இருவரும் மௌனமாகி விட்டனர்.

பொழுது அமர்ந்து பூரண நிலவு பொற்குடம் போல் கடலினின்று எழுந்ததைக் கண்டதும் தான் அவளுக்கு நேரத்தின் நினைவு வந்தது.



"வஸந்த்! இன்னிக்கு சீக்கிரம் வீட்டுக்குப் போகணும். அம்மாவுக்கு சமையலில் உதவி செய்ய ஒப்புக் கொண் டிருக்கிறேன்!"

"அதெப்படி முடியும்? இன்னிக்குத்தானே உன்கிட்ட ஒரு முக்கிய விஷயம் பேசணும்கிற முடிவோட வந்திருக்கேன்..."

சட்டைப் பையைத் துழாவி ஒரு சிறு அட்டைப் பெட்டியை எடுத்தான்.

"ஹைதராபாத்திலிருந்து உனக்காக இதை வாங்கிக் கொண்டு வந்தேன். முதலில் இதை என் அன்பளிப்பாக ஏற்றுக்கொள். பிறகு நான் சொல்ல வந்ததைச் சொல்லி விடுகிறேன்..."

பெட்டியை வாங்கித் திறந்தாள். உள்ளே ஒரு ஜோடி முத்து வளையல்கள்.

"மலைத்துப்போகாதே... கவரிங் கோல்ட் வளையல்கள்தான். முத்துகளும் போலிதான். ஆனால் நான் சொல்லப் போகிற விஷயம் போலியல்ல. உண்மை- காலம் வரும். அப்போ நல்முத்துகள் பதித்த தங்கவளையல்களைப் பரிசாகக் கொடுப் பேன்- நம்பலாம்..." சிரித்துக்கொண்டே அவளைப் பார்த்தான்.

வளையல்களைக் கையில் எடுத்து அழகு பார்த்தாள். "அளவுகூட சரியாக இருக்கும் போலிருக்கே?" வியப்புடன் கேட்டாள்.

"என் தங்கைகள் கடையிலிருந்து வளையல்கள் வாங்கிக் கொண்டு வந்தார்கள். அதைப் பார்த்ததும் உன் நினைவு வந்தது. ஊருக்குப் புறப்படுமுன் கடைத் தெருவுக்கு ஓடி வாங்கிக் கொண்டு வந்தேன். ஏறக்குறைய லதாவின் அளவு உனக்குச் சரியாக இருக்கும் என்று என் ஊகம் சரியாக இருக்கு பாத்தியா?" புன்முறுவலித்தான்.

சாம்பவியின் முகம் திடீரென்று சாம்பியது.

"வஸந்த், இவைகளை நான் ஏற்றுக் கொள்கிறது சரியல்ல. நீங்களும் நானும் நெருங்கிப் பழகுகிறோம் ஒப்புக் கொள்கிறேன்... ஆனால் ஒரு பெண்ணுக்கு பூ- பொட்டு- வளையல்கள் இவைகளை வாங்கிக் கொடுக்கும் உரிமை ஒரே ஒருத்தனுக்குத்தான் உண்டு..."

பேசமுடியாது உணர்ச்சி வசத்தில் நடுங்கினாள்.

"அந்த ஒரு உரிமையைப் பெறத்தான் உன்னிடம் நான் இன்று பேச விரும்பினேன்..."

"சாம்பவி என்னை நீ கல்யாணம் செய்துகொள்வியா? உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன்"- அவன் கேட்டபோது அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, ஊடே ஒரு அச்சம்?

விரல்களால் மணலை அளைந்து கொண்டிருந்த சாம்பவி, உடனே பதில் சொல்லவில்லை.

மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"வஸந்த்! உங்கப்பாவின் முழுப் பெயர் நடராஜ முதலியாரா? அந்தக் கேள்வியைக் கேட்குமுன் பயத்தில் அவள் இதயத் துடிப்பு அதிகமாகிறது.

ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான் அவன். உடனே சிரித்து விட்டான். "எனக்கு ஜாதிப் பட்டங்கள் மீது பிடித்தம் இல்லை. அதனால் என் பெயருக்குப் பின்னாலிருந்ததை நான் கல்லூரி நாட்களிலேயே வெட்டி விட்டேன்... ஆமாம், ஏன் கேட்கிறாய்? புரிந்தது... நீ வேறு ஜாதி- நான் வேறு ஜாதி என்று தானே சொல்லப் போகிறாய்? உண்மையாக நாம் ஒருவரையொருவர் விரும்பினால் உயர்வு-தாழ்வு என்கிற பேதங்களைப் பற்றி, சிந்திக்கணுமா?..."

"இல்லை... எனக்கு விளக்கம் தேவையாக இருந்தது கேட்டேன்."

"அப்போ உன் பதில்?"



"கொஞ்சம் அவகாசம் தேவை- அதுவரை இந்த வளையல்கள் உங்களிடமே இருக்கட்டும்"- அவள் எழுந்திருந்தாள்- அவனும் கூடவே எழுந்திருந்தான்.

சாப்பாட்டிற்குப் பிறகு அவள், வாயில் வராந்தாவிலே உட்கார்ந்து கொண்டாள். இப்பொழுது முன் பக்கத்துத் தோட்டத்திலே சுவர் ஓரமாக இரண்டு தென்னை மரங்கள் மட்டுந்தான் இருந்தன. மெல்லியதாக வீசிய காற்றில் அசைந்த தென்னங்கீற்றுகளின் சலசலப்பு காதுகளுக்கு இதமாகத்தானிருந்தது. பளிச்சென்று வீசிய நிலவின் ஒளி-கீற்றுகளின் இடையே புகுந்து தரைமீது இட்ட நிழல் கோலத்தை வெறித்தபடி அவள் சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தாள்.

வஸந்த் அவளைக் காதலிக்கிறார். கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறார். அவளும் விரும்புகிறாள். இடையே ஜாதி என்ற வித்யாசம். அப்பா சம்மதிப்பாரா? உண்மையில் ஜாதியைப் பற்றி அவள் சிந்தித்துக் கவலைப் பட வேண்டியது அவசியமா?

அவளை, அவளுக்காக விரும்பும் "மனித" மனிதனைத் தான் அவள் மணக்கப் போவதாகச் சவால் விட்டாளே? இப்போது ஏன் இந்தக் கலவரம்? வஸந்த்திற்கு அவள் பதில் சொல்லியாக வேண்டும். என்ன பதில் சொல்வாள்?

"உங்களை விரும்புகிறேன். ஆனால் நமக்குள் இடையே நிற்கும் இந்த ஜாதி பேதத்தைப்பற்றிப் பயமாக இருக்கிறது" என்று ஒதுங்கிக் கொள்வதா? 'சரி' என்று துணிவுடன் ஒப்புக் கொள்வதா? ஒரே குழப்பம்.

"என்ன சாம்பவி இங்கே வந்து உட்கார்ந்துண்டு இருக்கே? நாழியாச்சே, உள்ளே வா" அம்மாவின் அன்புக் குரல் அவள் சிந்தனையைக் கலைத்தது.

வஸந்த் மட்டும் வேறு ஜாதிக்காரனாக இல்லாதிருந்தால்...? அம்மாவிடம் அவள் மனம் விட்டுப் பேசி முடிவு கேட்டிருப்

பாள். இந்தக் கல்யாணத்துக்கு அம்மா ஒத்துக் கொள்ள மாட்டாளே?

"உனக்கு உடம்புக்கு என்ன? ஒரு மாதிரி இருக்கியே" காமாக்ஷி ஆதங்கத்துடன் கேட்டாள்.

அவளுக்கு மூச்சே அடைக்கும் போன்று நெஞ்சில் பெரும் சுமை. பெற்ற தாயிடம் பேசித் தெளிவு காண முடியாத பெரும் பிரச்சனை நெஞ்சைப் பாறாங்கல்லாக அமுக்கியது.

"ஒண்ணுமில்லை... தலைவலி, தூங்கினால் சரியாகி விடும்" கூறிக்கொண்டே உள்ளே சென்றுவிட்டாள்.

இரண்டு தினங்களாக இதே குழப்பத்தில் அவள் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். வஸந்த்தும் அவளும் வழக்கம் போல் சந்தித்தனர். காப்பி அருந்தினர். பூங்காவில் உட்கார்ந்து பேசினார்கள். ஆனால் அவன் மீண்டும் கல்யாணத்தைப் பற்றிப் பேசவில்லை. அவளது பதிலுக்குக் காத்திருந்தான்.

அன்று மாலை வீட்டுக்கு வேண்டிய சில சாமான்களை வாங்கிவர, அவனது துணையுடன் நேத்தாஜி சாலையில் அவள் நடந்து கொண்டிருந்தாள்.

அம்மாவுக்கு ஹார்லிக்ஸ்- கௌசிக் சாப்பிட நெஸ்காப்பி அப்பாவுக்கு பிஸ்கட்... என்று சாமான்களை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு திரும்பும்போது தான் பார்த்து விட்டாள். குபீரென்று உடல் முழுவதும் வியர்வை துளிர்த்தது; நெஞ்சு படபடத்தது; கால்கள் அச்சத்தில் தள்ளாடின.

அன்று இரவு சாப்பாட்டிற்குப் பின்னர், காமாக்ஷி மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு அவள் அறைக்குள் வந்தாள்.

"எங்கே நான் வர்றதுக்குள்ளே தூங்கிவிடறயோன்னு பரக்க பரக்க வேலையை முடிச்சிட்டு வந்தேன்" கதவைச் சாத்திவிட்டு அவள் படுக்கையின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.



திடுக்கிட்டுத் திரும்பிய சாம்பவியின் கையிலிருந்த பார்பரா கார்ட்லண்டின் "ஸே-யெஸ்-ஸமந்தா!" நழுவி விழுந்தது.

அம்மா குனிந்து புத்தகத்தை எடுத்துப் பக்கத்திலிருந்த மேஜை மீது வைத்தாள்.

"இன்னிக்கு சாயங்காலம் உன் அக்கா சந்திரா வந்திருந்தாள்!"

சாம்பவியின் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

அம்மா என்ன கேட்கப்போகிறாள் என்பதை வினாடியில் புரிந்து கொண்டு விட்டாள். பதிலுக்குத் தயாராகத் தொடங்கினாள்.

"சந்திரா சொன்னாள். நேத்தாஜி சாலையிலே உன்னைப் பார்த்தாளாம். அந்தப் பையன் யார்?" அம்மா நேரிடையாக விஷயத்துக்கு வந்தாள்.

"என் கூட வேலை செய்கிறவர்."

"உன்னை அவனோட உன் அக்காவும் அத்திம்பேரும் பல தடவை பல இடங்களில் பார்த்திருக்கிறார்களாம். விஷயம் விபரீதமாகிவிடப் போகிறதேன்னுதான் சந்திரா இன்னிக்கு உன்னை அவனோட கடைத்தெருவில் பார்த்ததும் நேரே காரில் இங்கே வந்து என் கிட்ட சொல்லிட்டுப் போனாள். அந்தப் பையன் நம்ப ஜாதியில்லையாமே. உங்க அத்திம்பேர் அவனைப் பத்தி விவரமாக தெரிஞ்சு வச்சுண்டுதான் சந்திரா கிட்ட சொன்னாராம்- நல்ல வேளை, அப்பாகிட்ட சொல்லாம என்கிட்ட வந்து சொன்னாள்."

சாம்பவியின் மூக்கும் முகமும் திகுதிகுவென்று எரிந்தன.

"இந்த சந்திரா அக்கா அவனைப் பற்றித் துப்புத் துலக்கிக் கொண்டு அலையணுமா? வேலையற்றவள்" கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"அவரும் நானும் ஒருவரையொருவர் விரும்புகிறோம். அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுகிறார். என் சம்மதத்தைக் கேட்டார்."

"நீ என்ன சொன்னே?"

"நீங்க இதைப்பத்தி என்ன நினைக்கிறீங்க?"

"அப்பா ஒத்துக்க மாட்டார். உன் இரு அக்காவின் பக்கத்திலே பெரிய எதிர்ப்பு இருக்கும்..."

"அவங்களை விடுங்க. உங்கள் அபிப்ராயம் என்னம்மா?"

"எனக்கும் இதிலே இஷ்டமில்லை. நீ வீணா நம்ப குடும்பத்து கௌரவத்தை நாசப்படுத்திடாதே. ஏற்கெனவே ரொம்ப நொந்து போயிருக்கோம்..." அம்மாவின் குரல் கரகரத்தது.

"காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கொண்ட நீங்களே, இப்படி பேசுகிறது நியாயமா அம்மா?"

"நானும் அப்பாவும் ஒருவரையொருவர் விரும்பித் தான் கல்யாணம் பண்ணிக்கொண்டோம். ஆனால் எங்களுக்குள்ளே ஜாதி வித்யாசம் இருக்கலை..."

"ஏதோ அதிர்ஷ்டவசமா அப்படி அமைஞ்சுடுத்து. ஜாதி... மதம் இதையெல்லாம் விசாரணை பண்ணிண்டு தான் அன்புங்கிறது ஒருத்தர்மேலே ஏற்படுமா அம்மா?"

"சாம்பவி?" அம்மாவின் குரல் அதட்டலாகவே ஒலித்தது. "ஏடாகூடமா பேசாதே. இதுவரை நீ ஏதாவது தவறு செஞ்சிருந்தால்கூட நான் காணாதுபோல் மறந்திடறேன். நிச்சயமா சொல்லிட்டேன். இதிலே உன் பிடிவாதத்துக்கு அப்பா அசைஞ்சு கொடுக்கமாட்டார். வீணா வீட்டிலே பெரிய ரகளைதான் மிச்சமாகும். உன் இரண்டு அக்கா வீட்டவர்களும் ஒத்துக்கொள்ள மாட்டா. எனக்கும் கட்டோட பிடிக்கலை."

"இந்த காலத்தில் கூட உயர்ந்த ஜாதி-தாழ்ந்த ஜாதிங்கிறதை நீங்க நம்புகிறீர்களா?"



"நம்பிக்கை என்கிறது வேறு. வாழ்க்கைக்கு ஒட்டி வரதான்னு ஆராய்ஞ்சு பார்க்கிறது வேறு. நீ ஏன் விஷப் பரிக்ஷையில் இறங்கணும்- கல்யாணம் என்கிறது ஆயிரம் காலத்துப் பயிர். அதைக் கணப்பொழுதில் கருகவிட முடியுமோ"

"தீர விசாரித்துக் கொண்டு வந்த வரன்கள் நளினி விஷயத்தில் என்ன ஆச்சு? நளினியை எத்தனை பேர்வந்து அவமானப் படுத்திட்டுப் போனார்கள்? கடைசிலே வந்தானே? அந்த வரன் அவளுக்கு வந்த யமன்!

"அதுக்காக எங்களை நீ அவமானப்படுத்த புறப்பட்டுட்டியா? மூத்த மாப்பிள்ளை உன்னை அவனோட பீச்சிலே பார்த்தாராம். வெட்கம் பிடுங்கித் தின்னுதாம்."

"அப்படி வெட்கப்படுகிறவர், எனக்கு மனசுக்குப் பிடிச்ச ஒரு மாப்பிள்ளையைத் தானே தேடி கைக்காசை செலவழிச்சு எனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்கிறதுதானே? அவர் கிட்டத்தான் ஏகப்பட்ட பணம் கொட்டிக் கிடக்கே."

"இப்படிநீ எல்லாரையும் தூக்கி எறிஞ்சிப் பேசக்கூடாது. உன் நல்லதுக்குத்தானே சொல்றார்?"

"தானும் ஒண்ணும் செய்ய மாட்டார், நானாக ஒரு வாழ்க்கையைத் தேடிக் கொண்டாலும் நடுவிலே புகுந்து தொல்லை கொடுப்பார். எனக்கு அத்திம்பேரின் அபிப்பிராயம் தேவையில்லை. இது என் வாழ்க்கை. அதைப் பத்தி முடிவு செய்ய வேண்டிய உரிமை என்னுடையது."

"சாம்பவி, உனக்கு ஆயிரம் நமஸ்காரம் பண்றேன். நீ ஏதாவது தப்புக்காரியம் செஞ்சுடாதே- அப்பாவுக்கு இனி எதையும் தாங்கிக்கிற திராணி இல்லை. என் மனசும் ஏற்கெனவே ஒடிஞ்சு போச்சு" காமாக்ஷி முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

# 8

அன்று இரவு அவள் வெகுநேரம் தூங்காது சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

வரதக்ஷணை -சீர் என்று பிறந்த வீட்டின் பெரும் பகுதி சொத்தை விழுங்கித் தங்களுக்கு ஒரு சுகவாழ்வு தேடிக் கொண்டவர்கள் அவளது சகோதரிகள். அப்பா கை சளைத்துப் போயிருக்கிறாரே என்று உதவ முன்வர மனமும் இல்லை. துணிவும் இல்லை.

இந்நிலையில் தங்கையின் வருங்காலத்தைப் பற்றி குட்டை குழப்ப அவர்களுக்கு என்ன உரிமை? நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் கொதித்தது. கோபம் எரிமலையாகச் சீறிக்கொண்டு எழுந்தது.

"இவர்கள் சொல்வது- நான் கேட்பதா? முடியாது- என் வருங்காலத்தை நானே என் இஷ்டப்படி வகுத்துக் கொள்வேன். ஜாதி வேற்றுமை என்பது ஊரில்- உலகத்தில் கேள்விப்படாத சங்கதியா? ஒருசில நாட்கள் குடும்பத்திலே ஒரே குழப்பமும் கூச்சலுமாக இருக்கும். பிறகு தானே அடங்கிவிடும்."

அத்திம்பேருக்குப் பயந்து கொண்டு அவள் கண்களையும் கருத்தையும் கவர்ந்த வஸந்த்தை உதறிவிடுவதா? ஊகும்...

அவளை அவன் அவளுக்காக மணக்க முன் வந்திருக்கிறான். அவள் ஏற்கத்தான் போகிறாள்.

"அப்பா?... கொஞ்சம் மனம் அதிர்ச்சியடைவார். பிறகு தேறிக்கொண்டு விடுவார். நளினியின் சாவையே மறந்து மனத்திடத்துடன் வாழ, இப்போது அவர் பழகிக் கொண்டு விடவில்லையா? சாம்பவியின் மணவாழ்க்கையைக் கண்டு கலங்கிவிடவா போகிறார்? முதலில் சங்கதி கசப்பாக இருக்கும்- பின்னால் தானே சரியாகிவிடும்.



அம்மா?... அவங்கத்தான் எல்லா இடிகளையும் தாங்கி நிற்கும் வீட்டின் கல் தூணாச்சே! வேப்ப மரங்களை வெட்டிய போது என்ன சொன்னாங்க? மாறுதல்கள் முதலில் மனசை உறுத்தும்- பின்னால் தானே சகஜமாகி விடும் என்றார்களே!

அவளுக்குத்தான் இனி துணிவு இருக்க வேண்டும்- இது அவள் வாழ்க்கை. அவள் யாருக்காகப் பயப்பட வேண்டும்? ஜாதிக்காகவா? அந்த ஜாதியிலிருந்து எவன் அவளை அவளுக்காக மணந்துகொள்ள முன் வந்தான்?

முன் வைத்த காலை பின் வைக்கக்கூடாது. ஊகும்... கூடாது. வானமே இடிந்து- பூமியே பிளந்து- உலகமே உருவே தெரியாது போய் விட்டாலும்- அவள் மனம் மாறக் கூடாது.

உறக்கமில்லாமல் கூரை முகட்டைப் பார்த்தபடியே அவள் வெகு நேரம் படுத்திருந்தாள். முன் அறை கடிகாரம் மூன்று முறை அடித்து ஓய்ந்தது. அவள் திடுக்கிட்டுப் போனாள். கொஞ்ச நேரமாவது தூங்க வேண்டாமா? ஆபீஸிற்குப் போனதும், அவருக்கு அவளது தீர்மானத்தைச் சொல்ல வேண்டாமா? கண்களை இறுக மூடிக்கொண்டு ஒரு முடிவுடன் உறங்கினாள்.

மறுநாள் அந்திப்பொழுது... அந்தப் பூங்காவில் அவர்கள் சந்தித்தனர்.

பெஞ்சின் மீது அவள் அருகே வஸந்த் உட்கார்ந்து கொண்டான்.

"அந்த முத்து வளையல்களைக் கொடுக்கிறீர்களா? நான் ஏற்றுக் கொள்வதாக முடிவு செய்துவிட்டேன்."

வஸந்த் மகிழ்ச்சியில் முகம் மலர்ந்து போனான்.

"அப்படின்னா சாம்பவி?..." அவனால் ஆனந்தத்தில் பேச முடியவில்லை- பையைத் துழாவி அந்த சிறு அட்டைப் பெட்டியை எடுத்துக் கொடுத்தான்.

நீ என்னைக் கல்யாணம் செய்துகொள்ள சம்மதிச்சுட்டியா? பூரிப்போடு கேட்டான்.

"பூரண சம்மதம். ஆனால் ஒரு நிபந்தனை. நாம் விரைவாக பதிவுத் திருமணம் செய்துகொள்ள வேண்டும். அதற்கு ஆவன செய்வது உங்கள் பொறுப்பு. அதுவரை விஷயத்தை வெளியே விடக்கூடாது. யாருக்கும் தெரிவிக்கக்கூடாது. எங்கள் வீட்டில் பலத்த எதிர்ப்பு இருக்கும். யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். வீண் சண்டை சச்சரவுடன் நாம் ஏன் வாழ்க்கையைத் துவங்க வேண்டும். அதனால் நாம் ஜாக்கிரதையாக இருப்பது மேல்."

"நானும் அதைப் பற்றியேதான் யோசித்துக் கொண்டிருந் தேன். என் தாயாரும் இதற்கு ஒப்பமாட்டாங்க..."

"நாமிருவரும் மனம் ஒப்பினால் போதும். நம் வாழ்க்கையை வகுத்துக்கொள்ள நம் இருவருக்கும் துணிவு இருந்தால் போதும்- வேறு என்ன வேணும்?..."

ஆம், என்பதற்கறிகுறியாக அவன் தலையை பலமாக ஆட்டினான்.

அதற்குப்பின்னர் அவர்கள் பேசித் தீர்மானித்தபடியே கொஞ்சகாலம் அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்காது, அதே மருத்துவமனையில் தங்கள் வேலைகளில் கவனமாக இருந்தனர்.

மல்லிகாவுக்கு அதிசயமாகத்தானிருந்தது.

"சாம்பவி கடைசியில் பயந்துகொண்டு பின்வாங்கி விட்டாளே! குடும்பத்தை விரோதித்துக் கொண்டு கிளம்புவ தென்றால் லேசான காரியமா? முடிவில் அவளும் வெறும் வாய் வீச்சோடு சரி. காரியத்தில் இறங்க வேண்டும் என்றதும்



பயம் வந்துவிட்டது. நகர்ந்துவிட்டாள். தனக்குள்ளே எண்ணிக் கொண்டாள். ஆனால் சிநேகிதியிடம் எதுவும் கேட்க விரும்ப வில்லை.

அன்று மாலை காமாக்ஷி அவசரமாக சமையலை முடித்துக் கொண்டு வாயில் பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள். பொழுது அமர்ந்து இருள் பரவத் தொடங்கிவிட்டது. இன்னமும் சாம்பவியைக் காணவில்லை. திடீரென்று அவள் உள்ளத்திலே இனம் விளங்காத ஒரு திகில். உள்ளுக்கும் வாயிலுக்குமாகப் பலமுறை நடந்தாள்.

லேசாக தொண்டை கட்டிக்கொண்டு-இருமலும்- தும்மலு மாக ராமபத்ரன் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். இரண்டு தினங்களுக்கு முன்னர் பெய்த ஒரு சிறு மழையில் அவர் நனைந்துவிட்டதின் விளைவு. நண்பன் நாகநாதனுடன் வெகுநேரம் அரட்டையடித்து விட்டு இருட்டிய பின்புதான் வீடு திரும்பும் வழக்கமுடைய அவர் வேலையினின்று நேரே வீட்டிற்கு வந்துவிட்டிருந்தார்.

ஆபீஸ் உடைகளைக் களைந்துவிட்டு வேஷ்டியைச் சுற்றிக்கொண்டு முகத்தைக் கழுவிக் கொண்டார். மேல் துண்டை பனியன்மீது போர்த்திக் கொண்டு வாயிலுக்கு வந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டார்.

அப்பொழுது காமாக்ஷி அடுப்பிலிருந்து இறக்கி வைத்த மிளகு ரசத்தை ஒரு தம்ளரில் நிறைத்து எடுத்துக் கொண்டு வாயிலுக்கு வந்தாள்.

"நான் நினைச்சேன்-தொண்டை கட்டுக்கு கொஞ்சம் மிளகு ரசம் சாப்பிட்டா நன்னா இருக்குமேன்னு- நீ கொண்டு வந்துட்டே தாங்க்யூ..." அவர் புன்னகைத்தார். அவரிடம் தம்ளரை நீட்டியபோது, காமாக்ஷியின் கரங்கள் நடுங்கின.

"என்ன இன்னமும் இந்தப்பெண்ணைக் காணோமே? எண்ணி எண்ணி- உள்ளே குழம்பிக்கொண்டிருந்தாள்.

ரசத்தை சுவைத்து உறிஞ்சிக்குடித்து விட்டு தம்ளரைக் கிழே வைத்தார் ராமபத்ரன். துண்டால் வாயைத் துடைத்துக் கொண்டார். வராந்தா இருளில் மூழ்குவதைக் கண்டு காமாக்ஷி மின் விளக்கைப் போட்டாள். அப்பொழுதுதான் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

காமாக்ஷிக்கு வயிற்றை பகீர் என்றது. நெஞ்சு உலர்ந்து-உதடுகள் காயந்து உயிரே போய்விட்டது போன்ற ஒரு தொய்வு உணர்வுடன் வாயிற்படியை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

"என்ன எல்லாரும் இந்த வேளையிலே கிளம்பியிருக்கேள்... சினிமாவா டிராமாவா? போற வழியிலே அப்பாவுக்கு ஒரு விசிட்டா? வாங்கோ... உட்காருங்கோ..." மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

கார்களிலிருந்து எல்லோரும் பரபரப்புடன் இறங்கினார்கள்.

"நம்ப வீட்டிலேயே ஒரு பெரிய டிராமா நடந்தாச்சு ... அப்பா! சாம்பவி இப்படி மோசம் பண்ணுவா - நம்ப தலையிலே கல்லைத் தூக்கிப் போடுவான்னு நினைக்கவே யில்லை" ஆத்திரத்துடன் படபடத்தாள் பெரிய மகள் சந்திரா.

"நாம் உள்ளே போய் பேசலாமே- வாசலில் என்னத்துக்கு விவகாரத்தை அலசணும்?" மூத்த மாப்பிள்ளை அடிக்குரலில் மனைவியை அதட்டினார்.

இளைய மருமகன் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு ராமபத்ரனை விரைப்பாகப் பார்த்தான்.

அவன் மனைவி தலையைக் குனிந்துகொண்டு அவன் பின்னால் மௌனமாக நின்றாள்.

ராமபத்ரனுக்கு ஒரே குழப்பம்.

"வாங்கோ, எல்லோரும் உள்ளே வந்து உட்காருங்கோ."



காமாக்ஷி மெல்ல முன்னால் நடந்தாள். முன்னறையின் குழல் விளக்கை எரியவிட்டாள். தடுக்கி விழுந்து விடுகிறவள் போல் அவள் உடல் பயத்தில் தள்ளாடியது.

முன்னறையில் எல்லோரும் உட்கார்ந்து கொண்டனர். மூத்த மாப்பிள்ளை தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"சாம்பவி பெங்களூரிலிருந்து போன் பண்ணினாள். வர ஒரு வாரமாகுமாம்."

"பெங்களூருக்கு சாம்பவி போனாளா? என்ன நீங்க சொல்றது?" திகைப்புடன் கேட்டார் ராமபத்திரன்.

காமாக்ஷி வியர்த்து விறுவிறுத்துப் போனாள். முடிவில் சாம்பவி பிடிவாதமாக, தன் போக்கிலே போய் விட்டிருக்கிறாள். தாயின் பேச்சைக்கூட அவள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. நெஞ்சிலே ஒரு கல் உருண்டை அடைத்துக் கொண்டுவிட்டது போல் அவளுக்கு மூச்சுத் திணறியது. தொடர்ந்து நிற்க முடியாது அருகில் கிடந்த ஒரு மோடா மீது உட்கார்ந்து கொண்டாள்.

"தேன் நிலவுக்கு அவள் புருஷனோட பெங்களூர் போயிருக்கா. சாயங்கால தபாலில் இந்தக் கடிதம் வந்தது. உடனே கொஞ்ச நேரத்திலே போனும் வந்தது. அதனாலே நாங்க தங்கையையும், மாப்பிள்ளையையும் அழைச்சிண்டு உங்க கிட்ட பேச வந்திருக்கோம்" விளக்கம் கொடுத்துவிட்டு, சந்திரா தன் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவரிடம் கொடுத்தாள்.

கடிதம் அவருக்குத்தான் எழுதப்பட்டிருந்தது. ஆனால் நேரிடையாக அனுப்பப்படாது, அக்கா சந்திராவின் வீட்டு முகவரிக்கு வந்திருந்தது. கையும் காலும் பதற அதைப் பிரித்துப் படித்தார்.

"அன்புள்ள அப்பாவுக்கு,

உங்களிடம் மனம் விட்டுப் பேசி உங்கள் ஆசியுடன் இந்த காரியத்தைச் செய்திருந்தால் நான் மகிழ்ச்சியுடன் புறப்பட்டிருப்பேன். அதற்கு நான் கொடுத்து வைக்க வில்லை. அவ்வளவுதான்.

எங்கள் மருத்துவமனையில் பயோகெமிஸ்டாக வேலை பார்த்து வரும் வஸந்த் என்பவரை இன்று காலை நான் பதிவுத் திருமணம் செய்து கொண்டு விட்டேன். அவர் நம் ஜாதியைச் சேர்ந்தவர் இல்லையே ஒழிய- மிகவும் கண்ணிய மானவர். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். எனக்கு அவரைப் பிடித்து விட்டிருந்ததால் தான் துணிவுடன் இந்த முடிவுக்கு வந்தேன்.

இந்தத் திருமணத்தைப் பற்றி நாங்கள் யாரிடமும் கலந்து ஆலோசிக்கவில்லை. நாங்கள் இருவருமே பேசி எடுத்த முடிவு இது. வேறு யாரும் இதற்குப் பொறுப்பாளியல்ல. உங்களுக்கு இந்தச் செய்தி அதிர்ச்சியை உண்டாக்கலாம். ஆனால் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் நான் செய்ததில் தவறு ஒன்றுமில்லையென்ற முடிவுக்கு வருவீர்கள்.

அப்பா உங்கள் மனத்திற்கு வருத்தத்தைக் கொடுத்திருந்தால் மன்னித்து -என்னையும், என் கணவரையும் ஆசீர்வதிக்க வேண்டுகிறேன். அம்மாவுக்கு ஆறுதல் சொல்லவும்.

தங்கள் அன்பு மகள்
சம்பா குட்டி"

கடிதத்தைப் படித்து முடித்ததும் மனைவி பக்கம் திரும்பினார்.



"காமு கொஞ்சம் ஜலம் கொண்டுவா... நெஞ்சை என்னவோ பண்றது..." மேலே பேச முடியாது தமது மார்பைக் கையால் அமுக்கிக் கொண்டார்.

"அப்பா உங்க உடம்புக்கு என்ன?" இரண்டு பெண்களும் பதறிக் கொண்டு எழுந்து அருகில் வந்தனர்.

ராமபத்ரனுக்கு பொறுக்க முடியாத நெஞ்சு வலி- மூச்சு திணறியது. நெற்றி முழுவதிலும் வியர்வை பூத்துக் கொண்டு காதோரத்தில் கசிந்தது. உதடுகள் கறுத்து... முகம் வெளுத்து... கண்கள் இருள... முன்னறையிலிருந்து அவர்கள் எல்லோரும் சுற்றி வருவது போன்ற ஒரு மயக்க உணர்வில்... அவர் தடாலென்று ஆசனத்தினின்று தரை மீது சுருண்டு விழுந்து விட்டார்.

அப்பொழுதுதான் நூல் நிலையத்திலிருந்து திரும்பி வந்த கௌசிக் வீட்டிற்குள் நுழைந்தான். வாசலில் தன் அக்கா வீட்டவர்களின் கார்களைப் பார்த்ததுமே அவனுக்கு வியப்பாக இருந்தது. உள்ளே முன்னறையில் கூச்சலும், கத்தலுமாக இருந்ததைக் கண்டு அவன் திடுக்கிட்டுப் போனான். வேகமாக ஓடி வந்தான்.

காமாக்ஷி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"கௌசிக் நல்லவேளை வந்துட்டே ஓடிப்போய் நம்ப டாக்டரைக் கூட்டிண்டு வா. அப்பா மயக்கமாக விழுந்துட்டார்..." பதட்டமாக உத்தரவிட்டாள்.

மாப்பிள்ளைகள் இருவரும் மெல்லப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வந்து அவர் அறையில் படுக்கை மீது கிடத்தினர். மயக்கம் தெளியாத நிலையில் கட்டைபோல் அவர் அசைவற்றுக் கிடந்தார். சாம்பவியின் திடீர் திருமணத்தைப் பற்றிக் காரசாரமாகப் பேச ஆவலுடன் வந்திருந்த அவர்கள் யாவரும், இப்போது வாயைத் திறக்க முடியவில்லை.

இதென்ன விபரீதம்? என்ற ஒரு திகைப்பு அவர்களுக்கு. சிறிது பொழுதில் டாக்டர் வந்து சேர்ந்தார். ராமபத்ரனைப் பரிசோதித்து விட்டு வெளியே வந்த அவர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்,. "இந்த முறை வீட்டில் வைத்துப் பார்க்க முடியாத கேஸ். மாசிவ் ஹார்ட் அட்டாக். உடனே ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்."

காமாக்ஷி அவசரமாக சமையலறைக்குள் ஓடி அலமாரித் தட்டிலிருந்த ஜெலுசில் மருந்தைக் கொஞ்சம் எடுத்து சாப்பிட்டுக் கொண்டாள். இந்தக் கலவரத்தில் அவளுக்கு வயிற்றுவலி வேறு ஆரம்பித்து விட்டது.

வயிற்றைப் பிடித்துக்கொண்டு கண்களில் நீர் வழிய சுவரிலே சாய்ந்துகொண்டு நின்ற தாயைப் பார்த்த சந்திராவுக்குப் பரிதாபமாக இருந்தது. இத்தனை கலவரத்திற்கும் துன்பத்திற்கும் காரணமான சாம்பிமேல் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"பாவி- சண்டாளி-எல்லாரையும் ஒழிச்சுக் கட்டத் தான் இந்த காரியம் பண்ணிட்டா. இந்த மாதிரியான திருட்டுக் கல்யாணமெல்லாம் உருப்படுமா? பெத்தவா வயிறு எரிஞ்சா அவ நன்னா இருப்பாளா நாசகாலி..." கத்தினாள் சந்திரா. தங்கையைச் சபித்தாள்.

வயிற்றை ஒருகையில் பிடித்துக்கொண்டே காமாக்ஷி மகள் அருகே ஓடி வந்தாள்.

'சந்திரா வையாதே- குழந்தையைச் சபிக்காதே- தெரியாத்தனம் செஞ்சுட்டா. எங்கேயர்வது அவளும் நன்னா இருக்கட்டும். அவளையும் உங்கள் எல்லோரையும் போல பத்துமாதம் சுமந்துதான் பெத்த வயிறு இது. என்னால ஒண்ணும் தாங்க முடியாது? போறும் நிறுத்து" குலுங்கக் குலுங்க அழுதாள்.



சந்திரா தாயை இறுக்க அணைத்துக் கொண்டு, சமாதானப் படுத்தினாள். "அம்மா கவலைப்படாதீங்க, அப்பாவை நல்ல நர்ஸிங்ஹோமில் அனுமதிச்சு பெரிய டாக்டர் வச்சுப் பார்ப்போம். சீக்கிரம் குணமாகிடும். செலவைப் பத்தி கவலைப்படாதீங்க. நாங்கள் இருக்கிறோம், நான் இவர் கிட்ட சொல்லி ஏற்பாடு பண்றேன்."

காமாக்ஷி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். 'வேண்டாம். அப்பா ஒத்துக்கமாட்டார். அவர் குணம் உனக்குத் தெரியுமே. மாப்பிள்ளைகள் வீட்டிலே ஒரு வாய் சாப்பிடக் கூட அவருக்குப் பிடிக்காது. நானே சமாளிச்சுக்கிறேன். இப்பதானே மாச ஆரம்பம் அதனாலே எல்லாரும் கொண்டு வந்த சம்பளம் முழுசும் செலவாகலை. கையிலே பணம் கொஞ்சம் இருக்கு. நம்ப டாக்டர் அவரை எங்கே அனுமதிக்கணும்னு சொல்றாரோ அங்கேயே வச்சுப்பார்ப்போம். காசு, பணம் இப்போ எனக்குப் பெரிசில்லை... அவர் உசிர்தான் பெரிசு" குமுறி அழுதாள்.

ஒருவார காலம் ஓடிச்சென்றது. மைசூரைச் சுற்றிப் பார்ப்பதற்குள் கையிலிருந்த பணமெல்லாம் செலவாகி விடவே தங்கள் உல்லாசப் பயணத்தை அவர்கள் குறைத்துக் கொண்டு ஊருக்குத் திரும்ப வேண்டியிருந்தது.

காலை பெங்களூர் மெயிலில் வந்து இறங்கியதுப் அவளுக்குப் பிறந்த வீட்டைப் பற்றிய நினைப்பு. ஒரு டாக்ஸ் பிடித்து கோடம்பாக்கம் போகுமுன் அவள் மல்லிகாவுக்கு போன் செய்து அறிய விரும்பினாள்.

மல்லிகாவுக்கும் அவள் கடிதம் எழுதியிருந்தாள். அவளது திடீர் திருமணத்தைப் பற்றி அவளும் அறிந்து அதிர்ச்சி யடைந்திருப்பாள். கட்டாயம் அவள் சாம்பவியின் வீட்டிற்குப் போய் அம்மாவைப் பார்த்து, பேசி விட்டு வந்திருப்பாள் அம்மாவும் அப்பாவும் இந்த சங்கதியை எப்படி வரவேற்

றார்கள்? வீட்டில் நிலைமை எப்படியிருக்கிறது? என்றெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டுமென்றதொரு ஏக்கத் துடிப்பு.

பொதுத் தொலைபேசியில் அவள் மல்லிகாவின் வீட்டு எண்ணைச் சுழற்றினாள். "ஹலோ!" -மறுபக்கத்தில் மல்லிகாவின் பழக்கமான அதட்டல் குரல்.

"நான் தான் சாம்பவி பேசறேன். நாங்க இப்பத்தான் பெங்களூரிலிருந்து திரும்பி வந்தோம்"-அவள் முடிக்கு முன் மல்லிகா பரபரப்புடன் பேசினாள்.

"சாம்பவி, நீ வந்தது நல்லதாப் போச்சு. உனக்கு ஒரு துக்கமான செய்தியைச் சொல்லப் போறேன். சித்தமின்னதான் கௌசிக் எனக்கு போன் பண்ணினான். உங்கப்பா இன்னிக்கு காலை அஞ்சு மணிக்கு சாமா நர்ஸிங் ஹோமிலே இறந்து போயிட்டார். ஹார்ட் அட்டாக்காம். பாடியை வீட்டுக்கு எடுத்துண்டு வந்தாச்சாம். நான்கூட அங்கதான் கிளம்பிண்டு இருக்கேன். உனக்கு இது மாதிரி ஸாக் நியூஸ் நான் சொல்றது இது இரண்டாவது தடவை. அயாம் வெரி ஸாரி..." போனை வைத்துவிட்டாள்.

"அப்பா!" என்று அலறியபடி கணவன் தோள்மேல் சாய்ந்து கொண்டாள் சாம்பவி.

"எனக்கு இப்பவே- எங்க வீட்டுக்குப் போகணும். பரிதாபமாக அழுதாள் அவள்.

டாக்ஸி வீட்டை நெருங்கியதுமே அவளுக்கு துக்கம் பொத்துக் கொண்டு வந்தது. "அப்பா, அப்பா..." என்று புலம்பியபடி இறங்கிய அவளை வராந்தாவில் நின்று கொண்டிருந்த பலர் வியப்புடன் பார்த்தனர்.

மூத்த மாப்பிள்ளை முகம் கடுமையாகியது. தயங்கியபடி வராந்தாவில் வந்து நின்ற வஸந்த்தைப் பார்த்து முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டான்.



பின்கட்டு கூடத்திலேதான் ராமபத்ரனது உடல் தரையில் கிடத்தப்பட்டிருந்தது. கழுத்து மட்டிலும் ஒரு வெள்ளை வேட்டியால் போர்த்தப்பட்டிருந்தது. அவர் உறங்குவது போல் கிடந்தார். காமாக்ஷி அருகில் உட்கார்ந்து கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். இங்கு மங்கும் பரவிக் கிடந்த உறவினர்கள், நண்பர்கள் அடிக்குரலில் தங்களுக்குள்ளே பலவும் கிசுகிசுத்துக் கொண்டிருந்தனர். தாயாரின் பக்கத்திலே உட்கார்ந்திருந்த மூத்த பெண் சந்திரா தங்கையைக் கண்டதும் சீறிக் கொண்டு எழுந்து வந்தாள். கூட்டத்தினிடையே ஒரு சலசலப்பு.

நில்லுடி பாவி! எங்கே வரே. எதுக்குவரே... உன்னைப் பார்க்க வேண்டாம்னுதான் அப்பா ஒரேயடியாகப் போயிட்டாரே. உனக்கு இனி உள்ளேவர என்ன யோக்கியதை இருக்கு?' வழியை மறித்துக்கொண்டு நின்றாள். சின்ன அக்காவுக்கும் திடீரென்று ஆவேசம் வந்து விட்டது.

"ஆமாம், நீ உள்ளே வரக்கூடாது. வந்தால் காலை முறிச்சுடுவோம். நீ இங்கேயிருந்து போற வரையிலும் அப்பா காரியம் நடக்காது. நடக்க விடமாட்டோம். எங்களையெல்லாம் அவமானப்படுத்தி, தலை குனிய வச்சுட்டு எந்த மூஞ்சியை வச்சுண்டு இங்கே வர... எங்க வரைக்கும் நீயும் செத்துப் போனவதான். தெரிஞ்சுக்கோ..." ஆத்திரமாகக் கத்தினாள்.

அத்தை சரோஜா, அண்ணன் உடல் நிலையைக் கேள்விப்பட்டு வந்திருந்தவள்- தன் பங்கை விட்டுவிடவில்லை.

"துண்டாரிகமா எல்லாரையும் எடுத்தெறிஞ்சு பேசறச்சயே எனக்குத் தெரியும். இப்படி ஏதாவது செய்வேன்னுட்டு எதிர்பார்த்தோம். பெத்தவனுக்கே பெரிய எமனா வந்தியே பாவி. நீ நன்னா இருப்பியா?..." கிரீச் சென்று அலறி விட்டு அழத் தொடங்கினாள்.

"பேசாம இருங்கோ..." யாரோ கூட்டத்திலே ஒரு ஆண் பிள்ளை அதட்டல் போட்டார்.

விஷயம் தெரியாதவர்களுக்குக் கூட இப்பொழுது கதை கிடைத்து விட்டது. துக்க வீட்டிலே சண்டை என்றால் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆவல்தானே! இங்கு மங்கும் ஒதுங்கி நின்றவர்கள்கூட கூடத்திற்கு வந்து குழுமி விட்டனர். காமாக்ஷி வெடுக்கென்று எழுந்திருந்தாள். வழியில் நின்ற தன் இரு மூத்த பெண்களையும் கையால் அப்பால் தள்ளினாள்.

"அவள் வரட்டும். ஏன் தடுக்கறேள்? உங்களையெல்லாம் விட, அப்பாவுக்குப் பிடிச்ச பெண் அவள்தான். அவ இல்லாம அவ அப்பா மயானத்துக்குப் புறப்படமாட்டார். அவர் நெஞ்சு வேகாது. என் மனசும் ஆறாது. வழியை விடுங்க. என் குழந்தை அவ அப்பாவின் முகத்தைப் பார்க்கட்டும். இன்னிக்குத்தானே கடைசியா பார்க்கப் போறா" உரத்த குரலில் உத்தரவிட்டாள்.

"அம்மா... அம்மா" அடிவயிற்றினின்று எழுந்த ஓலக்குரலை அடக்க முடியாது கதறிக் கொண்டு ஓடிவந்து தாயைக் கட்டிக் கொண்டாள், கூட்டத்திலிருந்தவர்களும் சேர்ந்து கொண்டு, கூட அழுதனர்.

## 9

அட்டைப் பெட்டிகளை அடுக்கி வைத்தாற்போல் நெருக்கமாகக் கட்டப்பட்ட வீடுகள் நிறைந்த அந்தப் பகுதியில்- அவர்கள் வீடு தெருவின் கடைசியில் இருந்தது. வேப்ப மர பங்களாவில் வேலைக்காரி செல்வியும் அவள் கணவனும் வசித்த அவுட் ஹவுஸ் அதைவிடப் பெரியது எனலாம். அடுத்த வீட்டில் நடக்கும் காரியங்களை இந்த வீட்டு முன்னறையிலிருந்தும் பார்த்துத் தெரிந்துகொண்டு விடலாம்.



அப்படி ஒளிவு மறைவே இல்லாத இடைவெளி. வீடு சிறியது என்பதைப் பற்றி சாம்பவி கவலைப்படவில்லை. அவளது புக்கத்தவர்களின் மனம் சிறியதாக இருந்ததைப் பற்றித்தான் அவள் உள்ளூரப் புழுங்கினாள்.

அந்த ஞாயிற்றுக்கிழமை காலை எழுந்ததும் குளித்து விட்டு உடை உடுத்திக்கொண்டு வஸந்த், அம்மா ஏவிய பொருள்களை வாங்கி வர கடைத்தெருவுக்குப் போயிருந்தான், குளியலுக்குப் பிறகு சாம்பவி கூந்தலை வாரிக்கொண்டு படுக்கையறையில் கண்ணாடி முன் உட்கார்ந்திருந்தாள். உள்ளே சமையலறையிலிருந்து அவள் மாமியாரின் கணீர் குரல் எட்டு வீட்டுக்குக் கேட்கும் அலறலில் அவள் காதுகளில் விழுந்தது.

"ஆமாம்! நேத்தே சம்பளம் கொடுத்து விட்டாங்களாம். வஸந்த் வீட்டுச் செலவுக்கு வழக்கம்போலக் கொடுத்துட்டான். இவள் பேசாம இருக்கா பாத்தியா? சாமான் விக்கிற விலையிலே ஒரு ஆசாமி குடும்பத்திலே அதிகப்படியானாலும் சமாளிக்க முடியாம போகிறது- அந்தத் துப்புக் கெட்டவனுக்கு படிக்கச் சொன்னேன்- பேசாம இருக்கான். அவளும் பணத்தைத் தன் பெட்டிக்குள்ளே பத்திரமா பூட்டி வச்சிண்டு இருக்கா... பாலும் தயிரும் ஆகாசத்திலிருந்து குதிக்குமா?" மூத்த பெண் ஜெயாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"அவளுடைய பவுடருக்கும் சோப்புக்கும் சம்பளம் பத்தலை போலிருக்கு..." இளைய பெண் லதா சிரிப்பது கேட்டது.

"அப்போ நல்ல வசதியா இருக்கிறவனைப் பார்த்து கட்டிக் கொண்டிருக்கணும். இந்த அப்பாவிப் பயலை ஏன் வந்து பிடிச்சாளாம்?" சீறினாள் தாயார். சாம்பவி வெட்கத்தில் குன்றிப் போனாள். உடல் முழுவதும் அனலாக எரிய, நெஞ்சம் பதைக்கக் காதைத் தீட்டிக் கொண்டு தொடர்ந்து அவர்கள் பேசுவதைக் கவனித்தாள்.

புக்ககத்தில் காலை வைத்த அன்றே அவள் புரிந்து கொண்டு விட்டிருந்தாள். அந்த வீட்டில் அவள் மாமியார் சுகுணா வைத்ததுதான் சட்டம். பிள்ளை-பெண்கள் எல்லோரும் அம்மா வின் கைப்பொம்மைகள் அவளது அதிகாரத்திற்கு அடங்கிப் போக வேண்டியவர்கள்தான். அப்படித்தான் பழக்கம்.

துக்க வீட்டிலே மனைவியை விட்டுவிட்டு வஸந்த் அன்று உடனேயே தன் வீட்டிற்குப் போய் விட்டான். அவள் அப்பாவின் காரியங்கள் எல்லாம் முடிந்த பின்னர் தான் அன்று மாலை அவளை அழைத்துப் போகத் திரும்ப வந்திருந் தான். பிறந்த வீட்டில் தன் சகோதரிகளிடையே உருவாகிக் கொண்டிருந்த விரோத உணர்வுகளின் அழுத்தத்தைத் தாள முடியாது, அவள் உடனேயே கணவனுடன் புறப்பட்டு விட்டாள். பீரோவைத் திறந்து தன்னுடைய புடைவை-ரவிக்கை முதலியவற்றை அள்ளி ஒரு சிறு பையில் நிரப்பிக் கொண்டு தயாராகக் காத்திருந்தாள். அம்மாவைத் தவிர கௌசிக் கூட அன்று அவளிடம் முகம் கொடுத்துப் பேச வில்லை.

டாக்ஸியிலிருந்து அவள் இறங்கினாள். முதன் முதலாக புக்ககத்திற்கு வருகிறோம். எப்படிப்பட்ட வாழ்க்கையோ என்ற இனம் விளங்கா கவலையுடன்... நெஞ்சம் படபடக்க.. கணவன் பின்னால் தயக்கத்துடன் நடந்தாள். பையைத் தூக்கிக் கொண்டு முன்னால் சென்று அழைப்பு மணியை அழுத்தினான் வஸந்த்.

கதவைத் திறந்து கொண்டு வராந்தாவிற்கு வந்து இடுப்பிலே கையை வைத்துக்கொண்டு நின்ற வாட்டசாட்டமான உருவத்தைக் கண்டு சாம்பவி நடுங்கிப் போனாள்.

அந்தம்மாளா, அவள் மாமியார் சுகுணா?



தன்னுடைய திடீர் கல்யாணத்தைப்பற்றி விவரமாகத் தெரிவித்து மன்னிப்புக் கோரி பெங்களூரிலிருந்து வஸந்த்தும் தன் தாயாருக்குக் கடிதம் போட்டிருந்தாள்.

மனைவியை அப்பா வீட்டில் விட்டுவிட்டு அவன் மட்டும் தனியே வந்தபோது அவனுக்கும் அவன் தாயாருக்கும் இடையே பெருத்ததொரு சண்டை ஏற்பட்டிருக்க வேண்டும்- அதன் உக்கிரம் இன்னமும் அவள் முகத்தில் தணியவில்லை.

வஸந்தைப் போல் அவள் நல்ல நிறமாகத்தானிருந்தாள். இளம் வயதில் அழகாகக்கூட இருந்திருப்பாள். ஆனால் கடுமையாக விழித்த அந்தக் கண்களில் கனன்ற நெருப்பும்-தாடை தசைகள் இறுகிய அந்த முகமும் பார்க்கப் பயத்தைத் தான் கொடுத்தன.

"துக்க வீட்டிலிருந்து நேரே உள்ளே அழைச்சிண்டு வர்றியே-உனக்குப் புத்தியிருக்கா? பின்னாடி கொல்லைக் கிணற்றிலே ஒரு வாளி தண்ணியை இறைச்சு தலையிலே ஊத்திட்டு உள்ளே அழைச்சிட்டு வா- அந்தப் பையிலே துணியா? எல்லாத்தையும் கிணற்றடியிலே போட்டு நனைச்சு- புழிஞ்சி உலர்த்தச் சொல்லு- மருமகள் வர லக்ஷணத்தைப் பார். காலை வைக்கிறதுக்கு முந்தியே அப்பன் போயிட்டான்னு எழவு சமாசாரம். பேஷ்! நல்லா இருக்கு"-படபட வென்று வார்த்தைகளை உதிர்த்தாள்.

வஸந்த் பரிதாபமாக அவளைப் பார்த்தான். சாம்பவி திகைப்பும் துக்கமும் தாங்க முடியாமல் அயர்ந்து போய் நின்று விட்டாள்.

"வலது காலை எடுத்து வைத்து உள்ளே வரப்போகிற மருமகளுக்கு இப்படியா ஒரு வரவேற்பு?"

மாமியாருக்கு வேண்டாத மருமகள் அவள்! இதைக் கூடவா அவளால் புரிந்துகொள்ள முடியாது?

சாம்பவி பொறுத்துக் கொண்டாள். அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கணவனிடம் அவள் ஏதுமே பேசவில்லை. அவனும் இதைக் கண்டும் காணாதவன் போலிருந்து விட்டான். ஒரு மாத காலம் ஓடிச் சென்றது.

நாத்தனார் இருவருக்கும் கூட அவளைப் பிடிக்கவில்லை. மூத்தவள் ஜெயா- ஒல்லியா- உயரமாக இருந்தாள். முகத்திலே சதா ஒரு சிடுசிடுப்பு- பேச்சு பச்சை மிளகாய். சின்னவள் குட்டையாக- கருப்பாக இருந்தாள். பெரிய வாயரட்டைப் பேர்வழி.

"இன்னும் அந்த மகாராணி என்ன பண்றாள்? லீவு நாளில் கூட தன் அறையிலேயே உட்கார்ந்திருந்தா இங்கே வேலைகளை யார் செய்வாங்க?" மாமியார் இரைந்தது கேட்டது.

"நான் வேலைவெட்டியில்லாம வீட்டோட இருக்கிறேனில்லையா" நான் செய்யட்டுமுன்னு வேடிக்கை பார்க்கிறா, திமிர் பிடிச்சவ" ஜெயா காரமாகப் பதிலளித்தாள்.

"அவ வீட்டிலே அவள் ரொம்ப செல்லப் பெண்ணாம்" லதா இடையே சொல்லி வைத்தாள்.

"அதெல்லாம் இங்கே ஒண்ணும் நடக்காது- இது என் வீடு- இங்கே என் பேச்சுக்கு அடங்கித்தான் நடக்கணும்... இல்லாவிட்டா நான் யாருன்னு அவளுக்கு விளங்க வச்சுடுவேன்..." கத்திப் பேசினாள் சுகுணா.

"நம்ப வீட்டிலே அமுத்தமா இருக்கா. ஆனால் ஆசாமி பெரிய வாயாடின்னு என் காலேஜில் கேள்விப்பட்டேன்" லதா சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"அம்மாகிட்ட வாயாடினா- கிழிச்சு கூறு கட்டிடுவாங்க- அதனால்தான் பூனையாட்டமா இருக்கா- இந்த வஸந்த் அண்ணன் இப்படி ஒரு காரியம் செய்திருக்க வேண்டாம்" ஜெயா மனக் கசப்புடன் பேசியது நன்றாகக் கேட்டது.



அவளது கசப்பிற்குக் காரணம் இல்லாது போகவில்லை! வஸந்தின் மாமன் சுந்தரமூர்த்தி சேலத்திலே மரக்கடை வைத்திருந்தார். நல்ல வியாபாரம். வசதியான வாழ்க்கை. அவருடைய பெண்ணைத்தான் வஸந்த்திற்குக் கொடுப்பதாக ஆரம்பத்திலிருந்து ஏற்பாடு. அவருடைய ஒரே மகனுக்கு ஜெயாவைக் கட்டிக் கொள்ளவும் அவர் சம்மதித்து விட்டிருந்தார்.

வஸந்த் சொல்லாமல் கொள்ளாமல் காதல் என்று வேறு ஜாதிப் பெண்ணைப் பதிவுத் திருமணம் செய்து கொண்ட விஷயம் சேலம் வரை விரைவில் பரவிவிட்டிருந்தது. கேள்விப்பட்ட மாமன் கோபத்தில் கொதித்தார். உடனடியாகத் தம் பிள்ளைக்கு வேறு இடத்தில் பெண் எடுக்க முடிவு செய்து விட்டதாக காரமாக கண்டிப்பாக ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டிருந்தார். தன் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டிருந்த சாம்பவி மீது அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டதில் வியப்பு என்ன?

தலையை வாரி முடித்துக்கொண்டு- பொட்டு இட்டு லேசாக ஒப்பனை செய்துகொண்டு அவள் மெல்ல வெளியே வந்தாள். அது சமயம் அவள் கணவன் கடையிலிருந்து சாமான்களுடன் உள்ளே நுழைந்தான். அவைகளை வாங்கி எடுத்துக்கொண்டு சமையலறைக்குச் சென்று மேசை மீது வைத்தாள். அப்பொழுதுதான் கவனித்தாள். அடுப்பருகே மேடை ஓரத்தில் நின்று காண்டிருந்த ஜெயா மீன் துண்டங்களுக்கு மசாலா பூசிக் கொண்டிருந்ததை.

"என்ன அப்படி பாக்கறே? உங்கப்பா காரியமெல்லாம் நடக்கிறதேன்னு கிட்டத்தட்ட ஒரு மாசமா சைவமாக இருந்தாச்சு. வேலை செய்கிற பிள்ளை உடம்பு என்னத்துக்காகும்? அதனாலே இன்னியிலிருந்து கவுச்சி யெல்லாம் சேர்த்துக்கிறதாக முடிவு செய்திட்டோம். வாரத்துக்கு ஒரு முறைதான் இதெல்

லாம் வாங்கி சாப்பிட கட்டுபடியாகும். இதெல்லாம் சாப்பிடும் பழக்கம் உனக்கு உண்டில்லையா?" சுகுணா அதட்டினாள்.

சாம்பவி திடுக்கிட்டுப் போனாள். இல்லையென்று கலவரத்துடன் தலையை ஆட்டினாள்.

"இனிமேலே பழகிக்கொள்ளு. உன் புருஷனுக்கு மீன் என்றால் உயிர். அவனுக்குப் பிடிச்சதை நீ தான் சமைச்சுப் போடணும்."

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. வஸந்த்துடன் பழகிய அந்த ஆறுமாத காலத்தில் அவளுக்கு ஒரு உண்மை தெரியாதே. தாங்கள் எல்லோரும் சுத்த சைவம் என்று சொன்னாரே? ஏன்? ஏன் அந்த பொய்!

உள்ளே வந்த வஸந்த் அவளைப் பாராதவன் போல் சட்டென்று வாயில்பக்கம் போய் விட்டான். குற்ற உணர்வு நிறைந்த அவன் முகத்தை சாடையாகக் கவனித்த சாம்பவியின் நெஞ்சு, படபடவென்று துடித்துக்கொண்டது. இனம் விளங்கா ஒரு துயரம், அவள் நெஞ்சை நெருடியது.

"அவள் கணவன் அவளிடம் ஒரு பொய் சொல்லிவிட்டிருந்தான். அவன் கூறியவைகளில் இன்னும் எத்தனை பொய்களோ?

உடல் முழுவதும் சில்லிட்டுவிட்டு ஒரு பயங்கர உணர்வு- சமாளித்துக் கொண்டாள்.

"என் அம்மாவுக்கு ரெண்டு நாளா வயிற்றுவலி அதிகமாக இருக்காம். படுத்து இருக்காங்களாம். போய் பார்த்துட்டு வரலாம்னு நினைக்கிறேன். நீங்க உத்தரவு கொடுத்தால்..." மென்று விழுங்கினாள்.

"ரொம்பத்தான் என் உத்தரவுக்கு காத்திருக்காப்பல நடிக்காதே. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலில் சக்கரம் கட்டிட்டு பிறந்த வீட்டுக்கு ஓடிப்போறே... அப்படி அங்கே என்ன



உனக்கு அள்ளிக் கொடுத்துடறாங்க? சரி சரி... போயிட்டு வா... ஆனால் அவனைக் கூட அழைச்சிட்டுப் போக வேண்டாம். உங்க வீட்டிலே என்மகனுக்கு என்ன மரியாதை கிடைச்சதுன்னு கேள்விப்பட்டேன். அவன்கூட வந்து உன் மனுஷா கிட்ட அவமானப்பட வேண்டாம். தெரிஞ்சுதா?" உறுமினாள். பின்னர் உரத்தக் குரலில், "வஸந்த்" என்று மகனைக் கூவி அழைத்தாள்.

"இவளை, பஸ்ஸிலே ஏத்திவிட்டுட்டுவா- அம்மாவைப் போய் பார்க்கணுமா... போகட்டும். தப்பித்தவறி அந்த தரித்திரங்க வீட்டுப் பக்கம் நீ காலை வைக்காதே- ஜாதித் திமிர் பிடிச்சவங்க..." மகனுக்கு உத்தரவிட்டாள்.

சாம்பவிக்கு என்னவெல்லாமோ பதிலுக்குப் பேச வேண்டும் போல் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"எங்கேயிருந்தாலும் நீ சுகமாக இருக்கணும்- எந்த கஷ்டம் வந்தாலும் பொறுமையாக இருக்கணும்." -அவள் தாய் அன்று சொன்னவை நினைவுக்கு வந்தன.

அன்று அம்மா இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று புத்தி சொன்னபோது... எப்படி கோபமடைந்தாள்- அசட்டையாகப் பேசினாள். பயமுறுத்தினாள்- அதன் பலனை இப்போது அனுபவிக்க ஆரம்பித்துவிட்டாளே?

இனியாகிலும் அம்மா சொன்னதைக் கேட்போம். பொறுமையாக இருப்போம்! பற்களைக் கடித்துக் கொண்டு கோபத்தை அடக்கிக்கொண்டு விரைவில் புறப்பட்டாள்.

பஸ் நிலையம்வரை கூடவந்த கணவனிடம் அவள் வாயைத் திறக்கவில்லை.

கேட்டைத் திறந்து கொண்டு தோட்டத்திற்குள் நுழைந்த போது துக்கம் அவளுக்கு குமுறிக் கொண்டு வந்தது.

ஒரு காலத்தில் பேச்சும்- சிரிப்பும்- வருவோரும் போவோருமாக கலகலப்பாக இருந்த அவர்கள் வீடு வெறிச்சென்று காணப்பட்டது. காலை வேளையில் பத்திரிகையுடன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் அப்பா இல்லாது- வராந்தாவே சூன்யமாகத் தென்பட்டது. வாயிற் கதவு சாத்தப்பட்டிருந்தது. மெல்லத் தட்டினாள்- அம்மாதான் கதவைத் திறந்தாள்.

துயரத்தில் வாடிப்போன அந்த முகத்தில் மகளைக் கண்டதும் புன்னகை ஒளியிட்டது.

"வாம்மா- வா-சாப்பிட உன் தம்பிக்கு இலை போட்டுண்டு இருந்தேன். சரியான சமயத்துக்குத்தான் வந்திருக்கே"- உபசரித்துவிட்டு சுற்றிலும் பார்த்தாள்.

"நான் மட்டுந்தான் வந்திருக்கேன் அம்மா." சுருக்கமாகச் சொன்னாள் மகள்.

தம்பியின் பக்கத்திலே இலையைப் போட்டு, அம்மா பரிமாறினாள். பளிச்சென்று குங்குமப்பொட்டும்- டால் அடித்த மூக்குத்தியும் இல்லாது பாழடைந்து விட்டிருந்த அவள் முகத்தைப் பார்க்க சாம்பவிக்கு வேதனையாக இருந்தது.

சமையலறை தரையில் வழக்கமாக அவள் உட்காரும் அதே இடத்தில் அமர்ந்து கொண்டு அம்மா ஆசையுடன் பரிமாறிய வத்தக் குழம்பை சாதத்துடன் கலந்து கொண்டு- சுட்ட அப்பளத்தை ஒடித்து சேர்த்து வாயில் போட்டுச் சுவைத்தபோது... கடந்த காலத்தின் நினைவுகள் நீர்வீழ்ச்சியாக உள்ளத்திலே பொங்கி வர... அவளது கண்கள் கலங்கிப் போயின. சாதத்தை விழுங்க முடியாது துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"அம்மா உங்க கை சாப்பாட்டுக்கு ஒரு தனி ருசி. ஒரு மணம். வத்தக் குழம்பு தேனாட்டமா இருக்கு. ஒரு மாச காலமா இதையெல்லாம் சாப்பிடாம நாக்கு செத்துப் போச்சு." துயரத்துடன் புன்முறுவலித்தாள்.



"அடுத்தமுறை வரும்போது அவரையும் அழைச்சிண்டு வா. பெத்த பொண்ணுன்னு உன்னை மட்டும் சொந்தம் பாராட்டி நான் கொண்டாடினால் போதுமா; அவரையும் மருமகன்னு நான் மதிக்கணும் இல்லையா? அது என் கடமையாச்சே?" சாம்பவிக்கு அழுகை வந்துவிட்டது. இந்த அம்மாவுக்குத்தான் எத்தனை பெரிய மனசு?

"அப்படின்னா என்னை மன்னிச்சுட்டீங்களா அம்மா...?" தழதழத்தது அவள் குரல்.

"என் பேச்சைக் கேட்கலைன்னு ஆரம்பித்திலே எனக்கு வருத்தமாக இருந்தது. யோசித்துப் பார்த்தேன். நீயே ஒரு வாழ்க்கையை உனக்குத் தேடிக்கொண்டு விட்டே, இனி மேலே அதைப்பற்றி அலசி கலவரப் படுத்தறதிலே அர்த்தம் இல்லையினு தோணித்து. என் குழந்தை ஏதாவது தவறு செய்திருந்தா அவளை மன்னிச்சு அரவணைக்கிறதை விட்டுட்டு உறவுக்காரர்கள் முன்னால் அவமானப்படுத்துகிறது நியாயமில்லையினு மனசை உறுத்தித்து- ஜாதியாவது- மண்ணாவது நல்ல குணமுடையவன் பண்பு நிறைஞ்சவன் உயர்ந்த ஜாதி- பண்பில்லாத மூர்க்கன் தாழ்ந்த ஜாதி. அவ்வளவு தான்னு என் மனசிலேயே ஒரு தெளிவு ஏற்பட்டு விட்டது. நீ பாட்ல உன் புருஷனோட அப்பொப்ப இங்கே வந்துண்டு போயிண்டு இரு. இந்த வித்தியாசங்களை யெல்லாம் பார்க்கிற கட்டத்தை நான் தாண்டிவிட்டேன்." அம்மா மெல்லிய குரலில் சொன்னபோது அவள் மெய்சிலிர்த்துப் போனாள்.

மறுநாள் பகல்-சாப்பாட்டு நேரத்தின் போது காப்பி ஹவுஸில் தான் அவர்கள் முதல்முதலாக சண்டை போடத் துவங்கினர்.

அவன்தான் ஆரம்பித்தான். உன் சம்பளத்தை உன்னிடமே வச்சுண்டு இருக்கியா?" குபீரென்று உடல் முழுவதும் நெருப்பாகப் பற்றி எரிந்ததுபோல் ஆத்திரம் அவளுக்கு.

"ஆமாம் ஏன் கேட்கிறீங்க?"

"சம்பளம் வாங்கினதும் நேரே அம்மாகிட்ட நான் கொடுத்து விடுகிற வழக்கம். அவங்கதான் அப்போ அப்போ செலவுக்கு வேண்டியதைக் கொடுப்பாங்க."

"நான் சம்பாதிக்கிறதில் பாதியை என் தம்பியின் படிப்பு செலவிற்காக அவன் முன்னுக்கு வரும்வரை- என் குடும்பத் துக்குக் கொடுக்கப் போகிறேன்னு சொன்னேன். நீங்க ஒத்துக் கொண்டீங்க. நேத்து நான் எங்க வீட்டுக்குப் போயிருந்தபோ என் தம்பி கிட்ட பாதி பணத்தைக் கொடுத்துட்டு வந்தேன். மீதியை என் செலவுக்கு வச்சுக் கொண்டிருக்கேன். கல்யாணத் துக்கு முந்தி நாம் எல்லாத்தையும் பேசி தீர்மானிச்சதுதானே? உங்கம்மாவுக்குத் தெரியாதா?" கோபமாகக் கேட்டாள்.

"இனிமேல் நீ அப்படிச் செய்யக்கூடாது. அம்மா ஒத்துக்க மாட்டாங்க. நீ சம்பாதிக்கிறதையும் நம்ப குடும்பத்துக்குத்தான் கொடுக்கணும். உன்னாலே இப்போ வீட்டிலே செலவு கொஞ்சம் கூடுதலாகி விட்டிருக்கில்லையா? அம்மா அதைச் சரிக்கட்ட வேண்டாமா?"

"நான் வேலை செய்யாத சாதாரண குடும்பத்துப் பெண்ணாக இருந்திருந்தால், நீங்கதானே என்னை வச்சுக்காப்பாத்தணும் அது உங்க கடமையில்லையா?"

"நீ சம்பாதிக்கிற பெண்- அதனாலே இந்த விவாதம் சரியில்லை." கோபத்துடன் உறுமினான்.

"நீங்க விஜிடேரியன்னு சொன்னீங்க- இப்ப வீட்டிற்கு வந்ததும் நீங்க எல்லா விஷயங்களும் சாப்பிடுகிறவர்னு தெரிகிறது! என்னாலே உங்க சாப்பாட்டு வகைகளைச் சாப்பிட முடியாது. பழக்கமில்லை. புதிதாகப் பழகிப் கொள்கிற யோஜனையுமில்லை. கடைசிவரை சைவமாகவே இருப்பதாக என் தீர்மானம்."



"கறி-மீன் சாப்பிடுகிறது என்ன பெரிய கொலைக் குற்றமா? எனக்குத் தெரிஞ்சு உங்க ஜாதிப் பசங்கள் எல்லாம் கண்டதைத் திங்கிறான்கள். அதுக்கென்ன சொல்றே?"

சாம்பவிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது.

"நான் இப்போ உங்க உணவுப் பழக்கத்தைப் பத்தி குறை ஏதும் சொல்லலை. தப்புன்னு பழிக்கலை-அப்படியிருக்கை யிலே இப்போ என்னத்துக்கு ஜாதியைப்பற்றி இழுக்கிறீங்க? நான் கேட்க வந்ததே வேறு. ஏன் இந்த உண்மையை எங்கிட்ட மறைச்சீங்கன்னுதான் புரியலை..." அழுத்தமாகச் சொன்னாள்.

"இப்போ அதுக்காக என் தலையைச் சீவிடப் போறியா?" ஏளனமாகக் கேட்டான் அவன்.

"ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்யினு பெரியவங்க சொல்வாங்க. அதைக் கடைப்பிடிச்சீங்களோ? மீதி தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பொய்கள் என்னவோ? முதல்லேயே தெரிஞ்சா எனக்குப் பின்னால் அதிர்ச்சி ஏற்படாது."

"ஷட் அப்... நீ ரொம்ப பெரிய வாயாடின்னு கேள்விப் பட்டிருக்கேன்- சரியாத்தானிருக்கு. உன் ஜம்பம் வாய்வீச்சு இதெல்லாம் எங்கம்மாகிட்ட பலிக்காது. எனக்கும் பிடிக்காது. முதல்லேயே சொல்லிட்டேன்" ஆத்திரத்துடன் மேஜைமீது குத்தினான்....

பக்கத்திலமர்ந்திருந்த பலரும் தங்களைத் திரும்பிப் பார்ப்பதை உணர்ந்த சாம்பவிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. ஆனாலும், அவளால் பேசாதிருக்க முடியவில்லை.

"என் மனசாக்ஷிக்கு விரோதமாக எந்த விஷயத்தையும் நான் ஒத்துக்க மாட்டேன். ஆறுமாத காலம் என்னோட நெருங்கிப் பழகினீங்க. நான் எதையும் மறைக்கலை. மனசைத் திறந்து எல்லாத்தையும் கொட்டி விட்டேன். நீங்களும் அப்படி

செய்யலையேன்னுதான் வருத்தம்!' படபடவென்று சொல்லி விட்டு எழுந்தாள். விர் என்று காப்பி ஹவுஸிலிருந்து வெளிப் பட்டு தன் ஆபீஸ் அறைக்குள் சென்று ஆசனத்தில் உட்கார்ந் தாள். வேகமாக அடித்துக் கொண்ட நெஞ்சுத் துடிப்பு அடங்கி கொந்தளித்த உணர்வுகள் நிதானத்துக்கு வர வெகுநேரம் சென்றது.

அதற்குப் பின்னர் அவர்களிடையே சிறு சண்டைகள்-பூசல்கள் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டுதானிருந்தன. எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் ஆரம்பித்த மண வாழ்க்கை இப்படி புஸ்வாணம்போல் புகைந்தா போய் விடுவது? ஊகும்... அப்படி போகவிடக் கூடாது. சண்டை போடுவதைவிட சமாதான முறையிலே எண்ணங்களை எடுத்து மனம் விட்டுப் பேசி கணவனை ஒப்புக்கொள்ளச் செய்வதுதான் சரியான முடிவு-பலமாக சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

மாத முடிவுக்கு சில தினங்கள் தானிருந்தன. சம்பளம் வந்ததும் தம்பிக்குப் புத்தகங்கள் வாங்கப் பணம் தருவதாகச் சொல்லியிருந்தாள்.

மாதச் சம்பளத்தைத் தாயாரிடம் நேரே கொண்டு வந்து கொடுத்துவிட வேண்டுமென்று கணவன் முன்கூட்டியே உத்தரவு போட்டிருந்தான்.

எந்தப் பக்கம் திரும்புவது என்ற பிரச்சனையில் தனக்குள்ளே தவித்துக் கொண்டிருந்தாள்.

அன்று மாலை தன் இரு பெண்களுடனும் சுகுணா சினிமா வுக்குப் போயிருந்தாள். வேலையினின்று திரும்பி வந்த அவர்கள் இருவர் மட்டும்தான் வீட்டில் தனியே இருந்தனர்.

காப்பியைக் கலந்துகொண்டு வந்து அவன் அருகில் வைத்து விட்டு, எதிரே உட்கார்ந்து கொண்டாள்.



"உங்ககிட்ட ஒண்ணு பேச விரும்பறேன்." என்ற போது அவன் வியப்புடன் பத்திரிகையைப் போட்டு விட்டுத் திரும்பினான்.

"என் தம்பி கௌசிக்கின் படிப்பு முடிய இன்னும் ஒரே வருஷம் தான் இருக்கு- அவன் ரொம்ப கெட்டிக்காரன். உடனடியா ஏதாவது வேலை கிடைத்தால் என் தாயார் கஷ்டம் விடிந்துவிடும். அது வரை நான் கௌசிக் படிப்புக்கு என் சம்பளத்தில் ஒரு பகுதியையாவது கொடுக்க நீங்க அனுமதிக்கணும். இந்த சமயம் அம்மாவுக்கு உதவி செய்ய வேண்டியது என் கடமை."

"உன் இரண்டு தமக்கைகள் வசதியாக இருக்கிறார்களே, அவங்க கொடுத்து உதவட்டுமே? நீ தான் உதவணுமா?" எரிச்சலுடன் கேட்டான் அவன்.

"என்னுடைய திடீர் திருமணம், அப்பாவின் உசிரையே குடிச்சிட்டதாலே, இப்ப உதவ வேண்டியது என்கடமைன்னு என் மனசாட்சி உறுத்துகிறது. குற்ற உணர்விலே நான் என்னையே நொந்துக்கறேன். அதனாலே..." சொல்ல முடியாது அவனைப் பார்த்தாள்.

பத்திரிகையை மீண்டும் கையில் எடுத்துக்கொண்டு அவன் மௌனமானான்.

"அப்பாவோட இன்ஷுரன்ஸ்- பிராவிடன்பண்ட் எல்லாம் வந்தாக்க நிலைமை இத்தனை மோசமா இருக்காது, எங்கம்மா எப்படியோ கௌசிக்கை படிக்க வச்சு முன்னுக்குக் கொண்டு வந்துடுவாங்க-"

"உங்கப்பா பெரிய தொகைக்கு இன்ஷுர் பண்ணியிருந் தாரா?" வியப்புடன் கேட்டான்.

"ஐம்பதாயிரத்துக்குப் பண்ணியிருந்தார். ஆனால் அதன் மேல் கடன் இருக்கு. பிராவிடண்ட் பண்ட் மேலேயும்

கடன்- வீட்டுமேலேயும் கடன். அப்பாவுக்கு நாகநாதன்னு ஒரு சிநேகிதன் உண்டு. அவர் தான் எல்லாப் பொறுப்பையும் ஏத்துக்கொண்டு அம்மாவுக்கு உதவி செய்ய முன் வந்திருக்கிறார். அம்மா வீட்டை விற்க ஏற்பாடுகள் பண்ணிக் கொண்டிருக்காங்க. கடன்... வட்டி எல்லாம் போக குறைஞ்சது அறுபதாயிரமாவது தேறும். அதை பாங்கில் போட்டு அந்த வட்டிவரத் தொடங்கினால் அதுக்கு பிறகு நான் எந்த உதவியும் செய்யத்தேவையில்லை' ஒரே மூச்சாக முடித்தாள்.

சட்டைப் பையிலிருந்த பேனாவை எடுத்து பத்திரிகை தாளின் ஒரு புறம் அவன் என்னவோ கூட்டல் கழித்தல் போன்ற ஒரு கணக்கைப் போட்டுக் கொண்டிருந்தான்.

மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியென்று எண்ணியபடி அவள் வீட்டுக் காரியங்களைக் கவனிக்க உள்ளே சென்று விட்டாள்.

நாட்கள் சில சென்றன. ஒரு நாள் காலை மருத்துவமனைக்கு அவளைத் தேடிக்கொண்டு அப்பாவின் நண்பர் நாகநாதன் வந்திருந்தார்.

அவளுக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது.

'உன்னிடம் தனியா கொஞ்சம் பேசணும் முக்கியம்.' என்றார்.

தலைமைக் கணக்கரிடம் சொல்லிவிட்டு- அவருடன் மருத்துவமனையின் வரவேற்பறைக்குள் சென்றாள்.

சோபா ஒன்றில் சாய்ந்து கொண்ட நாகநாதன் சுற்றும் முற்றும் பார்த்தார். நல்லவேளை அருகில் யாரும் இருக்க வில்லை. 'உன் புருஷனிடம் இப்போதுதான் பேசிட்டு வறேன். அவன் ஒரே பிடிவாதமா பேசறான்."

சாம்பவிக்கு ஒரே குழப்பம்- விழித்தாள்.

'உனக்குத் தெரியாதாம்மா? கடன் தொகை போக- முடிவில் கைக்கு வரும் சொத்தில் உனக்கும் ஒருபாகம் தரவேண்டும்னு



உங்கம்மாவுக்கு உன் புருஷன் ஒரு கடிதம் போட்டிருந்தான். இன்ஷூரன்ஸ் கம்பெனிக்கு வேறே எழுதிப் போட்டிருக்கான். அதனாலே பணம் வரத் தாமதமாகிறது. ஒரு வக்கீலை வச்சு சொத்துக்கு உங்களுக்கெல்லாம் உரிமை ஏதும் இல்லையினும் ஒரு விடுதலைப் பத்திரம் எழுதியிருக்கேன். அதிலே உங்க அக்கா ரெண்டு பேரும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துட்டா. நீயும் போட்டுக்கொடுத்தாத்தான் விஷயங்கள் சீக்கிரம் முடியும். உன் அம்மா கையிலே பணம் வரும்; அவள் கஷ்டம் தீரும். நீ தகராறு பண்ணினால் வீட்டைக் கூட விற்க முடியாது- சங்கடமாகி விடும். உன் பங்குப் பணம் சுமார் பன்னிரண்டாயிரத்துக்கு உங்க அம்மா இப்போ எங்கே போவாள்? எங்கே போய் கடன் வாங்குவேன்னு வருத்தப்பட்டாள். எதுக்கும் உன்கிட்டே பேசி முடிவுக்கு வரலாம்னு வந்தேன்."

நாகநாதன் தொடர்ந்து சொன்னார்-

"ஏன் அம்மா சாம்பவி! உன்னைத்தான் கேட்கிறேன்? உன் அப்பா உன் மேலே உசிரையே வச்சிண்டு இருந்தான். உன்னைப் பற்றி ரொம்ப அவனுக்குப் பெருமை. உன் மனசுக்குத் தோணின ஒரு காரியத்தை அவனைக் கேட்காம செஞ்சுட்டேன்னு அவன் மனம் அதிர்ந்துப் போயிட்டான். எந்தத் தகப்பனுக்குத்தான் அது அதிர்ச்சியா இருக்காது சொல்லு?

"அவன் உடம்புக்கு அதிகமாகி ஆஸ்பத்திரியிலே இருந்த போது விசிட்டர்கள் வரக்கூடாதுன்னு டாக்டர் உத்தரவு போட்டிருந்தார். அதையும் மீறி அவனைக் கொஞ்சம் பார்த்துட்டு வர நான் போயிருந்தேன். அப்போ உன் பெரிய அக்காதான் படுக்கை அருகே துணையாக உட்கார்ந்திருந்தா. உன் அம்மா சித்த ஓய்வா இருக்க வீட்டுக்குப் போயிருந்தா. என்னைக் கண்டதும் உன் அக்காவுக்கு கட்டுக் கொள்ளலை. கண்ணீர் விட்டுப் புலம்ப ஆரம்பிச்சுட்டா.

"அப்பா ஒரே ஒரு நாளைக்கு கைதொட்டு கன்னத்திலே அடிச்சார்னுட்டு, இந்த பாவிப்பெண் சாம்பவி- இவர் நெஞ்சிலே எப்படி அடிச்சுட்டு போயிட்டா... மாமா! பாருங்க எங்கப் பாவை" சொல்லிவிட்டு விசும்பி அழுதாள்.

"ராமபத்ரன் கண்ணை முழிச்சுண்டு என்னைப் பார்த்தான். தலையை அசைச்சான்- அப்படிச் சொல்லாதே! என் குழந்தை என்னையா கொல்லுவா? எனக்கு நேரம் வந்துடுத்து... நாகநாதா! என் குழந்தை கிட்ட நீ சொல்லு. அப்பா அவளை மனம் நிறைய ஆசீர்வதித்தார்னு சொல்லு. குழந்தை எங்கேயாவது நன்னா இருக்கட்டும். அப்படின்னு புலம்பிட்டான் -அதுக் குள்ளே டாக்டர் உள்ளே வந்து என்னைப் போகும்படி அதட்டினார். நான் பேச முடியாமல் துக்கத்தோட வெளியே வந்துட்டேன்." நிறுத்திவிட்டு கண்களைத் துடைத்துக் கொண் டார்- பின்னர் மேலே தொடர்ந்தார்.

"அம்மா குழந்தை- நான் உங்கப்பாவின் பிராண சிநேகிதன். உனக்கு பெரியப்பா போல ஒரு ஸ்தானத்திலே இருந்துண்டு உங்கிட்டே கேட்கிறேன். ஏன்? யாசிக்கிறேன்னே வச்சுக்கோ யேன். பத்து மாதம் சுமந்து உன்னைப் பெற்று வளர்த்த உன் தாயார் ஒரு பனிரெண்டாயிரம் ரூபாய் பொறமாட்டாளா? அந்தப் பணம் உனக்குத் தேவையா?

"நெஞ்சு வலியோட துடிச்சப்போ கூட உன்னை மனசு நிறைஞ்சு வாழ்த்திட்டுப் போனானே உன் அப்பா -அவனுக் காகக் கூட நீ விட்டுக் கொடுக்க மாட்டியா?..."

"மாமா! எனக்கு இதெல்லாம் ஒண்ணுமே தெரியாது. பன்னிரண்டாயிரம் என்ன? என் உசிரை வேண்டுமானாலும் அம்மாவுக்குத் தரத் தயார். போய் சொல்லுங்க..." பேச முடியாது அவள் விம்மி அழுதாள்.



## 10

**அ**ன்று காலை ஸ்நானம் செய்துவிட்டு ஈரக்கூந்தலை துடைத்துக்கொண்டு நின்ற சாம்பவியின் காதில், முன்னறை யிலிருந்து பேச்சுக்குரல் அரைகுறையாகத்தான் விழுந்தது. பித்தளை அண்டாவிலே பெரும் சப்தத்துடன் கொட்டிக் கொண்டிருந்த குழாயைத் திருப்பி மூடிவிட்டு உற்றுக்கேட்டாள். சில நாட்களாகவே அவள் உற்றுக் கேட்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தாள். அந்த வீட்டில் அவர்கள் நான்கு பேர்களும் ஒருகட்சி போலும்! அவள் மட்டும் தனியே எதிர்க்கட்சியிலிருப்பது போல் விரோத நிலைமை உருவாகிக் கொண்டிருந்தது. அவர்களது பேச்சில் அவள் பங்கெடுத்துக் கொள்ள முடியவில்லை- இது அவளுக்கே பிடிக்காத காரியம்.

அடித்தலையை அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்தவள் நிறுத்திவிட்டுக் கவனித்தாள். அவள் மாமியார் சுகுணா, ஓங்கிய குரலில் மகனுடன் விவாதித்துக் கொண்டிருந்தாள். ஏன்? சண்டை போட்டுக் கொண்டிருந்தாள் என்றே சொல்ல வேண்டும்.

"உங்கப்பா பாட்ல திடீர்னு போயிட்டார். மூணு குழந்தை களை வச்சிண்டு நான் திண்டாடினது ரமணப்பா தெரு முழுவதுக்கும் தெரியும்.!"

"அப்பா வேணும்னா செத்துப் போனார்? உடம்புக்கு வந்து போயிட்டார்." மகன் அதட்டலாகக் கேட்டான்.

"மூணு குழந்தையாச்சே- நமக்கு ஏதாவது ஒண்ணு ஆனா அவ என்ன பண்ணுவா?- அப்படிங்கற நினைப்பே உங்கப்பா வுக்கு இருக்கலை. கையில் கிடைச்சதை தாம் தூம்னு செல வழிச்சிட்டு அவர் திடீர்னு போயிட்டார்னு சொல்ல வந்தேன். ஏன் சொல்றேன்னா நீயும் உங்கப்பனாட்டமே பொறுப்பில்லா இருக்கே, அந்த வயிற்றெரிச்சல் என்னை பேசச் சொல்லுது."

"மெல்லப் பேசுங்க, கூப்பாடு போடவேண்டாம்...."

இருக்கிறதையெல்லாம் வாரித் திரட்டி இங்கே கொண்டு வந்து ஒரு சின்ன வீட்டை வாங்கி- உங்களை யெல்லாம் படிக்க வச்சு ஆளாக்கினேன். வயத்தை வாயைக் கட்டி உன்னை ஒரு மனுஷனாக்கினதுக்கு கை மேலே கூலி கிடைச்சுடுத்து. மறுபடியும் என் வாழ்விலே இன்னொரு இடி..."

ஏம்மா இப்படி கூச்சல் போடுறீங்க..."

"நான் பேசறது உனக்கு கூச்சலாகத்தான் இருக்கும். அவ பேசறது சங்கீதமா இருக்கு இல்லையா? மாமன் பெண் கிளியாட்டம் இருக்கா- ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்து- நகை நட்டு போட்டு சிறப்பா கல்யாணம் பண்ணித்தர சம்மதிச்சிருக்கார்- அப்படியே தன் பிள்ளைக்கு ஜெயாவை ஒரு காசு கூட செலவு வைக்காம கட்டிக் கொள்வதாக வாக்குக் கொடுத்திருக்கார்- பெண் எடுத்து பெண் கொடுக்கிற இந்தச் சம்பந்தம் நம்ப அந்தஸ்தை உயர்த்தப் போகுதுன்னு சொன்னப்போ- சரின்னு தலையை ஆட்டிக் கிட்டிருந்தே. அப்புறம் இப்படி திடுதிடுப்னு ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு என் மூஞ்சியிலே கரியைப் பூசிட்டே- நல்லது பொல்லாததுக்கு கூட இனி என் அண்ணன் மூஞ்சியிலே முழிக்க முடியுமா...? இப்ப ஜெயா கதி என்ன ஆகிறது யோசிச்சயா?" தலை வெடித்துவிடும் போல் கத்திப் பேசினாள் சுகுணா.

"வேறே இடத்தில் நாமும் மாப்பிள்ளை பார்த்தாப் போச்சு!"

"வெறுங் கையை வச்சிட்டு முழம் போடுவியா?... ஒரு இருபதினாயிரம் கூடக் கையில் இல்லாமல் எவன் நம் வீட்டுக்குள் நுழைவான்?"

"அதுக்குத்தான் நாம் ஒரு முடிவு எடுத்திருக்கிறோமே- அதுபடி செஞ்சா போச்சு- அந்தப் பணத்தை ஜெயா கல்யாணத்துக்கு உபயோகிச்சுக்கோங்கோ."



"உன் பெண்சாதி பெரிய ராக்ஷசி... திமிர் பிடிச்சவ- அவ ஒத்துக்க மாட்டேன்னு சொல்லிட்டா...?"

"ஒத்துக்க வைக்கிறது என் கையிலிருக்கு."

"அவ ஒப்புக்க மாட்டேங்குறான்னு பின் வாங்கினியோ எனக்குக் கெட்ட கோபம் வரும்- உன் தங்கச்சியை வாழ வைக்க வேண்டியது உன் பொறுப்பு- நீ உன் பெண் ஜாதியை மிரட்டுவியோ- அடிப்பியோ-உதைப்பியோ- எனக்குத் தெரியாது. அவளை உன் வழிக்குக் கொண்டு வரணும். அவ வெறும் வார்த்தைக்கு கட்டுப்படுகிற தினுசா தெரியலை."

"அவ கேட்பான்னு எனக்கு நம்பிக்கை இருக்கும்மா..."

"எனக்கில்லை... பார்க்கலாம்." -பெருமூச்சு விட்டாள் சுகுணா.

கீழே விழுந்துவிடாதிருக்க குழாயைப் பிடித்துக்கொண்டு நின்றாள் சாம்பவி. அவள் உடல் கிடுகிடுவென்று நடுங்கியது- உள்ளம் எரிமலையாகக் கொதித்தது- உதட்டைக் கடித்துக் கொண்டு, பொங்கி எழ இருந்த துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். ஓசைப்படாமல் கதவைத் திறந்து கொண்டு தங்கள் அறைக்குள் சென்றாள். வேகமாகத் தலையை வாரி அரை ஈரத்துடனேயே கொண்டை போட்டுக் கொண்டாள். பொட்டு வைத்து முகத்தைச் சீராக்கிக் கொண்டு- பெட்டியைத் திறந்து வெளியே செல்ல அடிக்கடி உடுத்தும் அந்த நைலக்சை எடுத்து விரைவாக அணிந்து கொண்டாள். சற்று நேரம் நிதானித்து விட்டு, மெல்ல வெளியே வந்தாள்.

அவர்கள் இப்போது அடிக்குரலில் ஏதோ தங்களுக்குள் பேசிக் கொண்டு முன் அறையிலேயே இருந்தனர்.

வெளியே செல்லத் தயாராகி விட்டிருந்த அவளைக் கண்டு திகைப்புடன் பார்த்தனர்.

"இப்படி உட்கார். உன்கிட்ட அம்மா பேசணுமாம்." அதட்டலாக உத்தரவிட்டான் வசந்த்.

"என்ன விஷயம்?" பொதுவாகக் கேட்டபடி அவள் அருகில் வந்து நின்றாள். உட்காரவில்லை.

மாமியாருக்கு ரொம்ப மரியாதையெல்லாம் வேண்டாம். அப்படி உட்கார்..." எரிச்சலுடன் சுகுணா ஒரு முக்காலியை அவள் பக்கம் நகர்த்தினாள்.

சாம்பவி உட்காரவில்லை. பிடிவாதமாக நின்றபடியே பேசினாள். "அம்மாவைப் பார்த்து வரலாம்னு கிளம்பிண்டு இருக்கேன்- அதனாலே..." அவள் முடிக்காது கணவன் முகத்தை உறுத்துப் பார்த்தாள்.

"நாலு நாளைக்கு முன்னே உங்கப்பா சிநேகிதர் நாகநாதன் என்பவர், என்னைப் பார்க்க நர்ஸிங்ஹோமுக்கு வந்திருந்தார்..." அவன் ஆரம்பித்தான்.

"தெரியுமே- என்னையும் அப்படியே பார்த்துப் பேசி விட்டுப் போனார்."

"நீ அதைப் பத்தி ஒரு வார்த்தைகூட என்கிட்ட இதுவரை சொல்லலையே?"

"நீங்க சொன்னீங்களா?- அதனாலே நானும் பேசாம இருந்தேன்."

வஸந்தின் முகம் ரத்தமாகச் சிவந்து போயிற்று.

"அம்மா சொல்கிறபடி ரொம்ப திமிர் பிடிச்சவதான். தங்கை, அம்மா, எல்லார் முன்னாடியும் கூட வாயாடுகிறாளே?..." உள்ளூர வெகுண்டபடி பற்களைக் கடித்துக் கொண்டான்.

"அந்த விஷயமாகத்தான் அம்மா உன்கிட்டே பேசணும்னு சொல்றாங்க..." எரிச்சலோடு சொன்னான்.

"அதே விஷயமாகத்தான் நான் இன்னிக்கு எங்கம்மாவைப் பார்க்கக் கிளம்பிக்கொண்டிருக்கிறேன். சொல்லிட்டுப் போகத் தான் வந்தேன். ஒருசமயம் அம்மாவோட இன்னிக்கு எங்க



வீட்டிலேயே தங்கிட்டு நாளைக் காலை நேரே வேலைக்கு ஆபீஸிற்குப் போகலாம்னு உத்தேசம்."

"தனியா போய் இவ ஏதாவது கோளாறு பண்ணிடப் போறா? நீ கூடபோய் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பேசிட்டுவா- சொத்திலிருந்து இவ பங்குப் பணம் பன்னிரண் டாயிரத்தையும் கீழே வச்சாத்தான் என் மனைவி பத்திரத்தில் கையெழுத்துப் போடுவா- இல்லாட்டா காரியம் நடக்காதுன்னு கண்டிப்பா பேசிட்டுவா. உன் மாமியார்க்காரி நீ எழுதியிருக்கிற கடுதாசியைக் குப்பைக் கூடையிலே வீசியிருப்பா. நீ போனால் தான் பயப்படுவா. தலையை அடகு வச்சாவது உனக்குச் சேரவேண்டியதை முதல்லே கீழே வச்சிட்டுப் பேசட்டும்" சுகுணா ஆத்திரத்துடன் பேசினாள்.

சாம்பவியின் நெஞ்சு வேகமாக படபடத்தது- புயலாக உள்ளே எழுந்த கோபத்தின் உக்கிரத்தை அடக்க அவள் மிகவும் சிரமப்பட்டாள். மூச்சடைத்துக்கொண்டு உயிர் நின்று விடும் போல் ஒரு திகில்.

"இவர் கூட வரவேண்டிய அவசியம் இருக்காது. ஏன் என்றால் சொத்தில் எனக்கு பங்கு கிடையாதுன்னு ஒப்புக் கொண்டு விடுதலைப்பத்திரத்தில் கையெழுத்துப் போட நான் ஒத்துக் கொண்டிருக்கேன்."

"யாரைக் கேட்டுண்டு ஒப்புக்கொண்டே?" கூச்சலிட்டபடி வஸந்த் ஆசனத்தை விட்டு எழுந்தான். கோபாவேசத்தோடு அருகில் வந்தான்.

"நான் சொன்னேன் கேட்டியா? இவ நீலி- எத்தனை துணிச்சல்?" சுகுணா கிரீச்சென்று அலறிவிட்டாள்.

"ஏன் இப்படி எல்லோரும் கத்தறீங்க- நான் என் மனசாக்ஷி யைத் தொட்டுப் பார்த்துத்தான்... இந்த முடிவுக்கு வந்தேன்."

"உன் அப்பன் சொத்திலே உனக்கும் ஒரு பங்குண்டு. உனக்கு கிடைக்கிற பணம் உன் புருஷனைச் சேரவேண்டியது நியாயம்... அதை ஏன் நீ வேண்டாம்னு ஒத்துகிட்டு வரணும்? அப்படி என்ன உன் பிறந்த வீட்டிலே உனக்கு சீர்- வரதட்சிணைன்னு என்ன கொடுத்தாங்க? எப்படி சொத்திலே பங்கு வேண்டாம்னு தாராளமா நீ விட்டுக் கொடுக்க முடிவு செஞ்சுட்டே?" ஆத்திரத்துடன் அதட்டிக் கேட்டான் வஸந்த். அவனது கண்களும் முகமும் போன போக்கைக் கண்டு சாம்பவி ஒரு கணம் நடுங்கியே போய் விட்டாள்.

உண்மையில் அவன், அவளை மணந்து கொண்ட வஸந்த் தானா? வரிசைப் பற்கள் மின்ன மோகனமாகச் சிரித்துப் பேசும் அவள் கணவனா இப்படி மாறிவிட்டான்? அவன் உள்ளே இப்படி ஒரு அசுரன் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்ற உண்மை இதுவரை அவளுக்கு ஏன் தெரியவில்லை? ஆச்சர்யம்!

வினாடியில் பல சிந்தித்து- அவள் தவித்துப் போனாள். ஆனால் துணிவை மட்டும் இழக்க மனம் இல்லை. அவர்கள் நான்கு பேர் ஏன் நாநூறு பேராக வந்து எதிர்த்தாலும் அவள் முடிவை மாற்றிக் கொள்வதில்லை என்ற ஒரு இரும்புப் பிடிவாதம்.

"ஒன்று கேட்கிறேன்- உங்கம்மா எதிரில். இப்போ சொல்லுங்கோ. இந்தப் பணத்தை நம்பியா நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டீங்க? என்னை எனக்காக மதிச்சுத்தானே மணக்க முன் வந்ததாகப் பேசினீங்க? எதையும் எதிர்பார்க்கலைன்னு சொன்னீங்களே, மறந்து போச்சா? என்னைப் பொறுத்த வரை நான் முடிவு பண்ணிவிட்டேன். இந்தச் சமயத்திலே எங்கம்மாகிட்ட போய் சொத்திலே எனக்கு ஒரு பங்குண்டுன்னு ஏதும் கேட்கப் போறதில்லை. அந்தப் பத்திரத்திலே சந்தோஷமா



கையெழுத்துப் போட்டுட்டு வந்துடப் போறேன்... அவ்வளவுதான்."

"அப்படியா? புருஷன் நான் சொல்றதை நீ கேட்க மாட்டியா? அத்தனை திமிரா உனக்கு...?" சினம் தாங்காது சீறினான் வஸந்த்.

"புருஷனுக்கு மரியாதை கொடுத்து, அவன் சொல்கிற படி உங்கம்மாகிட்டேயிருந்து உன் பங்கு பன்னிரண்டாயிரத்தை ஒரு வாரத்துக்குள்ளே வாங்கிக்கொண்டு வந்தா சரி- இல்லாட்டா நீ உன் பிறந்த வீட்டிலேயே போய் இரு. உன் அம்மாவைத் தாங்கிக்கிட்டு வாழாவெட்டியா கிட, எனக்கு அக்கறை இல்லை. இப்படிக் கையைச் சொடுக்கினா, என் மகனுக்கு பொண்ணு கொடுக்க மனுஷங்க க்யூ வரிசையிலே வந்து நிப்பாங்க. அதையும் மறந்துடாதே. என்னை விரோதிச்சுக் கொண்டியோ உனக்கு வாழ்வு கிடையாது- பத்திரம்..." காளிபோல் சுகுணா கத்தினாள்.

எதிர்வீட்டு ஜன்னலிலிருந்து யாரோ எட்டிப் பார்ப்பதை சாம்பவி கவனித்தாள். பக்கத்து வீட்டிலும் இரண்டு தலைகள் வாயிற்படியருகே தெரிந்தன.

நடுத்தெருவில் நிறுத்தி வைத்து அவளது ஆடைகளை யாரோ முரட்டுத்தனமாகக் கிழிப்பது போன்ற அவமான உணர்வில் அவள் நெஞ்சு கொதித்தது. அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

"உங்களுக்கு நான் வேணுமா? பணம் வேணுமா?..." அடக்க மாட்டாத ஆத்திரத்துடன் கேட்டாள்.

"பணமும் வேணும்- நீயும் வேணும்..."

"பணம் இல்லாட்டா நான் உங்களுக்குத் தேவையில்லையா?" குமுறிக் கொண்டு வந்த துயரத்தில் அவளால் தொடர்ந்து பேச முடியவில்லை.

"அப்படித்தான் வச்சுக்கோ. பணம் இல்லாட்டி நீ என் மகனுக்குத் தேவையில்லை..." எரிந்து விழுந்து சுகுணா தன் மகன் பக்கம் ஆத்திரத்துடன் திரும்பினாள்.

ஏண்டா உன் வாயில் கொழுக்கட்டையா? அவள் மனசிலே படறாப்பல அடிச்சுப் பேசு. அப்பத்தான் அவளுக்கு உரைக்கும்..." உரத்த குரலில் கத்திவிட்டு... முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

வஸந்த் அவள் அருகே வேகமாக வந்தான். "இதோ பார், முடிவா சொல்றேன் கேட்டுக்கோ. பணம் எனக்கு இப்போ அவசியமா தேவைப்படறது. மனசு வச்சா நீ உங்கம்மாகிட்டேயிருந்து கொண்டு வரமுடியும்- பிடிவாதம் செஞ்சே, நீ எனக்கு தேவைப்படாம போயிடுவே. நல்லா யோசிச்சு முடிவுக்கு வா- ஒரு வாரம் வேணுமானாலும் அவகாசம் கொடுக்கிறேன். உங்கம்மாவோட போய் தங்கியிரு-பேசு-. காரியத்தை முடி. பணத்தோட வந்தா நீ இங்கே வரலாம். இல்லாட்டா உங்கம்மா வோடயே இருக்கலாம்..."

"பயமுறுத்துகிறீர்களா? துயரத்தைக் கட்டுப்படுத்த முடியாது சாம்பவி விம்மிவிட்டாள்.

"பயமுறுத்தலை. உண்மையைச் சொன்னேன். புருஷனுடைய சிரமத்தைப் புரிஞ்சுகொண்டு சொன்னபடி கேட்காதவ எப்படி, ஒரு நல்ல மனைவியா வாழமுடியும்?"

"பணம் இல்லேன்னதும்- பெண்டாட்டியை உதறி விடுகிறவன் எப்படி ஒரு நல்ல கணவனாக காலம் முச்சூடும் ஒரு பெண்ணோடு வாழ முடியும்." பதிலுக்கு அவளும் கேட்டு விட்டாள்.

பொங்கிக் கொண்டு வந்த ஆத்திரத்தில் வஸந்த் ஆடிப் போனான். கையை ஓங்கிக்கொண்டு அவள் அருகே பாய்ந்த போது, சாம்பவி ஒரே துள்ளலில் அப்பால் விலகி நின்று கொண்டாள். அவள் உடல் வெட வெட வென்று நடுங்கியது.



வஸந்த் அடிக்கப் புறப்பட்டு விட்டானே? என்ன மனுஷன்?

பயங்கரமானதொரு உணர்வில் தள்ளாடிப் போனாள். ஆனாலும் துணிவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"இதென்ன கெட்ட வழக்கம்... கையைக் கீழே போடுங்க. உங்களுக்கு வெட்கமில்லை?" தாங்கொணா சினத்துடன் அதட்டிக் கேட்டாள்.

"வெறுங்கையோட மருமகளா வந்ததுக்கு நீ தான் வெட்கப்பட வேண்டியவள். அவன் ஆண் சிங்கம். எதுக்கு அவமானப்படணும். ரொம்ப பேச்சு வேண்டாம். உன் துணிமணிகளை எடுத்துண்டு கிளம்பு. அவன் தான் முடிவா சொல்லிட்டானே? உன் அம்மா வீட்டிலிருந்து ஒரு வாரம் கழிச்சி திரும்பி வரச்சே பணத்தோட வா. இல்லாட்டா இந்த வீட்டுக்குள்ள காலை வைக்க வேண்டாம். மாமியார் கடுமையாகப் பேசினாள்.

"ஆமாம். அதுதான் என் முடிவு" - தாயுடன் அவன் சேர்ந்து கொண்டான். நாத்தனார் இருவரும் இதை ரசித்துக் கொண்டு வேடிக்கை பார்ப்பதைக் கண்டு சாம்பவி வெட்கிப் போனாள். ஓவென்று கதறி அழ வேண்டும் போன்ற துக்கம் நெஞ்சு வரை அடைத்துக் கொண்டு நின்றது. தாங்க முடியாது வேகமாக உள்ளே சென்றாள். கண்களிலிருந்து கன்னங்கள் மீது தாரையாக வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அவசரமாகத் தன் சாமான்களை அள்ளிப் பெட்டிக்குள் போட்டு மூடினாள். உயிரே உடலினின்று போய்விட்டது போன்ற ஒரு பலவீன உணர்வில் தள்ளாடிக் கொண்டு பெட்டியைச் சுமக்க மாட்டாது, தடுமாறிக் கொண்டு வெளியே வந்தாள். பெட்டியின் கனம் தோள் பட்டையை இறுக்கியது. உள்ளத்திலே உருவாகி விரிந்து கொண்டு சென்ற வேதனை அதைவிடப் பன்மடங்காக அவள் இதயத்தை அமுக்கியது.

"நான் வரேன்-" பொதுவாக அவள் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டாள்."

"பணம் ஞாபகம் இருக்கட்டும்." சுகுணா மீண்டும் நினைவூட்டினாள்.

"உன் இஷ்டப்படி பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு வெறுங் கையோட வந்தா, உனக்கும் எனக்கும் உள்ள உறவு அத்தோட அறுந்துபோயிடும். எச்சரிக்கிறேன். நீ இல்லாட்டா, என் வாழ்க்கையை நான் வேறே மாத்தி அமைச்சிக்க முடியும். அதை மறக்காதே- ஏன்னா நான் ஒரு ஆண் பிள்ளை. ஆனால் உன் விஷயம் வேறே. என்ன தான் உலகம் முன்னேறி விட்டிருந்தாலும் நீ ஒரு பெண் என்பதை அது மறப்பதில்லை. பச்சையாகச் சொல்லப் போனால் நீ இப்போது ஒரு எச்சில் பண்டம்."

ஏளனமாக வஸந்த் உறுமினான்.

காதும் மூக்கும் ஜிவ்வென்று எரிய நெஞ்சு பதைபதைக்க, அவள் அவனை உறுத்துப் பார்த்தாள். தாங்க முடியாத கோபத்தில் அவளுக்கு சிரிப்புக்கூட வந்துவிட்டது.

"நீங்கள் மட்டும் என்ன? நீங்களும் இப்போ ஒரு எச்சில் பண்டம் மறக்காதீங்க- கற்பு என்பது இருவருக்கும் பொது. பாரதியாரைப் படிச்சது மறந்து போச்சா?" உரத்து சிரித்தாள். சட்டென்று திரும்பி விடுவிடுவென்று பெட்டியுடன் வெளியே நடந்தாள். கூடப் போகத் திரும்பிய மகன் தோள் பட்டையைத் தாயார் கைகளால் அழுத்தி நிறுத்தினாள்.

"போகட்டும் ஆணவக்காரி -என்ன செய்கிறாள்னு பார்ப் போம்!" அடிக்குரலில் உறுமினாள்.

சிறிது தூரம் நடந்த சாம்பவி திரும்பிப் பார்த்தாள்- வஸந்த் அவளை பஸ்ஸில் ஏற்றிவிட பஸ் நிலையம் வரைகூட வரவில்லை. பளுவான பெட்டியை அவள் தூக்கிக் கொண்டு



போவதைப் பார்த்துக் கொண்டு தாயின் பின்னால் நின்று கொண்டிருந்தான்.

"சே! இவனும் ஒரு ஆண் பிள்ளையா?" குமுறிக் கொந் தளித்தது அவள் உள்ளம்.

மல்லிகாவின் வீட்டவர்கள் எல்லோரும் அன்று காலை ஒரு கல்யாணத்திற்குப் போயிருந்தார்கள். அவள் மட்டுமே தான் வீட்டில் இருந்தாள். அண்ணாமலைபுரத்திலே ஒரு மாடிப் பகுதிதான் அவள் வீடு. அழைப்பு மணியின் ஓசையைக் கேட்டு கதவைத் திறந்தவள் திடுக்கிட்டுப் போனாள். என்ன சாம்பவி? என்ன நடந்தது? மல்லிகா பதற்றத்துடன் கேட்டு முடிக்குமுன்- பெட்டியைக் கீழே போட்டுவிட்டு ஒரே தாவலில் தோழியை இறுகக் கட்டிக்கொண்டு 'கோ' வென்று கதறி விட்டாள். பலவும் பேசி சமாதானப்படுத்தி விஷயத்தைத் தெரிந்து கொண்டபோது அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி? அன்று முழுவதும் அவள் மல்லிகாவுடனேயே அவர்கள் வீட்டில் தங்கியிருந்தாள். இருட்டும் சமயம் ஒரு டாக்ஸியி லிருந்து கையில் ஒரு பெட்டியுடன் இறங்கிய மகளைக் கண்ட காமாக்ஷி திடுக்கிட்டுப் போனாள். "பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு-அப்படியே உங்களோடு ஒரு வாரம் தங்கிட்டுப் போக வந்திருக்கேன் அம்மா" சொல்லிக் கொண்டே சாம்பவி உள்ளே வந்தாள். அவள் கையிலிருந்த பெட்டியை தம்பி ஓடிச்சென்று வாங்கி உள்ளே கொண்டு வைத்தான்.

ஒருவார காலம் அவள் அங்கே தங்கியிருந்தாள். காமாக்ஷி யும் தோண்டித் துருவி எதுவும் கேட்கவில்லை. சாம்பவியும் வாளா இருந்துவிட்டாள். தினமும் காலையில் வழக்கம் போல் காமாக்ஷி வேலைக்குப் புறப்பட்டுப் போனாள். சாம்பவி யும் வெளியே போய்வந்தாள். ஆனால் ஒரு வாரத்திற்கு ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டிருந்தாள்.

வஸந்த் அவளுக்கு வைத்திருந்த கெடுமுடிந்து விட்டது. மறுநாள் அவள் புறப்பட வேண்டிய தினம்.

அன்று இரவு, சாப்பாட்டிற்குப் பின் அம்மா அவளது அறையில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவள் வெகு நேரம் அழுது விட்டிருந்தாள் போல் முகம் சிறிது ஊதிக் காணப்பட்டது.

"உனக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன் சாம்பவி! நீ பெரிய மனசு பண்ணி பத்திரத்திலே கையெழுத்துப் போட்டுக் கொடுத்திட்டே, நாகநாதன் ஸார் இனி மேலே வேகமா காரியத்தை முடிச்சுக் கொடுப்பார். வீட்டை வாங்கப் போகிற வன் பணத்தோட ரெடியாக இருக்கானாம். அடுத்த வாரம் ரிஜிஸ்டர் பண்ண ஏற்பாடாகி இருக்கு, அதுக்குப் பிறகு ஒரு மாதம் நான் இங்கே இருக்கலாம்னு ஒத்துண்டு இருக் கான்... அப்புறம் வேறே எங்கேயாவது ஒரு சின்ன இடம் பார்த்துண்டு..." அதற்கு மேல் சொல்ல முடியாமல் உணர்ச்சி வசத்தில் அவள் தடுமாறினாள்.

சாம்பவி எழுந்து வந்து அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். "வருத்தப்படாதீங்க அம்மா, நடக்கிற தெல்லாம் நடந்துதானே தீரும்." சமாதானப்படுத்த முயன்றாள்.

"இந்த வீடு இப்போ இடிபாடுகள் நிறைஞ்ச ஒரு பாழடஞ்ச பங்களா- ஆனால் இதனுடைய நினைவுகள் என் நெஞ்சிலே பாழடையலை; பசுமையாக இருக்கு. முதல் முதல்லே கல்யாணம் ஆன புதுசிலே உங்கப்பாவோட நான் இங்கே வந்த முதல் நாள், என் மனசை விட்டு அழியலை. வீட்டையும் தோட்டத்தையும் பார்த்து நான் எப்படி பிரமிச்சுப் போனேன் தெரியுமா! இன்னிக்கு நடந்தது போல அந்தக் காட்சி மனசிலே தத்ரூபமா நிக்கறது. இந்த வீட்டிலேதான் நீங்களெல்லாம் பிறந்து வளர்ந்தீங்க. உன் அப்பா கொடுத்து வச்சவர். சொந்த



வீட்டிலிருந்து கிளம்பிப் போயிவிட்டார். நான்தான்..." அவள் கண்கள் கலங்கின.

"அம்மா தைர்யமா இருங்கோ- ஒரு வீட்டு மேலே இவ்வளவு பாசமா?...

"இல்லை இதிலே நான் வாழ்ந்த நாட்களின் நினைவால் ஏற்பட்ட ஒரு உணர்ச்சிக் கொத்தளிப்பு. அவ்வளவு தான் சாம்பவி! மறுபடியும் சொல்றேன். நீ செய்த காரியத்துக்கு ரொம்ப நன்றி. நீ மட்டும் கையெழுத்துப் போட மறுத்திருந்தால் நான் ரொம்ப கஷ்டப்பட்டிருப்பேன் முன்போல் எனக்கு இப்போ வேலை செய்ய முடியலை. வயிற்றுவலி அடிக்கடி வந்து தொந்தரவு கொடுக்கிறது. இந்த வருஷக் கடைசியோட வேலையை விட்டுவிடப் போறேன். ஆபரேஷன் பண்ணிண்டா சரியாப் போயிடும்னு டாக்டர் சொல்றார். அதுக்குப் பணம் தேவை. குழந்தை கௌசிக் முன்னுக்கு வரும் வரை இந்த உசிரைப் பிடிச்சுக் கொண்டு வாழ நான் முயற்சிக்கிறேன். நானும் இல்லாட்டா அவன் அனாதையா போயிடுவானேன்னு கவலை" தழதழத்தது அவள் குரல்.

நெஞ்சுருகிப் போனாள் சாம்பவி. மற்ற ரெண்டு பெண்களும் செய்திருக்கிற காரியத்தை நானும் செய்தேன். அதுக்குப் போய் நன்றின்னு பெரிய வார்த்தைகள் ஏம்மா சொல்றீங்க" தாயின் தோள்மீது முகத்தைப் பதித்துக் கொண்டு பரிவுடன் கேட்டாள்.

காமாக்ஷி மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து பீரோவைத் திறந்தாள். மேல் தட்டிலிருந்த ஒரு சிறு பெட்டிக்குள் கையை விட்டுத் துழாவி ஒரு பொட்டலத்தை எடுத்துக்கொண்டு மகள் அருகே வந்தாள்.

"சாம்பவி! கடைசிப் பெண்ணாகப் பிறந்துவிட்ட உனக்கு நான் பிறந்த வீட்டிலிருந்து ஒரு துரும்பைக் கூடஇதுவரை கொடுக்கலை. அதைப்பத்தி நினைச்சு நான் ரொம்ப வேதனைப்

பட்றேன். என்கிட்ட உனக்குக் கொடுக்க இப்போ ஏதுமே இல்லை...”

“ஏம்மா! நளினியின் அட்டிகையை எனக்கே கொடுத்து விட்டீங்களே அது ஒண்ணு போதுமே...”

“உன் புருஷன் கேட்ட பங்குத் தொகையைக் கொடுக்க முடியலையேன்னு எனக்கு வெட்கமாகவும் துக்கமாகவும் இருந்தது. அதனாலே ஒரு முடிவுக்கு வந்தேன். நீ மறுக்காமல் ஏத்துக்கணும். இந்த பொட்டலத்திலே என் வைர மூக்குத்தி இருக்கு- இனி அதை நான் போட்டுக்க மாட்டேன். உங்கப்பா ஹாஸ்பிட்டலிலே படுத்திருந்தப்போ, அவர் பிழைச்சா இதை காமாக்ஷி அம்மனுக்கு காணிக்கையா செலுத்திடலாம்னு ஒரு எண்ணம் இருந்தது. அவர்தான் போய்விட்டாரே. இப்போ இதை என் பரிசா உனக்குக் கொடுக்கிறேன். இது ப்ளூஜாகர் கல் இன்னிக்கு விக்கிற விலைக்கு கடையில் கொடுத்தா குறைஞ்சது எட்டாயிரமாவது பெறும். உன் புருஷனிடம் சொல். எடுத்துக்கோம்மா! வேண்டாம்னு சொல்லாதே. என் மனசு ரொம்ப வேதனைப்படும்!” வற்புறுத்தலாக பொட்ட லத்தை மகள் கையில் வைத்து அழுத்தினாள்.

“அம்மா” என்று விக்கிய சாம்பவி, தாயை இறுக்கமாகக் கட்டிக் கொண்டாள். அவளது கண்கள் குளமாகின. காமாக்ஷி யும் பொலபொல வென்று கண்ணீரைக் கொட்டினாள்.

சில நாட்கள் சென்றன. அன்று காலை அந்த பாலர் இல்லத்தில் அவளுக்காக கொடுக்கப்பட்டிருந்த அறைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டாள். அன்று அவளுக்கு விடுமுறை நாள். அவசரமின்றி நாளை அமைதியாக, நிதானமாகக் கழிக்க லாம். ஆமாம்! வாழ்க்கையிலே அவள் அந்த முடிவை எடுத்த பின்புதானே பெரும் அமைதி அவளை நாடி வந்து விட்டதே! கட்டடத்தின் வெளியே சாலையில் தபால் பெட்டி யிருந்ததை அவள் வந்த முதல் நாளே கவனித்து விட்டிருந்தாள்.



மேஜை இழுப்பறைக்குள்ளிருந்து அந்தக் கடிதங்களை எடுத்து மற்றும் ஒரு முறை தனக்குள் வாசித்துப் பார்த்தாள். ஒன்று அவள் அம்மாவுக்கு எழுதிய கடிதம்.

“அன்புள்ள அம்மாவுக்கு,

இந்தக் கடிதத்தை நான் திருச்சி மாவட்டத்து வடுகன் பட்டியிலிருந்து எழுதுகிறேன் என்றால் ஆச்சரியப் படுவீர்கள். இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் உங்கள் சிநேகிதி தர்மாம்பாள் உதவியுடன் இங்கே அமைந்திருக்கும் பாலர் இல்லம் என்னும் உடல் ஊனமுற்ற குழந்தைகளைப் பாதுகாக்கும் நிறுவனத்தில் கணக்கராக வேலைக்கமர்ந்திருக்கிறேன். மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம். தங்க இடம்- சாப்பாடு இத்யாதி வசதிகளைத் தந்துள்ளார்கள். கௌசிக்கின் படிப்பு முடியும் வரை மாதம் என் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை நான் அனுப்பி வைக்க முடிவு செய்துள் ளேன். மறுக்காது ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தாங்கள் அன்போடு கொடுத்த வைர மூக்குத்தியைக் கையில் வைத்துக் கொண்டு வெகுநேரம் அழகு பார்த் தேன். விடுமுறை தினங்களில் ஸ்நானம் செய்த கூந்த லைத் தளர முடித்துக் கொண்டு-மஞ்சள் பூசிய முகத்தில் குங்குமம் துலங்க- மூக்கிலே இந்த வைரமூக்குத்தி ஒளிவீச, தலை நிறையப் பூவுடன் வருவீர்களே-தேவி காமாக்ஷியைப் போல... அந்த நினைவு வந்ததும் நான் மெய் சிலிர்த்துப் போனேன்.

மனித காமாக்ஷியான என் தாய் போட்டுக் கொண் டிருந்த இந்த அழகாக மூக்குத்தியை லோகமாதா காமாக்ஷிதான் அணிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. நானும் மல்லிகாவும் வெள்ளிக் கிழமையன்று மாங்காடு போயிருந்தோம். 'வயிற்றுவலி

குணமாகி நீங்கள் வெகுகாலம் எங்களுக்கெல்லாம் அன்புத் தாயாக ஆறுதல் சொல்ல வாழ வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டு என் காணிக்கையாக அவள் உண்டியில் போட்டு விட்டேன்.

நான் இப்போது என் கணவனுடன் வாழவில்லை. இனி வாழப்போவதுமில்லை. நிரந்தரமாகப் பிரிந்து விட்டேன். வருத்தப் படாதீர்கள். என் வாழ்க்கையில் குறுக்கிட்டு எதுவும் செய்ய முயற்சிக்காதீர்கள். தீவிரமான சிந்தனைக்குப் பின் நான் எடுத்துக்கொண்ட உறுதியான முடிவு இது. கடைசியாக -ஒன்று சொல்ல விரும்பு கிறேன். என் அவசர முடிவினால் உங்கள் மனதை நோகச் செய்ததுடன், உங்களது சௌபாக்கியங்களைப் பறித்துவிட்ட ஒரு எமனாக-பெண் என்ற உருவில் வந்தேன். அதைப் பெரிதாக நினைக்காது, மறந்து என்னை மன்னித்துவிட்ட உங்களுக்குத் தான் எத்தனை பெரிய மனம்! அந்த வைர மூக்குத்தியை எனக்குப் பரிசாகக் கொடுத்து வாய் நிறைய வாழ்த்தினீர்கள்.

அம்மா ஏழேழு ஜென்மத்திற்கும் உங்கள் மகளாகவே பிறந்து அம்மா என்று வாய் குளிர கூப்பிட்டு- நான் உங்களுக்கிழைத்த தீங்கிற்கெல்லாம் ஈடு செய்துவிட வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொள்கிறேன், ஆசீர்வதியுங்கள்.

அன்புள்ள,
சம்பா குட்டி."

இரண்டாவது கடிதத்தை எடுத்து பிரித்துப் படித்தாள்.

"வஸந்த் அவர்களுக்கு,

நீங்கள் என்னிடமிருந்து கடிதத்தையாவது எதிர்பார்ப்பீர்கள் என்ற நம்பிக்கையில் தான் எழுது கிறேன். ஆசை அறுபது நாட்கள் என்பார்கள். எத்தனை



பெரிய உண்மை! நமக்குத் திருமணமாகி நேற்றோடு அறுபது நாட்கள் ஆகின்றன! ஆயிரம் காலம் இணைந்து நிற்க வேண்டிய பந்தம் ஒரேயடியாக அஸ்தமித்து விட்டதே ஆச்சர்யம்! இல்லையா?

நீங்கள் உத்தரவிட்டபடி பணத்துடன் வர முடியாத தால் உங்கள் வீட்டில் காலை வைக்க மனம் இன்றி- பிரிந்து வேறு வாழ்க்கையைத் தேடிக்கொண்டு விட்டேன்.

உனக்கு அத்தனை துணிச்சலா? என்று வியப்பாக இருக்கிறதா? என் வீட்டையும் -உறவினர்களையும்- சம்பிரதாயங்களையும் உதறி விட்டு உங்களை மணந்து கொள்ள எனக்கு எத்தனை துணிச்சல் இருந்தது? அதே துணிச்சலில் தான் இப்போது உங்களை விட்டுப் பிரிந்து வேறு வாழ்க்கை அமைத்துக்கொள்ள புறப்பட்டு விட்டேன். இது என் முடிவான தீர்மானம். இதை யாரும் அசைக்க முடியாது.

காதல் என்ற மேல் பூச்சு கரைந்து உங்கள் உண்மை உருவம் தெரிந்ததும் என்னால் அந்த அதிர்ச்சியை ஏற்கவே முடியவில்லை. தொடர்ந்து உங்களுடன் வாழ என் மனசாட்சி இடம் கொடுக்க மறுத்தது. என்னை எனக்காக மதிக்கிறவன்-யாராக இருந்தாலும் மணந்து கொண்டு வாழ்வேன் என்ற கொள்கை உடைய என்னால்- என் பணத்தை மட்டுமே விரும்புகிறவருடன் போலியாக, பிறருக்குப் பயந்து வாழ இயலாது- அதனால் பிரிந்து போய்விட்டேன்.

இந்த கசப்பான அனுபவம் என் கண்களைத் திறந்தன.

வரதட்சணை, சீர் என்று கல்யாணச் சந்தையில் பெண்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு கலப்புத் திருமணம் ஒன்றுதான் முடிவு என்பது தவறு.

மனிதன்- பெண் என்பவளைப்பற்றி கொண்டுள்ள அடிப்படை எண்ணங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்.

அவன், தன் மனைவி- தன் குழந்தைகளின் தாய்- தன் வாழ்க்கைத் துணை என்ற நோக்கோடு - திருமணம் என்பது இரு ஆன்மாக்களின் சங்கமிப்பு- பணம்- பொருள்- ஜாதி இவைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு உன்னதமான இணைப்பு- என்றவரை அவன் எண்ணங்கள் மாற வேண்டும். அப்பொழுது தான் பெண் என்பவள் பூரண சுதந்திரம் பெற்றவள் ஆகிறாள். அதுவரை அவள் படித்த- முன்னேறிய- நாகரிக கொத்தடிமை.

இந்த அடிமைத்தளையினின்று நான் உதறிக்கொண்டு சுதந்திரமாக வாழ விரும்புகிறேன்- விலகி விட்டேன். என் பிற்காலமா? காலம் சொல்லும். உங்களுக்கு ஏன் இனி என் கவலை?

சாம்பவி"

இரண்டு கடிதங்களையும் உறையிலிட்டு தபாலில் சேர்க்க எடுத்துக் கொண்டு- நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையு மாக அவள் வெளியே சாலையில் நடந்தாள்.